பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 22 வியாழக்கிழமை (07.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 223



09

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதில் சிக்கல்





14

சீனாவுக்கு நன்றியுடையவராக மஹிந்த...?




25

வந்தது சிக்கல் சங்கக்காரவுக்கு

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.8 இன் வினாத்தாள்-II இன்றைய உதயனின் 16,17ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.



## இதுதான் மீள்குடியேற்றமா?

### கூட்டமைப்பு எம்.பிக்களிடம் வடமராட்சி கிழக்கு மக்கள் குமுறல்

யாழ்ப்பாணம், ஜூலை 07

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் எமக்குத் தரப்பட்ட தறப்பாளுடன் எந்தவிதமான அறிவித்தலுமின்றி திடீரென வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு வெற்றிலைக்கேணி பாடசாலையில் திறந்தவெளியில் இறக்கப்பட்டோம். இரவு முழுவதும் பெய்த கன மழையால் நனைந்து பிள்ளைகளைப் பாதுகாக்க எங்களுடைய பணத்தைக் கொடுத்து திரும்பவும் வந்து வீதியோரங்களில் கூடாரங்களை அமைத்து வருகின்றோம். எங்களின் அடிப்படை வசதிகளையாவது பெற்றுத் தாருங்கள்.

- இப்படி வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விசாரணைக்குள் இலங்கை வருட இறுதிக்குள் நிச்சயம் சிக்கும்

### 'அபாயமணி' அடிக்கிறார் மங்கள



கொழும்பு, ஜூலை 07

இலங்கையின் யுத்தக்குற்றம் தொடர்பான சனல் - 4 வீடியோ காட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால் இந்த வருட இறுதிக்குள் இலங்கை சர்வ தேச விசாரணைக்குள் சிக்குவது நிச்சயம். இதனைத் தவிர்க்க வேண்டுமென்றால் இந்த வீடியோ காட்சி பொய்யென நிருபித்து சனல் -4 க்கு எதிராக இலங்கை அரசு பிரிட்டிஷ் நீதிமன்றில் இந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அந்தரங்கமாக நடந்த மூன் - ரணில் சந்திப்பு

### என்ன பேசினார்கள் அவர்கள்?

கொழும்பு, ஜூலை 07

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என இன்னர்சிட்டி பிரஸ் தெரிவித்துள்ளது.

சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்றது. இலங்கையில் யுத்தத்தின் பின்னரான நிலைமை குறித்தே இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவினர் நேற்றுத் திடீரென யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 7

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அதிகாரிகள் மூவர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அழைக்கப்பட்ட சாட்சிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விசாரணைகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த வருடம் வடக்கில் நடைபெற்றன. இதன்பின்னர் மீண்டும் கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நேர்மையான தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகம்

### சுரேஷ் எம்.பி. முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 07

ஜனநாயகத்தின் மீதிருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் அறவே இல்லாமல் போய் விட்டது. இராணுவத்தினரின் கெடுபிடிகளும் அரச இயந்திரங்களின் தீவிரமான செயற்பாடுகளாலும் அமைதியும் நேர்மையுமான ஒரு தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகத்தை வலுப்படுத்தி உள்ளது எனக் குற்றம் சாட்டுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே சுரேஷ் எம்.பி. இப்படிக் (27 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது நடவடிக்கையா? வேண்டாமா? ஆஸ்திரேலிய வானொலி கருத்துக் கணிப்பு

மெல்போர்ன், ஜூலை 07

'இலங்கையின் கொலைக்களம்' வீடியோ காட்டிய உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கை மீது ஆஸ்திரேலிய அரசு மனித உரிமை மீறலுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமா? இல்லையா? என்று ஆஸ்திரேலிய வானொலிச் சேவை ஒன்று கருத்துக் கணிப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரச தொலைக்காட்சியான ஏ.பி.சி. நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு '4 கோர்னர்' என்ற நிகழ்ச்சியில் 'இலங்கையின் கொலைக்களம்' என்ற விவரணத் திரைப்படத்தை ஒளிபரப்பியது. இதை அடுத்து ஆஸ்திரேலிய '3 ஏ.டபிள்யூ' என்ற வானொலிச் சேவை ஆஸ்திரேலியா முழுவதும் இந்தக் கருத்துக் கணிப்பை மேற்கொண்டுள்ளது.

'இலங்கையின் கொலைக்களம்' என்ற விவரணத் திரைப்படம் இலங்கை (27 ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் வர்த்தகத்தில் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு

### நாடாளுமன்றில் பிரதமர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் அரசியல்வாதிகள் சிலரும் தொடர்புபட்டுள்ளனர் என்று தெரிவித்த பிரதமர் டி.எம்.ஜயரத்ன, போதைப்பொருள் பாவனை காரணமாகவே பாலியல் துஷ்பிரயோக குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (27 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்தை முடுக்கிவிட பஸில் தலைமையில் வருகிறது குழு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது. இவருடன் அமைச்சர்கள் பலரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ். வரும் அமைச்சர்கள் இங்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடவுள்ளனர். எனத் தெரியவருகிறது.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண ஆளுநரின் இல்லத்தில் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்களுடனும் பஸில் ராஜபக்ஷ (27 ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த தமிழ் பேராசான் சிவத்தம்பி நேற்றுக் கொழும்பில் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கையின் மூத்த தமிழ் பேராசான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி நேற்று மாலை கொழும்பு தெஹிவளையில் உள்ள தமது இல்லத்தில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 84. அவரது பிறப்பிடம் கரவெட்டியாகும்.

இவர் வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றியவர்.

இவர் சென்னை பல்கலைக்கழகம், (27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளி, முல்லை மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் ஏனைய மாவட்டங்களில் தெளிவான காலநிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 06, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6884.06
மிலங்கா(MPI) 6467.81
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.02Bn
பங்குகளின் அளவு(No.) 53.56Mn
வியாபாரம்(No.) 17600
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
எஸ் எம் பி லீசிங் 0.50
இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் 475.00
றோயல் பாம் பீச் 73.00
ஒன்னலி 142.40
கொழும்பு இன்வெஸ்ர்மென்ர் 373.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சதோசா மோட்டர்ஸ் 252.50
ஈஸ்ரேன் மேக்கன்ர் 1100.00
ராணிஸ் ஏசியா 94.90
றேனுகா அக்கிறி 5.80
கொன்பிபி ஹொட்டல் 270.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# ஒலிம்பிக் சாதனையாளன் துஷ்யந்தனுக்கு யாழ். நகரில் நேற்று அமோக வரவேற்பு



யாழ்ப்பாணம், ஜூலை 7

கிறீஸின் தலைநகர் ஏதென்ஸில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் செல்வன் சிவராசா துஷ்யந்தனுக்கு நேற்று யாழ். நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இலங்கைக்கும் தமிழினத்துக்கும் பெருமை சேர்த்த துஷ்யந்தனைப் பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு வரவேற்றனர்.

இவர் 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் இலங்கை அணி சார்பாகப் பங்குகொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

கொழும்பில் இருந்து யாழ்பாணம் திரும்பிய துஷ்யந்தன் நேற்று நல்லூரில் இருந்து சிறப்பு ஊர்தியில் ''பாண்ட்'' வாத்திய அணி வகுப்புடன் வரவேற்கப்பட்டார். மக்கள் வீதியில் இருபுறமும் திரண்டு நின்று சாதனை வீரனை வரவேற்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி. அண்ணாத்துரை, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களான எஸ். சிவலிங்கராசா, அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பின் கௌரவிப்பு நிகழ்வு சிவபூமி பாடசாலையில் இடம்பெற்றது. இங்கு மாணவனுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி வி. மகாலிங்கம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் சி. அண்ணாத்துரை ஆகியோர் உட்பட பலர் வழங்கினர்.

இந்த வைபவத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணப்வன் துஷ்யந்தனுக்கு வெற்றிக் கேடயம் வழங்கி கௌரவித்தார். (த-319)

# ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள்களை திருத்தும் பணியையும் பகிஷ்கரிப்போம்

## பல்கலைக்கழக ஆசிரியர்கள் அரசுக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை 7

தமது சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை பேச்சு நடத்தியுள்ளோம். எல்லாம் வெறும் பேச்சளவில் இருக்கின்றனவே தவிர உத்தியோகபூர்வமாக எதுவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே எமது போராட்டம் தொடரும். இது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைவரை தொடருமானால் இந்தப் பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதையும் நாம் முற்றாகப் பகிஷ்கரிப்போம்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

அதில் எமது சம்பள அதிகரிப்பு தொடர்பாக 2008ஆம் ஆண்டில் எடுத்துக் கூறியபோது அதனை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டபடி தமது சம்பளம் மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

2010ஆம் ஆண்டு தொழிற்சங்கப் போராட்டத்தினை முன்னெடுக்கப் பல்கலைகழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்தபோதும் அரசின் உறுதிமொழி காரணமாக பின்னர் அது கைவிடப்பட்டது. அந்த உறுதிமொழி இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. இதனால் துறைத் தலைவர்கள், மாணவர் ஆலோசகர், மாணவ விடுதிக் காப்பாளர் எனப் பலரும் தமது தன்னார்வப் பணிகளை கைவிட்டுள்ளனர்.

எமது தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பாகப் பொது மக்களுக்குத் தெளிவு படுத்தும் கருத்தரங்குகள் தென்னிலங்கையில் நான்கு தடவைகள் நடத்தப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக யாழ். நகரில் நாளை அது நடை பெறவுள்ளது - என்றார். (த-4)

# பல்கலைக்கழக ஆசிரியர் நாளை யாழில் அமைதிப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 7

பல்கலைகழக ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் தொழிற்சங்க போராட்டம் குறித்து பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் யாழ். நகரில் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைதிப் பேரணியும் பொதுக் கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறுகிறது.

இதில் கலந்துகொள்ளவும், உரையாற்றவும் எனத் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் - அனைத்துப் பல்கலைகழக ஆசிரியர்களின் அமைதிப் பேரணி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்தப் பேரணி யாழ்ப்பாணம் ரயில் நிலைய முன்றலில் ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி ஊடாகப் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும். அங்கு கருத்தரங்கு மாலை 6.30 மணி வரை இடம் பெறும் - என்றனர். (த-4)

# யாழ். நகரில் நாளை சர்வமதக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வமதக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''இளைஞர்களுக்கான ஆன்மீக சிந்தனை'' எனும் தலைப்பில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்டு ஆசியுரைகள் வழங்கவுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் த. ஈஸ்வரராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. பற்குணராசா, தேசிய சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன், பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சகோதரி ராதே ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். (ஓ-313)

# நிகழ்வுகள்

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பின் ஏற்பாட்டில் வடமராட்சி வலய பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ற-190,319)

## விழிப்புணர்வு நிகழ்வு

கொழும்புத்துறை, ஜூலை 7

மீள் குடியமர்ந்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களிடையே மிதிவெடி மற்றும் வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் யாழ். குடாநாட்டில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

[illegible] சர்வோதய மிதிவெடி அபாயக் கல்வித்திட்டப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெறும் விழிப்புணர்வு நாடக ஆற்றுகையான 'எமன்' என்னும் நாடகத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு சில்லாலை வடக்கு, சாந்தை கிராமத்தில் சர்வோதய மிதிவெடி அபாயக் கல்வித்திட்டப் பிரிவின் இணைப்பாளர் யோ.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு அவதானிப்பாளர்களாக யுனிசெவ் அமைப்பின் கொழும்புப் பிராந்திய தொழில்நுட்ப ஆலோசகர் செபஸ்ரியன் ஐசாக், யுனிசெவ் யாழ். பிரிவுப் பிரதிநிதியாக கே.வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை விவகாரங்கள் தொடர்பான

# தமிழக மக்களின் உணர்வுகள் குறித்து இந்தியா உணர்ச்சியின்றி இருக்க முடியாது

## நிருபாமா ராவ் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 7

இலங்கை விவகாரங்கள் தொடர்பான தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகள் குறித்து இந்திய மத்திய அரசு உணர்ச்சியற்றிருக்க முடியாது என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் கூறியுள்ளார்.

இலங்கை, மாலைதீவு நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் குழுவொன்றை புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் நடைபெறும் விடயங்கள் குறித்து தமிழ் நாட்டு மக்களும் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களும் அவ்வப்போது கரிசனைகளை வெளிப்படுத்துவதாக நிருபமா ராவ் கூறினார்.

அங்கு தமிழ் பேசும் மக்கள் உள்ளனர். இலங்கையில் தமிழ் மக்களுக்கு கவலையளிக்கும் ஏதேனும் நடந்தால் அவர்கள் (தமிழக மக்கள்) மிகவும் கவலை கொள்கின்றனர்.

அந்த கரிசனைகளைப் புறக்கணித்து விட முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை தமிழ்நாடும் இந்தியாவின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். தமிழக மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பதையிட்டு நாம் உணர்ச்சியற்று இருந்து விட முடியாது. அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் இதில் மிக வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருக்கிறேன். இலங்கையில் நாம் என்ன செய்கிறோம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்து இலங்கை அரசும் நாமும் என்ன கலந்துரையாடுகிறோம், அனைத்து அபிவிருத்தி உதவிகள், நடைபெறுகின்ற உட்கட்டமைப்புப் பணிகள், இலங்கை அரசுக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் என்பன குறித்து தமிழ் நாட்டு அரசுக்கு கூறுவதற்காக அவர்களுடன் நாம் தொடர்பில் இருக்கிறோம் என நிருபமா ராவ் கூறினார்.

இலங்கையுடனான இந்தியாவின் உறவின் உணர்வுபூர்மான தன்மை குறித்து தமிழ்நாட்டு அரசும் அதிகாரிகளும் கரிசனை கொண்டிருப்பதாகவும் இந்திய அரசு தன்னால் இயன்றளவு சிறப்பாக இவ்விவகாரத்தை கையாளும் என அவர்கள் புரிந்துகொண்டுள்ளதாகவும் நிருபமா ராவ் மேலும் தெரிவித்தார்.

இந்தக்கரிசனைகள் அவ்வப்போது வெளியிடப்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அது நிறுத்தப்பட மாட்டாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இது இயற்கையானது. ஏனெனில் இந்த பக்கம் தமிழ் பேசும் மக்கள் - அனைவரும் தமிழ் பேசும் மக்கள்- உள்ளனர்.

எனவே உங்கள் நாட்டில் உள்ளதைப் போன்றே, எங்களுடையதைப் போன்றதொரு ஜனநாயக அமைப்பில் அவர்கள் எப்போதும் தமது கருத்துக்களை, அபிப்பிராயங்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவார்கள் - என அவர் கூறினார். (த-10)

# திசைமாறிய படகில் 15 நாள்களாக தத்தளித்த இருவரில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மீன்பிடிப் படகு திசைமாறி நடுக்கடலுக்குச் சென்றதால் எரிபொருள் முடிவடைந்த நிலையில் உணவு, குடிதண்ணீர் இன்றி கடலில் தத்தளித்த இரு மீனவர்களில் ஒருவர் மரணமானார். மற்றவர் காப்பாற்றப்பட்டார்.

காப்பாற்றப்பட்டவரை கடற்படையினர் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதித்தனர். அதன் பின்னர் அவர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டார்.

கடந்த 15 நாள்களுக்கு முன்னர் திருகோணமலையிலிருந்து புறப்பட்ட இந்த மீனவர்களே படகுடன் திசைமாறி பருத்தித்துறை கடல் எல்லைக்குள் சென்று உணவு மற்றும் குடிதண்ணீர் இன்றித் தத்தளித்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் இறந்துவிட்டார். இவரது சடலத்தை இரண்டு நாள்களாக படகில் வைத்திருந்த போதும் துர்நாற்றம் காரணமாக அந்த உடலை கடலில் வீசியதாக காப்பாற்றப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த பி. அமலபால (வயது - 54) என்பவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டவராவார். (த-4)

## மின் இணைப்பு தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 7

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் ஆண், பெண் இருபாலாருக்குமான மின் இணைப்புத் தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

ஆர்வமுடைய க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்தவர்கள் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பணிமனைக்கு நேரில் சமூகம் தருமாறு சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ஒ-313)

# உலகப் புகழ்பெற்ற தமிழறிஞர் சிவத்தம்பி

இப்பொழுது நேரம் இரவு 10.00 மணி (06.07.2011). ஒன்பது மணியளவில் நண்பர் க. குமரன் தொலைபேசியில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 8.55 அளவில் காலமாகிவிட்டார் என்று கூறினார். மனோன்மணிக்கும் எனக்கும் இது எதிர்பார்த்திருந்த ஒரு செய்திதான். கடந்த 20ஆம் திகதி அவரைச் சென்று பார்த்தோம். அப்பொழுது அவர் தன்னுடைய உயர் பயணத்துக்கு ஆயத்தமாகத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளுவதாகக் கூறினார். கண்கள் கலங்கின. முற்றான பிரிவு என்பது மனிதர்களாகிய எம்மால் தாங்கமுடியாதது. பிரிந்தவர் சாதாரண ஆள் அல்ல. உலகப் புகழ்பெற்ற ஒரு தமிழ் அறிஞர்.

தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய விமர்சனம் பற்றி உலகில் எங்கெல்லாம் ஆய்வுகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் பேசும் பொருளாகப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியினுடைய எழுத்துப்பணியும் உடனிருக்கும். இத்தகைய உலகப் புகழுடன் எங்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தவர் பேராசிரியர் சிவத்தம்பி. இவர் எங்கள் பிதாமகர்.

இவரிடம் கற்ற மாணவர்களும் கற்காத மாணவர்களும் இவரைத் தங்கள் ஆசிரியராக்க் கொள்ளும் வழக்கம் உண்டு. வித்தியோதயப் பல்கலைக் கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் இவரிடம் கற்றவர்கள் இருக்கின்றனர். ஆனால் பேராசிரியர் மௌனகுருவோ, சுந்தரம் டிவகலாலாவோ, க. சண்முகலிங்கமோ, கலாநிதி தணிகாசலம்பிள்ளையோ, கலாநிதி மனோன்மணியோ, நானோ அவரிடம் கற்றதில்லை. நாங்கள் எல்லோருமே பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள். பேராசிரியர் கைலாசபதியிடம் கற்றவர்கள். எனினும் நாங்கள் எல்லோருமே பேராசிரியர் சிவத்தம்பியினை எங்கள் ஆசிரியராக நினைந்து வருகிறோம். இது கற்றறிந்த பேரறிஞர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பாகும். இதனாலேதான் இவரை ''எங்கள் பிதாமகர்'' என்று குறிப்படுகிறோம். ஆனால் ''எங்கள் பிதாமகரைத்'' தமிழ்நாட்டிலுள்ள சிலரும் தங்கள் பிதாமகராகக் கொள்ளும் சிறப்புத்தான் பேராசிரியர் சிவத்தம்பியின் உயர் சிறப்பாக அமைகின்றது. நாம் திசைநோக்கித் தொழுகின்ற வழக்கமடையவர்களல்லவா? ''எந்தரோ மஹானுபாவுலு அந்தரீக்கு வந்தனமு'' சொல்லும் மரபுடையவர்கள் நாம். இதிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பியும் தப்பமுடியாது. இப்பொழுது விண்ணை நோக்கித்தான் நாம் அவரைத் தொழவேண்டியுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பியின் பலம் இருந்தபடி இருந்ததுதான். கல்லடிகள் போன்று எத்தனை சொல்லடிகள் விழுந்தாலும் இருந்தபடி இருக்கின்றமை எல்லோராலும் முடியாது.

''காய்த்தமரம் ஆதலினால்
கல்லெறிகள் பட்டவன்நீ
கல்லால் எறிந்தவர்க்கும்
கனிகொடுத்த பழமரம் நீ''

என்று இவருடைய மாணவன் பேராசிரியர் சிவலிங்கராஜா தன்னுடைய ஈழத்து இலக்கியச் சொல்நெறிகள் என்னும் நூலைப் பேராசிரியருக்குக் காணிக்கையாக்கி எழுதிய கவிதைதான் இச்சந்தர்ப்பத்தில் என்னுடைய நினைவுக்கு வருகின்றது. இவருடைய இருப்பை அசைக்கப் பலர் முயன்றுள்ளமை சில வேளை வெளியுலகுக்குத் தெரியாமல் இருக்கலாம். இ[illegible] ஒளிர்பவர்கள்தான் [illegible] நிதிகள்'' என்று சொன்னவர்களின் வாய்கள்தான் வெந்தனவேயொழிய, கலாநிதிகள் என்றும் கலாநிதிகளாக இருந்துவருவதற்கு உலகம் இன்றும் சாட்சியாக இருந்துவருகின்றது.

### புதுமையான கலைச்சொற்கள்

பேராசிரியர் சிவத்தம்பியின் புலமையின் அடிநாதம் வரலாற்றுணர்வும் மரபின் பல்வேறு நெளிவு சுளிவுகளை நன்கு இனங்கண்டிருப்பதுமாகும். எந்த விடயத்தை எடுத்து ஆய்வு செய்தாலும் வரலாற்றுணர்வும் மரபின் போக்கும் அந்த ஆய்வினை வழிநடத்திச் செல்வனவாக அமைவதைக் காணக்கூடியதாக இருக்கும். இவற்றுக்குப் பக்கத் துணையாக அமைவது அவர் கையாளும் சொற்களும் சொற்றொடர்களும். தமிழ் நாட்டு இளைஞர்கள் பலர் இவருடைய ஆய் விலே ஈடுபாடு கொண்டமைக்கு இவர் கையாண்ட புதுமையான ஆனால் பொருத்தமான கலைச்சொற்களேயாகும். பேராசிரியருடைய சொற்புனைவு அவருடைய எழுத்துக்களுக்குக் கனதியைக் கொடுத்தது.

பேராசிரியருடைய ஆய்வுவழிகாட்டலிலே கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் பேராசிரியர் சி. மௌனகுரு, அமரர் கலாநிதி காரை எஸ். சுந்தரம்பிள்ளை, பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ், கலாநிதி செ. யோகராசா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோராவர். ஆய்வுக்குரிய வாசிப்பிலே ஆய்வு மாணவர்களைப் பேராசிரியர் எப்பொழுதுமே வழிநடத்துவார். இந்த வழிநடத்திலில் இடையிலே திசைமாறிப் போவோருமுண்டு. அவர்கள் நீண்ட தூரம் சென்று திரும்புவதுண்டு. பேராசிரியர் தமிழ்நாட்டுக்குச் செல்லும்போது அங்கு [illegible]யான ஆய்வு மாணவர்கள் அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பர். இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய தொன்றல்ல. அங்குள்ள பல்கலைக் கழகங்களிலிருந்து வரும் முனைவர் ஆய்வேடுகளுக்குத் தேர்வாளராக இருப்பதால் பேராசிரியரை அவ்வாய்வாளர்கள் எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதை நான் அறியக் கூடியதாயிருந்தது. பழமரத்தை நாடி நிற்கும் பறவைகளைப் போல அம்மாணவர்கள் இவர் வரவைக் காத்திருப்பதையும் இவரிடம் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைதையும் நான் நேரிலே கண்டுள்ளேன்.

பேராசிரியர் சிவத்தம்பிக்கு வாய்ப்பாக இருந்தவை அவருக்கிருந்த கொம்யுனிஸ்ட் கட்சிச் சார்பு, ஆங்கில-சிங்கள மொழிப் புலமை. கொம்யுனிஸ்ட் கட்சிச் சார்பு அவர் எழுத்துக்குச் சிந்தாந்தத்தை நல்கியது. அதனுடன் ஒரு பரந்துபட்ட நண்பர் கூட்டத்தைக் கொடுத்தது. சிங்களமொழியறிவு இதற்கு மேலும் உதவியது. ஆங்கில மொழியறிவு அவரை உலகறியவைத்தது. கருத்துக்கள் உதிரிகளாக இருப்பின் விளங்கிக் கொள்வது இலகுவாயிராது. அவை ஒரு சித்தாந்தப் பின்புலம் கொண்டவையாயின் மிக இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும். இதுதான் அவருடைய எழுத்துக்களுக்கு மிகுந்த மதிப்புக்கிடைக்கக் காரணமாயிற்று. இத்தகைய அறிஞரை நாம் இழந்துநிற்கிறோம். உலகத் தமிழ் அறிஞர்கள் அன்னாரது இழப்பினால் மிகுந்த துயரத்தில் இப்பொழுது ஆழ்ந்திருப்பார்கள். அவருடைய குடும்பத்தினருக்கு நாம் ஆறுதல் கூறமுடியாது. அவருடைய ஆன்மா அவருடைய குல தெய்வமாகிய சன்னதி முருகனின் அடிகளிலே அமைதியுற்றிருக்குமென்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுதான் மீள்குடியேற்றமா?....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள், கூட்டமைப்பு எ பிக்களிடம் கண்ணீர் மல்கக் கேட்டனர்.

வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, நிச்சியவெட்டை, போக்கறுப்பு ஆகிய பகுதிகளில் சில தினங்களுக்கு முன்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

குறித்த பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் விஜயம்செய்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன் ஆகியோரிடமே மக்கள்மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

இவ்விஜயத்தின்போது மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திடீரென இராமாவில் முகாமிலிருந்து எங்களை ஏற்றினார்கள். எந்தவிதமான முன் அறிவித்தல்களும் எமக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் வீட்டுப்பொருள்களை உரிய முறையில் எடுத்துக்கொள்ளவில்லை. சிறுபிள்ளைகளுக்கான உணவுப் பொருள்களையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஏறி வந்துவிட்டோம். இரவு திறந்த வெளியில்தான் தங்கவைக்கப்பட்டோம். தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருந்தது.

பெண்கள் அனைவரும் பாடசாலைக்குள் தங்கி இருக்க ஆண்கள் மழையில் நனைந்துகொண்டிருந்தார்கள். நேற்றுமுன்தினம் அங்கிருக்க முடியாது என்பதால் எங்களுடைய காசை கொடுத்து காணிகளுக்கும், காணிகள் இல்லாதோர் திறந்தவெளிகளில் உள்ள மரங்களுக்குக் கீழும் வந்திருக்கின்றோம். தரப்பாள்கள் கூட தரப்படவில்லை. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் முகாமில் கொடுத்த தரப்பாள்களைத்தான் கொண்டு வந்தோம்.

மேலும் சிறார்களுக்கான உணவுப் பொருள்கள் எவையும் தரப்படவில்லை. வசதியுள்ளவர்கள் வாங்கிக் கொள்க்கிறார்கள். வசதியில்லாதவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். எங்களுக்கான அடிப்படை வசதிகளையாவது பெற்றுத்தர நடவடிக்கை எடுங்கள் - எனக் கேட்டனர்.

இதற்குப் பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் தாம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உரிய தரப்புக்களுடன் பேசி தகுந்த நடவடிக்கைகளை எடுப்போம் - என்றனர்.

இதேவேளை, மேற்படி விஜயத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ''நாங்கள் திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கில் புதிதாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு எடுத்த முயற்சி தடுக்கப்பட்டது. அதற்கான காரணம் தொடர்பில் நாம் குழப்பமடைந்திருந்தோம். பின்னர் மீளக்குடியமர்ந்த மக்கள் எமக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்த கருத்துகள் உண்மையானவை என நாம் நேற்றுமுன்தினம் அறிந்திருந்தோம்.

மக்கள் மீளக்குடியேற்றப்பட்டார்கள் என உலகத்துக்குக் காட்டுவதற்காக சுமார் 10 வரையான வீடுகள் மட்டும் அலங்காரமாக கட்டப்பட்டிருக்கின்றன. ஏனைய மக்கள், ஏற்பாடுகள் எவையுமில்லாமல் அழைத்துவரப்பட்டு திறந்தவெளிகளில் விடப்பட்டுள்ளனர். சிறார்கள் எந்தவிதமான உணவுப்பொருளும் இல்லாமல் கொளுத்தும் வெயிலில் பசி கிடக்கின்றார்கள். நிச்சியவெட்டையிலிருந்து மக்கள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்து வெற்றிலைக்கேணியிலிருந்து குடிதண்ணீர் எடுத்துச் செல்கின்றார்கள்.

மருத்துவ வசதி கிடையாது நேற்று முன்தினம் காலையும் கூட சிறுவனொருவனை பாம்பு கடித்துவிட்டது. எனவே, இதுதான் நிலைமை மீள்குடியேற்றம் என்ற பெயரில் ஏற்றிவரப்பட்ட மக்கள் தெருக்களில் விடப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமைகள் வெளிக்கொணரப்பட்டுவிடும் என்பதால்தான் நாங்கள் அந்தப் பகுதிக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. நேற்றுக் காலை எல்லாம் சரிசெய்யப்பட்டு மக்கள் தாங்களாகவே தமது இடங்களுக்குச் சென்றபின்னர் நாம் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

எனவே, இது தேர்தலுக்காக திட்டமிடப்பட்ட வகையில் மக்களைப் பகடைக்காய்களாக வைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. இந்த நடவடிக்கையால் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

(ஓ-சி)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் அமர்வுகள் நடைபெற இருந்தன. எனினும் இதனை ஆணைக்குழு இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைத்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுத் திடீரென யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வந்த இந்தக் குழுவினர் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்பின்னர் அவர்களால் அழைக்கப்பட்ட சில சாட்சிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆணைக்குழுவின் அமர்வுகள் யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்றபோது அதில் சாட்சியமளித்த சிலரே இவ்வாறு மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு நேற்றுமுன்தினம் இரவு தொலைபேசி மூலமாகவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவர்கள் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் சரணடைந்த தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கடந்த வருடம் இடம்பெற்ற அமர்வின்போது எழுத்துமூலக் கோரிக்கைகளை ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்தனர்.

ஆணைக்குழுவின் விசாரணைக்கு வந்திருந்தவர்களிடம் உங்கள் உறவுகள் தொடர்பாக நீங்கள் சமர்ப்பித்த விவரங்கள் சகல தடுப்பு முகாம்கள், இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவர்களைத் தேடும் முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன - என்றனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்தால் வரவேண்டும் என்றும் அதற்கான செலவுகள் தம்மால் வழங்கப்படும் என்றும் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். நேற்று விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய போராளிகளின் மனைவிமார்களும் அடங்குகின்றனர்.

இந்தக் குழுவினர் மாவட்ட செயலகத்தில் தகவல் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதாவது யாழ்.மாவட்டத்தில் எத்தனை பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்? எத்தனை பேர் இன்னும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்? குடியமர்த்தப்பட்டவர்களுக்கு எவ்வாறான உதவிகள் கிடைக்கின்றன? விதவைகள் மற்றும் அங்கவீனர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் அவர்களால் திரட்டப்பட்டன.

(த-15)

## அந்தரங்கமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் சவேந்திர சில்வாவும் இந்தச் சந்திப்புக்காக பான் கீ-மூனின் செயலகத்துக்குச் சென்றிருந்தார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது புகைப்படம் எடுப்பதற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்தச் சந்திப்பை புகைப்படம் எடுப்பதற்கு அனுமதிக்குமாறு ஊடகவியலாளர்கள் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்தவாரம் இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவர் சிபி லிவ்னி, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனைச் சந்தித்தபோது அதை புகைப்படம் எடுக்க அனுமதித்த ஐ.நா. அதிகாரிகள் நேற்றைய சந்திப்பை புகைப்படம் எடுக்க ஊடகவியலாளர்களை அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, வழக்கமாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சந்திப்புகள் தொடர்பாக அவரது அதிகாரபூர்வ இணையதளத்தில் புகைப்படங்கள் வெளியிடப்படுவது வழக்கமாக இருந்தாலும், அதிலும் எந்தப் புகைப்படமும் வெளியிடப்படவில்லை.

இந்தச் சந்திப்புப் பற்றிய தகவல்களும் அதில் பிரசுரிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி
தமிழ்வாணி குமாரதாஸ் அவர்களின் மாமி
**திருமதி தம்பிராசா பாரிசாதபுஸ்பம்**
அவரின் மறைவினால் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்
யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.



### மரண அறிவித்தல்

**கந்தசாமி ஐயர் முத்துக்குமாரசாமி**
(கிளாக்கர்)



இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தசாமி ஐயர் முத்துக்குமாரசாமி அவர்கள் (முகாமையாளர் - பாரதி பதிப்பகம்) 06.07.2011 புதன்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'அன்னை இல்லம்'
இராமநாதன் கலட்டி,
கோண்டாவில் வீதி,
இருபாலை.

தகவல்:
மனைவி
சாவித்திரிதேவி (ராணி)



### 31ஆம் நாள்நினைவஞ்சலி 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அருணாசலம் கந்தையா**
தோற்றம் 25.07.1938
மறைவு 07.06.2011



**கந்தையா புண்ணியகரன்**
தோற்றம் 15.02.1979
மறைவு 15.05.2009

*தந்தையே! சாவும் உன்னிடம் சாந்தமாய் வந்தது*
*தென்றலாய் தீண்டியே சிவலோகம் சென்றது*
*துயரிடை நாம்வாட நீயோ சிவனடி சேர்ந்தாய்*
*ஆண்டுகள் நூறு ஆயினும்*
*உங்கள் நினைவுடனே வாழ்வோம்.*

*இளவலே அழகனே எங்கள் இறைவா*
*சோழர் குலக் கொழுந்தே சொற் செயல் வீரா*
*சிவனுடை தரித்தாய் சிறப்பினை அடைந்தாய்*
*காலன் கணை எறிய கண்மூடிப் போனாய்*
*தேம்பிடும் எம்மை தேற்றிட வருவாயா?*

எமது இல்லத்தில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் கலந்து அன்னார்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

5/1 புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(5548)



### மரண அறிவித்தல்

**திருமதி சிவரட்ணம் சிவபுஸ்பராணி (குஞ்சு)**



கரம்பனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவரட்ணம் சிவபுஸ்பராணி (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவரட்ணத்தின் (ஓய்வுபெற்ற X கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்) அன்பு மனைவியும் யசோதா (கனடா), சிவகுமார் (ஆசிரியர், யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயராஜ் (கனடா), மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமியும் கிரிஷாந்தின் (யா/ உடுவில் மகளிர் கல்லூரி) அன்புப் பேர்த்தியும் சிவபாலன் (பிரான்ஸ்), சிவபூர்ணம், சிவநாதன், சிவசோதி, சிவதேவராசா (ஜேர்மனி), சறோஜினிதேவி, வசந்தாதேவி, வரதராசன் (கனடா), ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி, பரஞ்சோதி, தவமணி, சுந்தரலிங்கம், பாலசுந்தரம், மோகனகாந்திராஜா, இரத்தினகாந்தி, சிவநாதன், செல்வரத்தினம், பேராயிரவர், சோமசுந்தரம், இராசம்மா, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5541)

தகவல்:
81, மானிப்பாய் வீதி, மானிப்பாய்.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியா ஒரு வழி சொல்லக் கூடாதா?

இலங்கைத் தமிழ் பேசும் மக்களை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்தும் தமிழ் நாடு மக்கள் அவைகள் குறித்து வெளிப்படுத்தும் உணர்வுகள் குறித்தும் இந்திய மத்திய அரசு உணர்ச்சியற்று இருந்துவிட முடியாது. இதை எவரும் புரிந்து கொள்ளவேண்டும். இது எப்போதும் இருக்கத்தான் செய்யும், அந்தத் கரிசனைகளை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் புதுடில்லியில் தம்மை சந்தித்த இலங்கை மற்றும் மாலைதீவு பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதவிக்கு வந்த கையோடு, தமிழ்நாடு சட்டசபையில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக ஏக மனதாக நிறைவேற்றிய தீர்மானம் உட்பட 30 கோரிக்கைகளுடன் புதுடில்லி சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து அவைகளை நிறைவேற்றித்தருமாறு வற்புறுத்திவிட்டுத் திரும்பியிருந்தார்.

தமிழ்நாடு சட்ட சபையில் நிறைவேற்றியிருந்த தீர்மானங்களில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாக இருந்தது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ்நாட்டில் உணர்ச்சிவேகம் அதிகரித்திருப்பதற்கு நியாயம் உண்டு. அதன் விளைவாக செல்வி ஜெயலலிதாவை அபரிமிதமான ஆதரவுடன் ஆட்சியில் அமர்த்தினார்கள் தமிழ்நாட்டு மக்கள். அவ்வாறு செய்த மக்கள் அவரிடமிருந்து அதற்கான பெறுபேறுகளை எதிர்பார்க்கவே செய்வார்கள்.

இந்த நிலைமையில் தமிழ்நாடு முதல்வர் நேற்று புதுடில்லி புறப்பட்டுச் செல்லவிருந்தார். அங்கு நடைபெறும் திட்டக்குழு அமர்வுகளில் கலந்து கொள்ளவிருக்கும் அவர், தமிழ்நாட்டின் புதிய வரவு செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை பல மடங்கு அதிகரித்து தருமாறு கேட்டுக் கொள்வார். அது ஒரு புறமிருக்க, பிரதமரிடம் தாம் ஏற்கனவே கையளித்துள்ள தமிழ்நாட்டு மக்களின் உணர்வு பூர்வமான கோரிக்கைகளுக்கான பதிலையும் எதிர்பார்ப்பார் என்பது நிச்சயம்.

அவ்வாறு - தமிழ்நாடு மக்களை திருப்திப்படுத்தும் வகையிலான விடை கிடைக்காமல் வெறும் கையுடன் அவர் திரும்பும் பட்சத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு. கழகமும் ஒன்றுதான் அ.தி.மு. கழகமும் ஒன்றுதான் - இரண்டு கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே என்ற முடிவுக்கு தமிழ்நாட்டு மக்களைத் தள்ளிவிடுவதாக இருக்கும். அத்துடன் இலங்கைத் தமிழர் விடயத்தில் தீவிரப்போக்கினை வெளிப்படுத்திவரும் கட்சிகளின் வாய்களுக்கு "அவல்" கிடைத்ததாகவும் அமைந்துவிடும்.

எனவே ஜெயலலிதா மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையிலான ஒரு பொதியுடனேயே திரும்புவார் என்று எதிர்பார்க்க வேண்டும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே இந்திய வெளியுறவுச் செயலாளரின் கருத்து வெளிவந்து இருக்கின்றது. நிருபமாராவ் இந்திய நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒரு மூத்த பிரமுகர். இவர் அனுபவமிக்க ராஜதந்திரியும் இலங்கையில் முன்பு இந்திய உயர் ஸ்தானிகராகப் பணிபுரிந்தவருமாவார். அந்த வகையில் இலங்கை தமிழர் பிரச்சினை அவருக்கு அத்துப்படியானதே. எனவே அவர் பேசும் விடயங்கள் மிகவும் ராஜதந்திர மயமானதாகவே இருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கை விடயத்தில் இந்தியா ஏதாகிலும் "உறைப்பாக" செயல்படுமானல் அது தமிழ் நாடு மக்களின் உணர்ச்சி வேகத்தைத் தணிப்பதற்காகவே அமையும்; அதைத்தான் தமிழ் நாடு மக்களின் உணர்வுகள் குறித்து இந்திய அரசு உணர்ச்சியற்று இருந்து விடமுடியாது என்று அழுத்திக் கூறுகிறார்.

நிருபமாராவ் மேலும் கூறுகையில், இந்திய மத்திய அரசு வெளிஉறவுகளுக்கும் பொறுப்பாக இருக்கின்றது. எனவே சம்பந்தப்பட்ட அனைவரின் நன்மைகளையும் கருத்தில் கொண்டே அது செயற்பட முடியும். அந்த வகையிலேயே விவாதங்களும் செயற்பாடுகளும் அமைய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்து, தமிழ்நாடு அரசியல் தலைவர்களையும் மக்களையும் ஆசுவாசப்படுத்துவதற்கானது.

தமிழ்நாட்டில் இடம்பெற்றுவரும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக அவர் கூறுவது என்னவெனில்-

இது இயற்கை தான், ஏனென்றால் தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் தமது கருத்துக்களை ஒரு ஜனநாயக நாட்டில் அவர்கள் சுதந்திரமாக வெளியிடமுடியும் என்பதாகும்.

இலங்கையை இந்தியா ஒரு நட்பு நாடாகவே கருதுகின்றது. அந்த நாட்டில் நிலையான அமைதி ஏற்பட என்ன செய்யவேண்டுமோ அதை செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம். அதன் மூலம் சிறுபான்மை மக்கள் தமது வழமையான வாழ்க்கை முறையை கைக்கொள்ளவும், நாட்டின் வளர்ச்சிக்கு தமது முழுப்பங்களிப்பையும் வழங்குவதற்கும் வழிசெய்ய வேண்டும் என்றும் திருமதி ராவ் கூறியுள்ளார்.

தமிழ் தரப்பினருக்கும் இலங்கை அரசுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறுகிறது. இது இலங்கையின் ஒருமைப்பாட்டை மனதில் கொண்டு இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு தீர்வினை உருவாக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதுவானாலும், இலங்கையின் நிலையான அமைதிக்கு வழிசெய்யும் தீர்வையே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். இந்தியாவின் நிலையும் அதுதான் என்று புலப்படுகிறது. ஆனால் தீர்வை எட்டுவதற்குச் சரியான வழி என்ன என்பதனை உச்சரிக்க இந்தியா பின்னிற்கிறது. இது இலங்கைத் தமிழர்களிடம் ஏமாற்றத்தையே தோற்றுவிக்கிறது. இந்திய மத்திய அரசு இதனைப் புரிந்துகொண்டு ஒரு வழி சொல்லக் கூடாதா?

# அரச திணைக்களக் கட்டடத்தில் தேர்தல் பிரசாரச் சுவரொட்டி

## தேர்தல் மத்திய நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

தேர்தல் விதிமுறைகளை மீறி அரச திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் தேர்தல் பிரசார சுவரொட்டி ஒட்டியது தொடர்பாக தேர்தல் மத்திய நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் நேற்று யாழ். செயலகத்தில் இயங்கும் தேர்தல் மத்திய நிலையத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் அரச தரப்பில் போட்டியிடும் கட்சியின் பிரசார சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

அவற்றினை அகற்றுமாறு அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். தேர்தல் மத்திய நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ம-9)

# கட்டாக்காலிகளின் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

நவாலிப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச கமநல கேந்திர நிலைய அதிகாரி திருமதி பாமா மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நவாலி வடக்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்வில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

நவாலிப் பிரதேசத்தில் சிறுபோக தானிய உற்பத்திப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக வழுக்கையாற்றுப்படுக்கை நங்கன்குளம், தலுவல் ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகளால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-313,302)

# நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக வடிகால் வைத்திருந்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நுளம்பு உற்பத்தியாகும் வகையில் வடிகால் அமைப்பை வைத்திருந்தமைக்காக பெரிய அரசடியில் உள்ள உணவு கையாளும் நிலைய உரிமையாளருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து சாவகச்சேரிப் பகுதியில் உள்ள உணவுகையாளும் நிலையங்களின் மீது திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினர்.

அந்த வேளையில் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த வடிகாலின் பல இடங்களில் தண்ணீர் தேங்கி இருந்தது.

இந்த நிலைய உரிமையாளர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மேற்படி வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-207)

# நெடுந்தீவுக்கு 24 மணிநேரமும் மின் விநியோகப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெடுந்தீவுப் பிரதேசத்துக்கு 24 மணி நேர மின்சார சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் டி.விஜயவிக்கிரம, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் ஆகியோர் கலந்து கொண்டு இந்த மின்சார விஸ்தரிப்புத் திட் டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் முக்கிய குடியிருப்புப் பகுதிகள், முக்கிய திணைக்களங்கள், அரச சேவை நிலையங்கள் ஆகியவற்றுக்கு இந்த மின்சார சேவையை வழங்குமாறு மின்சார சபைக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

(ம-7-313)

## புலன்களை எவ்வாறு நன்னெறிப்படுத்தலாம்

நாம் சந்தர்ப்பம் கொடுக்குமிடத்துத்தான் புலன்கள் தீய பழக்கங்களை வளர்க்க முடிகின்றன. புலன்களது தீய பழக்கங்களைக் களைந்து விடுவது எமது கடமையாகும். நல்ல பழக்கங்களைக் கையாள அவற்றுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும். தீய அல்லது எதிர்மாறான விடயங்களால் ஒரு புலனுறுப்பின் கவனம் கலைக்கப்பட்டு விட்டால் அதனை வேறொரு விரும்பத்தக்க விடயத்துக்கு, அதற்கும் மேலான பலமான கவர்ச்சி, தூண்டுதல் சக்தி கொண்டவற்றால் ஈர்க்க வழிவகுக்க வேண்டும். அப்பொழுது அது அந்தத் தீயபழக்கத்தை விட்டுப் புதிய நல்ல பழக்கத்தை மேற்கொள்ள பயிற்சிக்கப்பட்டுவிடும். முற்காலத்தில் தவம் ஆற்றியோர் புலனடக்கத்தை ஒரு விரதமாகக் கொண்டனர்.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இரத்தக் குழாய் சிகிச்சை முறை; யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமாகாணத்தில் முதன் முதலாக யாழ். போதனா வைத்தியசாலையில் 106.3 மில்லியன் ரூபா செலவில் இரத்தக் குழாய் சிகிச்சை முறை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதயத்துக்கு குருதி வழங்கும் குருதிக் குழாய்களின் உள்ளமைப்பை ஆராய்ந்து அங்கு அடைப்பு இருக்கிறதா என்பதை இனங்கண்டு அதற்கு சிகிச்சை அளிக்கும் முறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இந்த நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் இதுவரை காலமும் கொழும்பு கண்டி தேசிய வைத்தியசாலைகள் மற்றும் அங்குள்ள தனியார் வைத்தியசாலைகளுக்கும் சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலைமை காணப்பட்டது. இதனால் இந்த நோயாளர்கள் பல இடையூறுகளை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் தொடக்கம் இந்த நோய்க்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து அனைவருக்கும் சிகிச்சை வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சைக்கான உபகரணங்களை 100 மில்லியன் ரூபா செலவில் இலகு கடன் அடிப்படையில் பிரான்ஸ் வழங்கியுள்ளது.

இந்தச் சிகிச்சை நிலையத்துக்கான கட்டட நிர்மாணத்துக்கென யு.என்.டி.பி. மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு என்பன 6.3 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

கொழும்பு, கண்டி, குருநாகல், காலி ஆகிய நான்கு இடங்களிலும் உள்ள தேசிய வைத்தியசாலைகளில் இந்த சிகிச்சை முறை ஏற்கனவே வழங்கப்படுகிறது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தவிர கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைகள் சிலவற்றிலும் இந்த சிசிக்சை முறை காணப்படுகிறது.

இங்கு இந்த சிகிச்சை முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இங்குள்ள மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் பிற மாவட்டங்களிலிருந்தும் சிகிச்சைக்கென பலர் யாழ். போதனா வைத்தியசாலையை நோக்கி வரலாம் எனவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-4)

# பார்வையாளர்களுக்கு வசதியாக யாழ். ஆஸ்பத்திரியில் கொட்டகை

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுபவர்களை பார்வையிடச் செல்பவர்களின் நலன்கருதி அங்கு தங்குமிட கொட்டகை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அடுத்த வாரம் இந்தக் கொட்டகை அமைக்கப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோருக்கு நீண்ட காலமாக தங்குமிட கொட்டகை அமைக்கப்படாமல் இருப்பது தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் பார்வையாளர் நேரத்திலேயே உட்செல்ல முடியும். குறிப்பாக நண்பகல்நேரம் அங்கு செல்வோர் பார்வையாளர் நேரம் வரும் வரை கடும் வெயிலில் நின்றே செல்ல வேண்டிய நிலை உள்ளது.

குறித்த நேரம்வரை வைத்தியசாலைக்கு வெளியே மின்சார நிலைய வீதிப்பக்கமாக உள்ள நுழைவாயிலுக்கு முன்னால் உச்சி வெயிலில் வரிசையில் காத்து நிற்கின்றனர்.

வயோதிபர்கள் மட்டுமன்றி கைக்குழந்தைகளுடனும் தாய்மார் பலரும் தினமும் வெயிலில் காத்து நிற்கின்றனர். இதனால் அவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் தங்கி நின்று செல்வதற்கேற்றவாறு மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நுழைவாயிலில் உட்பகுதியில் இந்தத் தங்குமிட கொட்டகை அடுத்த வாரத்தில் அமைக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# அமைச்சர்கள் தெரிவித்தும் செயற்பட மறுக்கும் குமுதினி

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெடுந்தீவு, குறிகாட்டுவான் குமுதினி படகுச் சேவை அடிக்கடி இடைநிறுத்தப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தபோது குமுதினி படகுச் சேவை இடைவிடாது சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் நேற்றுமுன்தினம் குமுதினி பட்கு பழுதடைந்தமையால் சேவையில் ஈடுபடவில்லை. அமைச்சர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டதால் படகுச் சேவை சீராக இடம்பெறும் என நினைத்து பயணத்துக்காக வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குமுதினி படகுச் சேவையை சீர்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313-7)

மருத்துவ வளர்ச்சி...



புதிய வருகை: யாழ்.போதனா வைத்திய சாலையில் 106.3 மில்லியன் ரூபா செலவில், இதயத்துக்கு குருதி வழங்கும் குருதிக் குழாய்களில் அடைப்பு இருக்கிறதா என்பதனை இனங்கண்டு அதற்கு சிகிச்சை அளிக்கும் சிகிச்சை முறை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. (ம-4)

# அரச காணியில் மரங்கள் வெட்டிய 6 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூலை.

அரச காணிக்குள் மரங்களை வெட்டிய 6 பேருக்கு யாழ். நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

அரசுக்குச் சொந்தமான மண்டைதீவில் உள்ள காணிக்குள் மரம் வெட்டப்படுவதாக யாழ். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் 6 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராசா 6 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ம-9)

# பாடசாலை மாணவர் இருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

தீவுப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்தில் கண்ணில் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நயினாதீவைச் சேர்ந்த ஆர். ராஜ்குமார் (வயது-14), நாரந்தனையைச் சேர்ந்த ஜே.சுதாகரன் (வயது-10) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நயினாதீவைச் சேர்ந்த மாணவன் வகுப்பில் பென்சில் தீட்டும் போது 'பிளேட்' தாக்கியதால் கண்ணில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நாரந்தனையைச் சேர்ந்த மாணவன் கண்ணில் கம்பி போன்ற ஒன்றால் குத்தப்பட்ட நிலையில் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இரு மாணவரிடையே இடம் பெற்ற பிரச்சினையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. (ம-15)

# பார ஊர்திகள் போக்குவரத்து அதிகரிப்பு; மந்திகை வீதியில் நெருக்கடி

வடமராட்சி, ஜூலை 7

மணல் ஏற்றி இறக்கும் லொறிகள், ரிப்பர் வாகனங்களின் போக்குவரத்து மந்திகை வீதியூடாக அதிகரித்துள்ளதனால் இந்தப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான பாதை திறக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதி மக்கள் பருத்தித்துறைஅரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்திய சேவைகளைப் பெற்று வருகின்றனர். யாழ்ப் பாணம் உள்ளிட்ட பிற இடங் களுக்குப் பயணம் செய்யவும், போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்குப் பகுதியைச் சேர்ந்த வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் சென்று வரவும் வசதியாக பருத்தித்துறை - ஆழியவளை பாதையில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச, தனியார் பேருந்துகள் பருத்தித்துறையிலிருந்து அனைத்து சேவைகளும் மந்திகை ஊடாகவே நடைபெற்று வருகின்றன.

இதனைத் தவிர மந்திகையில் உள்ள வைத்தியசாலைக்கும் மந்திகை ஊடாக பல்வேறு இடங்களுக்கும் நாளாந்தம் பெருந்தொகை வாகனங்கள் சென்று வருகின்றன.

இந்த நிலையில் மணல் ஏற்றி இறக்கும் லொறிகள், ரிப்பர் வண்டிகளும் மந்திகை ஊடாக வந்து செல்வதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் விபத்து நிகழக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

[illegible] ஊடாக மணல் ஏற்றி இறக்கும் லொறிகள், ரிப்பரகள வந்து செல்வதால் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் நோயாளர்கள் மற்றும் வாகனங்கள் போக்குவரத்து நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர்.

வைத்தியசாலை வீதி ஊடாக பார ஊர்திகள் செல்வதைத் தடை செய்து அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை அடுத்து அனைத்து வாகனங்களும் துன்னாலை - யார்க்கரை - வல்லை வீதி ஊடாகச் சென்று வர வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை அமுல் படுத்துமாறு பொலிஸாரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத்தீர்மானம் ஒரு சில வாரங்கள் மட்டுமே அமுலில் இருந்து வந்தது. தற்போது மந்திகை ஊடாகவே மணல் ஏற்றி இறக்கும் வாகனங்கள் வந்து செல்கின்றன.

இதனைத் தடுக்க எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்வு

## பதிவுகள் மும்முரமாக நடக்கின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமராட்சி கிழக்கில் இது வரை உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ள இரு பிரிவுகளில் உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு மீளக்குடியமர்வு இடம் பெறவுள்ளது.

நாகர் கோயில்மேற்கு, நாகர் கோயில்தெற்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதுதொடர்பான பதிவுகள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செலயர் என். திருலிங்கநாதனை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

இதுவரை மீளக்குடியமர்த்தப் படாத உயர்பாதுகாப்பு வலயங் களாக இருந்த நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் தெற்கு ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன் இந்தப் பகுதியில் மீளக் குடியமர ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இந்த வகையில் வடமராட்சி கிழக்கின் நாகர்கோயில் மேற்கு பகுதியில் 158 குடும்பங்களைச் சேர்ந்த 557 பேர் இதுவரை மீளக்குடியமர பதிவு செய் துள்ளனர். நாகர்கோயில் தெற்கு பகுதியில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 369 பேர் இதுவரை மீளக்குடியமர விண்ணப்பித் துள்ளனர். இவர்கள் அனைவரும் தற்போது வலிக்கண்டி புனிதநகர் பகுதியில் சுனாமித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளில் வசித்து வரு கின்றனர். - என்றார். (ம-319)

# விசேட கணக்கெடுப்புப்பணிகள் 18 ஆம் திகதியுடன் நிறைவடையும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடக்கில் மேற்கொள்ளப் பட்டுவரும் விசேட கணக் கெடுப் புப் பணிகள் இந்த மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் இலங்கை புள்ளி விவரவியல் திணைக்களத் தின் முழுமையான கணக்கெடுப் புப் பணிகளுக்கு மேலதிகமாக விஷேட கணக்கெடுப்புப் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1981 ஆம் ஆண்டுக்கு பின்பு வடமாகாணத்தில் முறையான புள்ளி விவரங்கள் இல்லை. இதனால் வரவு செலவுத்திட் டத்தில் சரியான முறையில் வடமாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள் வதற்காக இந்த விஷேட கணக் கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்த விஷேட கணக்கெடுப் புக்கான உதவிகளை பாது காப்பு அமைச்சே மேற்கொண்டு வருகின்றது. இந்த மாதம் 4 ஆம் திகதி இந்தக் கணக்கெடுப் புப்பணிகள் வடக்கில் ஆரம்பிக் கப்பட்டன.

இந்தப் பணிகளில் பாடசாலை ஆசிரியர்கள் அந்தப் பகுதி கிராம சேவகர்களுடன் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பணிகள் எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் நிறை வடையவுள்ளது. இரண்டு வார காலப் பகுதியினுள் இந்தப் பணிகளை நிறைவு செய்யக் கூடிய விதத்திலேயே மேற் கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-15)

# பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி போதிய கவனிப்பின்றி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கொடிகாமம், கச்சாய் பகுதி யில் பாம்புக்கடிக்கு இலக்கான சிறுமி ஒருவர் வைத்தியர்களின் உரிய சிகிச்சையின்மை மற்றும் நேரதாமதம் ஆகியவற்றால் மரணமானார். கொடிகாமம், கச் சாயைச் சேர்ந்த யோகேந்திரன். துசாளினி (வயது-8) என்ப வரே இவ்வாறு மரணமடைந்த வர் ஆவார். கடந்த மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சம்பவ தினத்தன்று மாலை வீட்டிலிருந்து தமது சகோதர னுடன் அயல் வீட்டுக்குச் சென்ற போதே பாம்பு சிறுமியைத் தீண்டி யது. உறவினர்கள் சற்று நேர தாமதத்தின் பின்னரே சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை யில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற ஞாயிற் றுக்கிழமை இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தரே (RMP) கட மையில் இருந்துள்ளார். சாவகச் சேரி வைத்தியசாலையில் 7.40 மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட மேற்படி சிறு மிக்கு 'ஹைறோ கோட்டிசோன்', பிறிற்ரோன் (ஒவ்வாமைக்கு கொடுக்கப்படுவது), 'புரூயன்' எனப்படும் வலிகொல்லி நிவா ரணி மருந்தும் கொடுக்கப்பட் டுள்ளது. இதில் 'புரூயன்' மருந்து வகை பாம்புக்கடிக்கு இலக் கானவர்களுக்கு கொடுக்கப்படு வதில்லை. ஏனெனில் இரத்தப் போக்கு தன்மையை கூட்ட வல்லது. பாம்புக்கடிக்கு இலக்கான வர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ASP மருந்து கொடுக் கப்படாமல் 'யுனிமெஸ்லோஸ்' என்ற நோய் நிவாரணியே வழங் கப்பட்டிருக்கின்றது.

பதிவு செய்யப்பட்ட மருந் துவ உத்தியோகத்தர் இவ்வாறு குறித்த சிகிச்சைகளை மேற் கொண்டுள்ளார். மேலும் அந்த நேரத்தில் வைத்தியசாலை யில் வைத்தியர்கள் எவரும் கடமையில் இருக்கவில்லை யென்று தெரிவிக்கப்படுகின் றது. 3 மணி நேரம் தாமதித்து 10.41 மணியளவிலேயே யாழ். போதனா வைத்தியசாலையில் குறித்த சிறுமி சேர்க்கப்பட்டுள் ளார். பின்னர் சிகிச்சை பய னின்றி சிறுமி உயிரிழந்துள் ளார்.

இந்த விடயம்தொடர்பாக சாவகச்சேரி வைத்தியசாலைப் பணிப்பாளிடம்கேட்போது:

தமக்கு வைத்தியர்கள்போதா தென்று தெரிவித்தார். 5 வைத்தி யர்களே வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றனர். சம்பவ தினம் ஞாயிற்றுக்கிழமை ஆகை யால் இரவுக் கடமைக்கு வைத்தி யர்கள் எவரும் இருக்கவில்லை. எமக்கு மேலதிக வைத்தியர்கள் நியமிக்கப்படும் இடத்து இவ்வா றான பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ளலாம். - என் றார். (ம-15)

ஊக்குவிப்பு...



கல்விக்காக:யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு உள்ளக தொலைபேசி இணைப்புத் தொகுதி ஒன்று பழைய மாணவர் செ.பாஸ்கரனின் ஏற்பாட்டில் ஹம்சன்ஸ் சர்வதேச நிறுவனம் வழங்கியுள்ளது. நிறுவன முகாமையாளர் ருஷல் தேவசுரேந்திரா கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, பிரதி அதிபர் ச.நிமலன் ஆகியோரிடம் தொலைபேசி இணைப்புத் தொகுதியை வழங்குகின்றார்.(ம)

# நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுசேவையில் நேரமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெடுந்தீவு, குறிகரட்டுவான் படகுச் சேவையில் நேரமாற் றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த படகுச் சேவையில் தனியார் மற்றும் சங்கங்களின் படகுச் சேவைகள் காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் பிற் பகல் 4 மணிக்கு மீண்டும் குறி காட்டுவானில் இருந்து நெடுந் தீவுக்கும் என சேவையில் ஈடு படும்.

அரசபடகுச் சேவைகள் காலை 8.30 மணிக்கு குறிகாட்டு வானிலிருந்து நெடுந்தீவுக் கும். முற்பகல் 10 மணிக்கு நெடுந் தீவில் இருந்து குறிகாட்டுவானுக் கும் முற்பகல் 11 மணிக்கு குறி காட்டுவானில் இருந்து நெடுந் தீவுக்கும் நண்பகல் 12 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறி காட்டுவானுக்கும் பிற்பகல் ஒரு மணிக்கு குறிகாட்டு வானில் இருந்து நெடுந்தீவுக் கும். பிற்பகல் 3.30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கும் சேவையில் ஈடுபடும்.

(ம-7-313)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளருக்கு 'பாசிக்' நிறுவனத்தின் வாழ்வாதார உதவி

வடமராட்சி, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் மீள் குடியமர்வு இடம்பெற்ற வத்தி ராயன், ஆழியவளை, கட்டைக் காடு மற்றும் வெற்றிலைக் கேணி ஆகிய நான்கு கிராமங் களைச் சேர்ந்த 53 மீனவக் குடும் பங்கள் 'பாசிக்' நிறுவனத்தின் வாழ்வாதார உதவித் திட்டத் தில் இணைக்கப்பட்டுள்ளன. இவர் களுக்கு கடற்றொழில் உபகர ணங்கள் வழங்கவும் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்குரிய பயனாளிக் குடும்பங்கள் கிரா மிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்புடன் வத்திராயன் கிராமத்திலிருந்து 16 குடும்பங்களும், ஆழியவளைக் கிராமத்திலிருந்து 15 குடுபங் களும் வெற்றிலைக் கேணிக் கிராமத்திலிருந்து 11 குடும்பங் களும் கிராம சேவையாளர்கள் மற்றும் கடற்றொழில் பரிசோத கர்கள் ஊடாக இனங்காணப் பட்டு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபரின் ஒப்புதலுடன் இணைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின்கீழ் மேற் குறித்த பயனாளிகளுக்கு 18 அடி நீளமுள்ள கண்ணாடி இழைப் படகுகள் உற்பத்தி நிறுவனங் களிடமிருந்து பெறப்பட்டு குறித்த பயனாளிகளுக்கு அண்மை யில் விநியோகிக்கப்பட்டன.

இந்தப் படகுகளுக்குரிய 9.9 குதிரை வலுக்கொண்ட யமஹா வெளி இணைப்பு இயந் திரங்களை இந்தமாத நடுப் பகுதியில் பயனாளிகளிடம் வழங்குவதற்கான ஒழுங்குகளை 'பாசிக்' நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தில் வழங் கப்படும் கடற்றொழில் உப கரணங்களின் மொத்தப் பெறு மதியில் ஒரு லட்சம் ரூபா மானி யமாகவும், மிகுதித் தொகை 48 மாத இலகு தவணைக் கட்டணங் களாகவும் கொண்ட சுழற்சி முறைக்கடன் அடிப்படையி லும் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகளால் மீளளிப்பு செய்யப்படும் பணம் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங் கத்தினரால் இந்தத் திட்டத்துக் கென பிரத்தியேகமாக ஆரம் பிக்கப்படும் வங்கிக் கணக் கில் வைப்பிலிடப்படவுள்ளன.

அந்தக் கிராமங்களில் இது வரை எதுவித உதவிகளையும் பெற்றிராத குடும்பங்களுக்கு கடற்றொழில் பரிசோதகரின் ஒப்புதல் பெற்று கடற்றொழில் உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் கூறப்பட்டது.(ம-236)

# மாடுகள் திருட்டு

நவாலி, ஜூலை 7

ஆனைக்கோட்டையில் மேய்ச் சலுக்காக விடப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மாடு கள் திருட்டுப்போயுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் ஆனைக்கோட்டை சோமசுந் தரம் வீதியிலுள்ள சண்முகநாதன் என்பவர் தனக்குச் சொந்தமான மூன்று காளை மாடுகளையும் ஒரு பசு மாட்டையும் மேய்ச்சலுக் காக விட்டுள்ளார். வழமைபோல் மாலை 6 மணிக்கு வீடு வந்து சேரும் மாடுகள் இரவு நேரமாகி யும் வந்து சேரவில்லை.

அந்தப் பகுதியெங்கும் இர வோடிரவாகத் தேடியும் மறுநாள் அயல் கிராமங்களில் தேடியும் இவற்றைக் கண்டு பிடிக்க முடிய வில்லை. இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள ஆஸி. அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்

## அந்தநாட்டு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்து

ஈழத்தமிழர்களுக்காக நீதியை நாடி நிற்கும் ஆஸ்திரேலிய ஈழத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கான அரசியல், பொருளாதார அழுத்தங்களை ஆஸ்திரேலிய அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று அந்த நாட்டு தமிழ் மக்கள் சார்பில் ஆஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனிதாபிமான மீட்பு நடவடிக்கை என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை ஈவிரக்கமின்றி கொன்று, சர்வதேச போர்க்குற்ற விசாரணைக் கூண்டில் குற்றவாளியாக நின்று கொண்டிருக்கும் இலங்கை அரசு, தமிழ் மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட படுகொலைகளை மூடி மறைக்கும் பொருட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இலங்கை அரசு தான் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பும் சர்வதேச தரப்புக்கள் அனைத்துமே சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்ற மாயையை, சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது. அதுமட்டு மல்லாமல் தம்மைக்கேள்வி கேட்பவர்கள் அனைவருமே எதிரிகள் என்ற எழுதாத கோட்பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்து வருகிறது.

இவ்வாறான ஒரு நிலையில், போர்க் குற்ற அரசான மகிந்த ராஜபக்ஷ தரப்பினரின் உண்மையான முகத்தை, சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டும் ஆதாரமான சனல் -4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம்'' பெட்டக நிகழ்ச்சி, உலகின் அனைத்துப்பகுதிகளிலும் அதிர்வினை ஏற்படுத்தியிருக்கிறது. மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

அந்தப்பெட்டக நிகழ்வை ஆஸ்திரேலியாவின் முக்கியமான முன்னணி ஊடகங்களில் ஒன்றான ஏ.பி.ஸி. தொலைக்காட்சி மீள் ஒளிபரப்புச் செய்ததன் மூலம், அது தனது துணிச்சலையும் உறுதித்தன்மையையும் வெளிப்படுத்தியது. அதுமட்டுமல்லாமல் பக்கச்சார்பற்ற தனது ஊடக தர்மத்தினையும் நிலைநாட்டியிருக்கிறது.

ஜனநாயக பண்புகளையும், மனிதநேய விழுமியங்களையும் உயர்நிலையில் பேணிப்பாதுகாக்கும் ஏ.பி.ஸி. போன்ற ஊடகங்களால் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஈழத்தமிழர் பிரச்சினையின் உண்மைத்தன்மையை ஆத்மார்த்தமாக அணுகி, தாயக தமிழ் மக்களின் உரிமைகளுக்கும் வேட்கைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டினை ஆஸ்திரேலியா அரசு எடுக்கவேண்டும்.

இவ்வாறு ஆஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### வெளியீடு...



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய நான்காம் அணி மாணவர்களின் 'கடிவாளம்' என்னும் பயிற்சி இதழ் வெளியீட்டு விழா ஊடகங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ் வெளியீட்டு நிகழ்வில் ஊடகங்கள் மற்றும் பயிற்சி மைய பணிப்பாளர் தே.தேவானந்த் தலைமையுரையாற்றுகிறார். மற்றும் விருந்தினர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் என். ஞானக்குமரன், யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பொருளியல்துறைப் பேராசிரியர் வி.பி. சிவநாதன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

(எ-4)

# கல்வளை விநாயகர் ஆலய இசைத் தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 7

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் ஆலயத்தின் மீது பாடப்பட்ட ''கல்வளையான் கழல் போற்றி'' மற்றும் ''கல்வளையந்தாதி'' இசைவடிவம் என்பவற்றின் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், ஆய்வுரையை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோரும்-

ஆசியுரையை சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன், ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ ஜெயராஜா ஆகியோரும் வாழ்த்துரையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன், பிரதி அதிபர் இ. ஆனந்தநடராசா மற்றும் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் செ. நித்தியானந்தன், செயலாளர் க.செல்லையா, வேலணை கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதர் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

இசைத்தட்டின் முதற் பிரதியை ஆலய நிர்வாகசபைத் தலைவர் செ.நித்தியானந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார். இசைத்தட்டில் பங்கேற்ற பாடகர், இசையமைப்பாளர் மற்றும் கலைஞர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப் படவுள்ளனர். அத்துடன்நடன நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. கல்வளை யூர் கி. சுகந்தனின் தயாரிப்பில் இசைப் பிரியனின் இசையில் சாந்தன், சுகுமார், சந்திர மோகன், திருமதி ஜெயபாரதி, என்.தன சொரூபி ஆகியோரின் குரலில் இந்த இசைத் தட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.(வ-9)

# ஆன்மிகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

கரவெட்டி, தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் இரண்டாம் நாள் திருவிழாவில் இன்று மாலை 6 மணிக்கு ''சிவாயநம என சிந்தனை செய்வோம்'' எனும் தலைப்பில் யாழ். சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(ற-313)

**விற்பனைக்கு**

15-ஸ்ரீxxxx Full Option மிற்சுபிசி காரும் JY-xxxx பச்சை நிறமுடைய ஆட்டோவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0771514373.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை**



தாயின் மடியில்
24.05.1921

இறைவன் அடியில்
22.06.2007

திதி:07.07.2011 (ஸப்தமி)

பேச்சும் எழுத்தும் சுருக்கி - நல்
இலக்கியம் படைத்து பேர் பெற்றுயர்ந்தீர்
ஏணியாய் இருந்து எம்மை ஏற்றிவைத்து
எம் இதயத்திலெல்லாம் தெய்வமுமானீர்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்குழி. (சி/1392) குடும்பத்தினர்.

## ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்/ ஸ்ரான்லி வீதி
## *கிளைகளின் முக்கிய அறிவித்தல்*

**எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!**

உங்களின் நலன் கருதி ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்/ ஸ்ரான்லி வீதி கிளைகள் தங்களுடைய அடகுசேவையினை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் வார நாள்களில் நீடித்துள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணி வரை அடகு சேவை உட்பட விடுமுறை வங்கிச் சேவையினையும் யாழ். கிளை நடத்துகிறது.

நன்றி.

முகாமையாளர்,
ஹற்றன் நஷனல் [illegible]

உங்கள் முன்னேற்றத்தில் [illegible]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
05 ★ 05 ★ 1940



மறைவு
10 ★ 06 ★ 2011

## *அமரர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்*

(பொறியியலாளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

கடந்த 10.06.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு ஓடிவந்து ஆறுதல் கூறிய உறவுகளுக்கும், தொலைபேசி, கடிதம் மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (07.07.2011) வியாழக்கிழமை இடம்பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் (09.07.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

துரைஐயா அவனியூ,
[illegible]தமேனி,
[illegible]வேலி.

குடும்பத்தினர்.

(5533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி; அவசரகாலச் சட்டத்தை நீக்குவதில் சிக்கல்

## பிரதி அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜுலை 7

பயங்கரவாதத்தை மீண்டும் ஏற்படுத்தச் சிலர் முயற்சிப்பதால் அவசரகாலச் சட்டத்தை முழுமையாக அகற்றுவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது என பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அவர் 'லக்பிம' செய்தி ஊடகத்துக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காரணமாகவே அவசர காலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் தற்போது நாட்டில் போர் நிறைவடைந்துள்ளதனால் சட்டத்தின் சில சரத்துக்களை நீக்கிவிட முடியும்.

அவசரகாலச் சட்டத்தை எப்போது நீக்குவது என்ற தீர்மானத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே எடுப்பார்.

போர் வெற்றி குறித்த தெளிவு படுத்தும் நோக்கில் நடைபெற்ற மாநாடு தோல்வியடைந்தது எனக் கூறமுடியாது.

மேற்குலக நாடுகள் சில கலந்து கொள்ளாத போதிலும் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுடைய ரஷ்யா உள்ளிட்ட பல முக்கிய நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டன.

வெளிநாட்டு சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு அரசு ஒருபோதும் தலை வணங்கப் போவதில்லை. தொழிற்சங்க போராட்டங்களையும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை- என்றார். (ச)


# இலங்கை திரும்பிய அகதிகளை மன்னாரில் குடியேற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 7

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரை மீள்குடியேற்ற அமைச்சிடமிருந்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் பொறுப்பேற்று அவர்களை மீள் குடி யேற்றவென மன்னாருக்கு அழைத்துச் சென்றுள்ளதாக மீள் குடி யேற்ற அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் 49 பேர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் தமிழக அகதி முகாமிலிருந்து இலங்கை திரும்பினர் என மீள்குடியேற்ற அமைச்சு நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்களுக்கான அனுமதியைப் பெறுவது தொடர்பிலான பேச்சு கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.எம்.நசீர் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் ஆகியோருக்கிடையில் பேச்சு நடைபெற்றது.

# எலியந்த வைற் தண்டிக்கப்பட வேண்டும் இலங்கை மருத்துவர் பேரவை கோரிக்கை

கொழும்பு, ஜுலை 7

ஜனாதிபதியின் தனிப்பட்ட மருத்துவ ஆலோசகர் எலியந்த வைற் தண்டிக்கப்பட வேண்டுமென இலங்கை மருத்துவர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. இந்த நபர் சட்டவிரோதமான முறையில் தமது பெயருக்கு முன்னால் டாக்டர் என்னும் பதத்தைப் பயன்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எலியந்த வைற் இலங்கை மருத்துவர் பேரவையிலோ அல்லது ஆயுள்வேத மருத்துவர் பேரவையிலோ அங்கம் வகிக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் எலியந்த வைற், நோயாளிகளுக்கு மருந்துப் பொருள்களை பரிந்துரை செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எலியந்த வைற்றின் தகுதிகள் குறித்து எவ்வித தரவுகளும் கிடையாது என மருத்துவர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. முன்னணி கிரிக்கெட் வீரர் உபுல் தரங்கவிற்கு, எலியந்த வைற் பரிந்துரை செய்த மருந்துப் பொருள் காரணமாக தற்போது தரங்கவுக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மருத்துவர் பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் மட்டுமே மருந்துப் பொருள்களை பரிந்துரை செய்வதற்கு தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மருந்துப் பொருள்களை பரிந்துரை செய்யும் நபர்களுக்கு எதிராக அபராதம் மற்றும் சிறைத்தண்டனைகளை விதிக்க முடியும் என இலங்கை மருத்துவர் பேரவை தெரிவித்துள்ளது. (ச)

# 16 கல்வி வலயங்களுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

கிழக்கிலுள்ள 16 கல்வி வலயங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ரி.அப்துல்நிஸாம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வழமையாக திருகோணமலையில் நடைபெறும் இந்தப்போட்டி முதல் தடவையாக மட்டக்களப்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# கூட்டு ஒப்பந்தப்படி நடந்துகொள்ளுமாறு தோட்ட நிர்வாகத்துக்குப் பணிப்பு

மஸ்கெலியா, ஜுலை 7

கொட்டியாகலை, தோட்டத்தின் 7 ஆம் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 100 தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஹற்றன் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில், தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் தோட்டத் தலைவர்களுக்கும் இடையே நடத்தப்பட்ட பேச்சில், கூட்டு ஒப்பந்தப்படி நடந்து கொள்ளுமாறு தோட்ட நிர்வாகத்தை தொழில் ஆணையாளர் பணித்துள்ளார்.

மேலும், அந்தத்தோட்டப் பிரிவுகளில் நாள்கூலி அடிப்படையில் கொழுந்து பறிக்கும் 300 இற்கும் அதிகமான தொழிலாளர்களை தோட்டத்தில் பதிவுசெய்து அவர்களுக்கும் கூட்டுஒப்பந்தப்படி சம்பளம் வழங்குமாறும் தொழில் ஆணையாளர் பணித்துள்ளார்

கூட்டு ஒப்பந்தப்படி தொழிலாளர்கள் கடந்த காலங்களில் பறித்த கொழுந்தை விட அதிக கொழுந்தைப் பறிக்குமாறு தோட்ட நிர்வாகம் பணித்ததைத் தொடர்ந்து அவர்கள் நான்கு நாள்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ரூ. 10 லட்சம் பெறுமதியான கஞ்சா மீட்பு

கொழும்பு, ஜுலை 7

எம்பிலிப்பிட்டிய, உடவளவை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பத்து லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை கலால் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியதுடன் வீட்டிலிருந்த இருவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

விவசாயம் என்ற போர்வையில் நீண்ட நாள்களாகவே இவர்கள் இருவரும் கஞ்சா செய்கையில் ஈடுபட்டிருந்தனர் எனகலால் திணைக்கள அதிகாரி பிரபாத் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

உலர்ந்த நிலையில் 50 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் எம்பிலிப் பிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

## கிழக்கின் கல்வி நிர்வாக சேவை;

# கடமைகளுக்குத் தேவை 254 பேர் ஆனால் பணிபுரிவோர் 98 பேர் மட்டுமே!

கிழக்கு மாகாணத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்குரிய இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் கே.உடகே தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூலம் 113 அதிகாரிகளுக்கான வெற்றிடங்களும், சிங்கள மொழிமூலம் 43 அதிகாரிகளுக்கான வெற்றிடங்களும் நிலவுகின்றன. 254 அதிகாரிகள் தேவையாக இருந்தபோதிலும் 98 அதிகாரிகள் மாத்திரமே தற்போது சேவையில் உள்ளனர்.

பாடசாலை ரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்களும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கான வெற்றிடங்களும் மாகாணத்தில் உள்ள அதிபர், ஆசிரியர்களை தற்காலிக அடிப்படையில் கடமையாற்ற அனுமதித்துள்ளதன் மூலம் நிரப்பப்படுகின்றன.

இவர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான வாய்ப்பு இல்லையென மத்திய கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள 700 அதிபர், ஆசிரியர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்க எடுக்கப்பட்ட முயற்சி அமைச்சரவையின் சிபார்சுக்கமைய கைவிடப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான நியமனங்கள் போட்டிப் பரீட்சை அடிப்படையிலேயே வழங்கப்படும் என்றார். (ச)

# பதிவில்லாத 75 சிறுவர் இல்லங்கள்

கொழும்பு, ஜுலை7

நாடளாவிய ரீதியில் பதிவுசெய்யப்படாத 75 சிறுவர் இல்லங்கள் இயங்கிவருகின்றன என சிறுவர் பராமரிப்பு பாதுகாப்பு திணைக்கள ஆணையாளர் சரத் அபயகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வென்றின் மூலமே இவை குறித்து தெரியவந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சிறுவர் இல்லங்களை உடனடியாகப் பதிவுசெய்யுமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சில சிறுவர் இல்லங்கள் சிறுவர்களைப் பராமரிப்பதற்குத் தகுதியற்றவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இந்தோனேசியத் தூதர் மாத்தளைக்கு வருகை

கொழும்பு, ஜுலை 7

இலங்கைக்கான இந்தோனேசியத் தூதர் ஜாபர் ஹுசைன் நாளைமறுதினம் சனிக்கிழமை மாத்தளைக்கு வருகைதரவுள்ளார்.

மாத்தளை மாநகர முதல்வர் ஹில்மி கரீமின் விசேட அழைப்பினை ஏற்று வருகைதரும் இவருக்கு அன்றையதினம் காலை மாநகரசபையில் விசேட வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. இந்த வரவேற்பைத் தொடர்ந்து மாத்தளை மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும் கூட்டத்தில் தூதர் உரையாற்றவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தொடரும் மரக் கடத்தல்; தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சியில் மரங்களைக் களவாகத் தறித்து எடுத்துக்கொண்டு செல்வோரின் நடவடிக்கைகள் தொடர்வதாகப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் மக்களது காணிகளில் உள்ள பயன்தரு மரங்கள் மற்றும் வேம்பு, பாலை போன்ற பெரிய மரங்கள் என்பனவற்றைக் காணிகளில் ஆள்கள் இல்லாத சமயம் பார்த்து வரும் மரத்திருடர்கள் மின்சார வாள் போன்றவற்றைப் பயன்படுத்தி மெதுவாக அறுத்துத் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வயல் வெளிகளில் நிற்கும் நிழல்தரு மரங்களையும் ஆள்கள் இல்லாத வேளைகளில் இவர்கள் தறித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது. வயல்வெளிகளில் உள்ள மர நிழல்களில் தான் வயல் வேலைகள் செய்வோர் இளைப்பாறுவது, உணவு உண்பது ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தங்களது சொந்தக் காணியில் உள்ள ஒரு பட்டமரத்தைத் தேவை கருதித் தறிப்பதாக இருந்தாலும் காணிச் சொந்தக்காரர்கள் உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டியுள்ளது.

ஆனால் இப்படியாகத் திருட்டுத்தனமாக மரங்களைத் தறித்துக் கொண்டு செல்பவர்கள் இப்போதும் தமது செயற்பாடுகளைத் தொடர்கின்றார்கள் எனவும் இது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டுமெனவும் மக்கள் கூறுகின்றனர். (க-426)

# விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த தினசரிப் பத்திரிகையின் பிரதியொன்று

வவுனியா, ஜூலை 7

வவுனியாவிலுள்ள புத்தக நிலையமொன்றின் விளம்பரப் பலகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகையொன்று (உதயன் அல்ல) ஒட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரப் பகுதியிலுள்ள புத்தக நிலையமொன்றுக்குச் சென்ற ஒருவர் குறிப்பிட்ட பத்திரிகையொன்றின் பெயரைக் கூறி அதனைத் தருமாறு கேட்டார். அங்கு நின்றவர் அந்தப் பத்திரிகை முடிந்து விட்டது. இதோ இதனைப் படியுங்கள், விலையும் குறைவு என்று கூறி ஒரு பத்திரிகையை அவரிடம் திணித்தார். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு இந்தப் பத்திரிகையை விற்றுத் தரும்படி அனுப்பியுள்ளனர். நீங்களும் உதவி செய்யுங்கள் எனக் கூறினார்.

மேற்படி பத்திரிகையின் ஒரு பிரதியே விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# மன்னாரில் ஆதனவரி மதிப்பீடுகள்

மன்னார், ஜூலை 7

மன்னார் நகரசபைப் பிரிவுக்குட்பட்ட ஏழு வட்டாரங்களிலும் நேற்று புதன்கிழமை முதல் ஆதன வரி மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குடியிருப்பாளர்கள் இதற்குத் தமது முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் நகர சபை உறுப்பினர் ஆர்.குமரேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறித்த ஆதனவரி அறவீடுகள் தொடர்பாக மன்னார் நகரசபைக்குட்பட்ட மக்களுக்கு ஆசிய மன்றத்தின் உதவியுடன் அண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இந்த நிலையில் ஆசிய மன்றத்தின் உதவியுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்தினர் ஆதன வரி மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்கமைவாக மூன்று அலுவலர்கள் மன்னார் வந்துள்ளனர். 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறுகின்ற முதலாவது வரி மதிப்பீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

# முறைகேடாக எரிபொருள்கள் அதிக விலையில் விற்பனை

வவுனியா ஜூலை 7

வவுனியாவில் உள்ள சில கிரரமங்களின் வர்த்தக நிலையங்களில் முறைகேடாக எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தேவைகளுக்கென ஒதுக்கப்படுகின்ற எரிபொருள்களைச் சிலர் உள்ளூர்க் கிராமங்களிலுள்ள வர்தக நிலையங்களுக்கு முறைகேடாக வழங்கி வருகின்றனர். இதனைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தகர்கள் நகரப்பகுதியிலும் பார்க்க லீற்றர் ஒன்றுக்கு 20 ரூபா அதிகரித்து விற்கின்றனர்.

இந்த எரிபொருள்கள் தரமற்றதாக உள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (க-421)

# வவுனியா கால்நடைகள் தென்பகுதிக்குக் கடத்தல்

வவுனியா, ஜூலை 7

வவுனியாவில் கால்நடைகள் கடத்தப்பட்டு தென்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு கால்நடைகளை வளர்ப்போர் காலபோகம் முடிவடைந்ததையடுத்துத் தமது கால்நடைகளை மேய்ச்சலுக்காக அறுவடை முடிந்த இடங்களில் விட்டுப் பின்னர் மாலை வேளைகளில் வீட்டுக்கு கொண்டு செல்லுகின்றனர். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திப் பகல் வேளையில் கால்நடைகளைக் கடத்தும் சிலர் இவற்றை உடனே குருநாகல், கொழும்பு ஆகிய தென்பகுதிகளுக்கு அனுப்பிவைக்கின்றனர்.


அண்மையில் கல்லாடன்குளம், வேப்பங்குளம் பகுதியில் உள்ள ஒருவரின் தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு எருமைமாடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. ஏ-9 வீதி வழியே கடத்தப்படும் இந்தக் கால்நடைகள் உரியவர்களின் கண்களில் தெரியாமலிருப்பது இங்குள்ள மக்களிடையே வியப்பையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (க-421)

**சேவைக்குப் பாராட்டு...**



சிறந்த கௌரவம்: துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இராசேஸ்வரனின் 40 ஆண்டுகால கல்விச் சேவையைப் பாராட்டு முகமாக யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் த.யோகானந்தராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.

# வடமாகாண தமிழ் இலக்கிய விழாவை மன்னாரில் நடத்துவதற்கு முடிவு



மன்னார், ஜூலை 7

வடமாகாணத் தமிழ் இலக்கிய விழாவை இந்த முறை மன்னார் மாவட்டத்தில் நடத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.சிறிதேவி, உதவி அரச அதிபர் திருமதி மோகநாதன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபேல் ரவல், பிரதேச செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நிகழ்வுகளை மன்னாரில் நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இதன் போது ஆய்வரங்கு நிகழ்வுகளை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும், கலை நிகழ்வுகளை மன்னார் நகரசபை மண்டபத்திலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகான் நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-601)

# அல் - அஸ்கர் மகாவித்தியாலயத்தில் நவோதய வாரத்தையொட்டி நிகழ்வுகள்

மன்னார், ஜூலை 7

மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நவோதய வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக மன்னார் அல் - அஸ்கர் மகா வித்தியாலய அதிபர் எம்.வை. மாகீர் தெரிவித்துள்ளார்.

மன்னார் வலய நவோதய இணைப்பாளர் திருமதி மாலினி வெணிஸ்டனின் மேற்பார்வையின் கீழ் மன்னார் அல்- அஸ்கர் மகா வித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி முதல் நவோதய வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இது எதிர்வரும் ஏழாம் திகதி வரை தொடருமெனவும் தெரிய வருகின்றது.

முதலாம் திகதி முதல் ஆறாம் திகதி வரை பாடசாலையில் சிரமதானப் பணிகள் இடம் பெறவிருக்கின்றன.

இறுதி நாளான ஏழாம் திகதி கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறும். (க-601)

# போக்குவரத்து ஒழுங்குகள்

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி ரன்தெனிகல பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்தப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் போக்குவரத்து வசதிகளைப் பெறவிரும்புவோர் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கல்வி அபிவிருத்திப் பிரிவில் தம்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரவல் மண்ணால் வீதிகள் அமைப்பு; மக்களோ கிரவல் புழுதியில் குளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சியிலுள்ள ஜெயந்தி நகர், திருநகர் வீதிகள் தார் எதுவும் ஊற்றப்படாது கிரவல் மண்ணைக் கொண்டு புனரமைக்கப்பட்டு வருவதனால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த வீதிகள் முன்னர் மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காட்சியளித்தன. தற்போது இராணுவத்தினரின் உதவியுடன் கிரவல் போட்டுப் புனரமைக்கப்படுகின்றன.

இந்த வீதிகளில் வாகனங்கள் செல்லும்போது கிரவல், புழுதியாக மேலெழுந்து எங்கும் பரவுகின்றது. இதனால் இந்த வீதிகளில் பயணிப்போரும், வீதிக்கருகிலுள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகள், மரங்கள் என்பனவும் புழுதி நிறத்தில் மாற்றமடையும் நிலை தோன்றியுள்ளது. மேலும் மழை பெய்யும்போது இதில் செல்வோரின் நிலை மிக மோசமாகக் காணப்படுகின்றது.

நாட்டின் வடக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் மிகவும் சிறப்பான முறையில் அபிவிருத்தியடையும் இந்த வேளையில் இங்குள்ள வீதிகளுக்குத் தார் கூட ஊற்றப்படாமல் வெறும் கிரவல் மண்ணைக்கொண்டு நிரப்பப்படும் அவலநிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க -426)

# கிளிநொச்சியில் தேங்கிக் கிடந்த 200 முறைப்பாடுகள் விசாரணைக்கு

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் தேங்கிக் கிடந்த 400 முறைப்பாடுகளில் 200 முறைப்பாடுகளை உடனடியாக விசாரணைக்கு உட்படுத்துமாறு கிளிநொச்சி முல்லைத்தீவு ஆசிய மாவட்டங்களின் உதவிப் பொலிஸ்மா அதிபர் நீலுகலூவத்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள், திருட்டுச் சம்பவங்கள், துஷ்பிரயோகச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்து குற்றவாளிகளை இனங்கண்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# கைவிடப்பட்ட வாகனங்களை பார்வையிடுமாறு முல்லைத்தீவு அரச அதிபர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஜூலை 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் நடவடிக்கைகளின் போது பொதுமக்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட ஒரு தொகுதி வாகனங்களின் விவரங்களை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து பார்வையிடலாம் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

தங்களது வாகனங்களை அடையாளம் கண்டறிந்த உரிமையாளர்கள் உரிய படிவத்தினைப் பிரதேச செயலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்திய பின்னர் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட வாகனங்கள் பார்வைக்கு விடப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலத்தினுள் எடுத்துச் செல்லப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

# வாகனங்களின் இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் வாகன இலக்கத் தகடுகளுக்கு விண்ணப்பித்த ஒரு தொகுதியினருக்கு இலக்கத் தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் HS - 3261, JD - 2956, GK - 5857, JI - 8049, HH -1972, GB - 6935, JA - 2692, HN - 3580, JR - 0244, QG - 0050, GS - 9196, NC - 9998, ND - 4959, LB - 5412, HA - 5494, HO - 9748, GR - 5908, HQ - 7170, HF - 3050, NA - 0858, GV - 1366, QF - 0270, GO - 0091, HS - 7316, GU - 9938, NA - 0890, HV - 4337, JK - 3165, NC -4210, QH - 0837, YA - 6217, QZ - 7496, QH - 9068, GG - 9788, QM - 9642, QF - 9416, JC - 6608, HQ - 7859, NC - 6253, HK - 2838, PD - 7676, PC - 5409, HF - 3769, JC - 7843, GR - 0348, NC - 3998, JI - 6743, JZ - 7364, GZ - 8063, HT - 3637 ஆகிய இலக்கத் தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றின் வாகன உரிமையாளர்கள் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி, அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகிய ஆவணங்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ம-313)

# ஏய்க்கப்படும் வன்னித் தொண்டர் ஆசிரியர்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு,வடமராட்சி கிழக்கு ஆகிய ஆறு கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் கற்பித்து வரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு மட்டுமே கடந்த காலங்களில் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தின் போது நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட ஆறுகல்வி வலயங்களும் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் கடந்த காலங்களில் இருந்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் போன்ற ஆறு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் 750 வரையான தொண்டர் ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் ஆசிரியர்கள் பற்றாக் குறை காரணமாக இன்று கூட சில பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை புதிது புதிதாக நியமிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை தொண்டர் ஆசிரியர்களின் உன்னதமான அர்ப்பணிப்பான சேவை காரணமாக சமாளிக்கப்படுகின்றது. அதிலும் கிராமப்புறம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களின் சேவை காரணமாகவே மாணவர்கள் தொடர்ந்தும் கற்க முடிகிறது.

வன்னி பகுதி போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்கு புதிதாக நியமனம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் கூட அங்கு நீண்ட காலம் சேவையாற்ற விரும்புவதில்லை.

சேவையாற்ற நிர்ப்பந்தம் ஏற்படும் பட்சத்தில் அவர்கள் குறித்த சில காலம் மாத்திரமே சேவையாற்றுவதுடன் எப்போது இடமாற்றம் கிடைக்க வேண்டும் என்ற மனநிலையுடனேயே உள்ளதனையும் காணலாம்.

தொண்டர் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் தமது சொந்தப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு

**ஆசிரியர் என்பவர்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் கல்வி கற்பித்து ஒளியேற்றுபவர்கள். ஆனால் இவர்கள் பத்து, பன்னிரண்டு வருடங்கள் சேவையாற்றி எந்தப் பலனுமே இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்கான ஊதியமுமில்லை. இதனை யார்தான் கேட்பார்கள்?**

வருகின்றார்கள். அதிலும் வசதி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த பாடசாலைகளிலேயே சேவையாற்றி வருவதனைக் காணலாம்.

சேவை மனப்பாங்குடன் கற்பித்து வரும் தொண்டர் ஆசிரியர்கள் பலர் தமது வாழ்நாட்களை கற்பித்தல் தொழிலிலேயே செலவிட்டுள்ளார்கள். இவர்கள் இதில் இருந்து விலகிச் சென்று வேறுவேலை தேடுவதில் பல்வேறுபட்ட சிக்கல்கள் நிறைந்து காணப்படுகின்றன.

வன்னிப் பகுதியில் பல வகையான கஷ்ட துன்பங்களையும் எதிர் நோக்கியபடி கல்வியைக்கற்றவர்கள் தான் தொண்டர் ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டு இன்று வரை நியமனம் எதுவும் வழங்கப்படாத நிலையில் தொடர்ந்தும் துன்பப்படுகின்றார்கள். வன்னிப் பகுதியில் நடைபெற்ற யுத்தம் காரணமாகப் பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்து சென்று தமது உடைமைகள் அனைத்தையும் இழந்து உறவுகளையும் இழந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்த போது கூட நலன்புரி நிலையப் பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் ஆசிரியர் இல்லாததால் கற்க முடியாத நிலை காணப்பட்டபோது இந்தத் தொண்டர் ஆசிரியர்களைத்தான் கல்வி அதிகாரிகள் தொடர்ந்தும் சேவையில் இணைத்துக் கொண்டார்கள்.

நலன்புரி நிலையங்களிலேயேயும் எதுவித உதவு தொகைகளும் இன்றி கல்வியைக் கற்பித்து வந்தார்கள். இவர்களது சேவையின் முக்கியத்துவத்தையும் இவர்களது நிலையையும் அறிந்து கொண்ட அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சிலநலன்புரி நிலையங்களில் கற்பிக்கின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு சிறு உதவு தொகைக் கொடுப்பனவு வழங்க முன் வந்திருந்தன.

ஆனாலும் சில கல்வி அதிகாரிகள் அடிப்படையான உதவு தொகை எதுவும் வழங்கப்பட வேண்டாம், வழங்கி அவர்களைக் குழப்ப வேண்டாம், அவர்கள் கொடுப்பனவு இன்றி சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் அவர்களது சேவை உரிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டவுடன் தேவைப்படாது.

என்று கூறி நிறுத்தி இருந்தார்கள். இதனைத் தொண்டர் ஆசிரியர்கள் இன்றுகூடக் கூறி கவலைப் படுவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

தொண்டர் ஆசிரியர்களில் பலருக்குத் திருமணமாகிப் பிள்ளைகளும் உள்ளனர். வருமானம் எதுவும் இல்லாத நிலையில் இவர்கள் கஷ்டப்படுவதனையும், நியமனம் கிடைத்தால் தான் வாழ்க்கை என்ற நிலையில் பல தொண்டர் ஆசிரியர்கள் காத்திருப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இவர்களுள் திருமணம் ஆகாது உள்ளவர்களும் தொண்டர் ஆசிரியர்களாக நீண்ட காலம் சேவையாற்றியமையால் வயது கூடிச் செல்லும் நிலையில் குடும்பப் பொறுப்புக்களுக்கு மத்தியில் தமது நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதையும் காணலாம்.

இவர்களுடன் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் இப்போது தொண்டர் ஆசிரியர்களாக உள்ளவர்களைப் பார்த்து உங்களுக்கு இன்னும் நியமனம் கிடைக்கவில்லையா? உங்களுக்கு ஒருகாலமும் நியமனம் கிடைக்க மாட்டாது. போன்ற வார்த்தைகளைக் கூறி அவர்களின் மனங்களை நோகடிக்கின்றனர்.

வன்னியில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் சிலரைச் சந்தித்த போது அவர்கள் தமது கருத்துக்களை பின்வருமாறு கூறியிருந்தார்கள்.'' நான் ஒரு ஆண். வன்னிப் பகுதியில் உள்ள வசதி வாய்ப்புக்கள் அற்ற ஒரு பாடசாலையில் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எவ்வித கொடுப்பனவும் அற்ற நிலையில் பல துன்பங்களுக்கு மத்தியிலும் தொண்டர் ஆசிரியராக எனது சேவையைத் தொடர்ந்த வண்ணமே உள்ளேன் கடந்த காலங்களில் நடைபெற்ற ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வுகளிலும் தோற்றியிருந்தேன். ஆனாலும் கல்வித் தகைமைகள் உட்பட்ட அனைத்துத் தகைமைகள் இருந்தபோதும் கூட எனக்கு நியமனம் வழங்கப்படவில்லை. நான் திருமணம் ஆகிய நிலையில் எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களது கல்விச் செலவு, எமது குடும்பத்தின் ஏனைய செலவுகள் போன்றவற்றுக்கு சிரமப்பட வேண்டிய நிலையில் உள்ளேன்.

சுயன்

கடந்த 13 வருடங்களாக நான் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றி வருகின்றமையால் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் வேறு வேலை எதற்குமே முயற்சிக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம்

### பொதுமக்கள்

பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை அதிகரிப்புக்குக் காரணம் பொதுமக்கள் தான். சமுதாயத்தில் பெண்ணானவள் தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக, தோழியாக என பல்வேறு பரிமாணங்களாக திகழ்கின்றாள். இப்படியான பரிமாணங்களில் அவள் வாழ முற்படும்போது சமுதாயத்தில் உள்ளவர்களால் பல வகைப்பட்ட வன்முறைகளுக்கு ஆளாகின்றாள்.

என்ன தான் பெண்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்கினாலும் சமுதாயம் என்னவோ அவர்களுக்கெதிராக சில வன்முறைகளை கட்டவிழ்த்து விடுகின்றது. தொழில் செய்யும் இடங்களிலும் வீடுகளிலும் வன்முறைகள் இடம்பெறமால் இல்லை. இந்த வன்முறைகளைத் தாமாகவே தேடி விட்டு அதிகாரிகளைக் குற்றம் சொல்வது தவறு. இப்போதெல்லாம் பொது இடங்களில் கூட வன்முறைகள் பெண்களுக்கு நடக்கின்றன. சிலர் அதனை தட்டிக் கேட்கின்றனர். சில பெண்கள் அதனை ஏற்றுக் கொண்டு வாழ்வை நடத்துகின்றனர். தங்களின் உண்மையான பலம் என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் நகைக்கும், பகட்டுக்கும் ஆடம்பரத்துக்காகவும் தங்களைத் தாமே கீழ்மைப்படுத்திக் கொள்கின்றனர். இதுவே அவர்களுக்கெதிராக பொதுமக்களால் அதிகரிக்கப்படும் வன்முறைகளுக்கு காரணமாக அமைகின்றது.

ஆ.வதனா,
கரவெட்டி.

### அதிகாரிகள்

வளர்ந்து வரும் உலகில் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி வரும் தற்போதைய காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்புக்கு காரணமாக அதிகாரிகள் விளங்குகின்றனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச அலுவலகங்களில் கடமை புரியும் அதிகாரிகள் பின்தள்ளி நிற்பதுடன் அவர்களே தவறு செய்பவர்களாகவும் உள்ளனர். இந்தச் செயல் வேலியே பயிரை மேய்வது போல் ஆகிவிடுகின்றது.

அதேபோல வன்முறைகளைத் தடுக்க வேண்டிய பொது மக்கள் வீணான பிரச்சினைகளுக்கு அஞ்சி ஒதுங்கி நிற்கிறார்கள். நீதிக்காக வாதாட வேண்டியவர்கள் பார்வையாளராக மட்டும் இருப்பதால் பெண்கள் மீதான வன்செயல்கள் அதிகரிக்கின்றன. எனவே இவை எதிர்கால சந்ததியினருக்காக அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் முன்னின்று தடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பது எனது அபிப்பிராயம்.

ஞான. சுகிர்தா,
கைதடி மேற்கு

## கவனிக்க வேண்டியவை...!

- காலை நேர அலுவல்களைக் குறைக்க 15 நிமிடங்கள் முன்னதாக எழுந்து விடுங்கள்.
- மழை காலங்களில் வெளியே செல்லும்போது குடைகளை எடுத்துச் செல்ல தவறாதீர்கள்.
- சாவி தொலைந்தால் தேடும் பதற்றத்தைக் குறைக்க அதே போன்ற வேறு ஒரு சாவியை தயார் செய்து வையுங்கள்.
- தளர்வான ஆடைகளை அணியுங்கள்.
- பூக்களை வாங்கி அதன் வாசனைகளை நுகர்ந்து கொள்ளுங்கள்.
- பெரிய வேலைகளை கொஞ்சம் கொஞ்சமாக செய்து முடியுங்கள்.
- ஞாப சக்தியின் மீது நம்பிக்கை இருந்தாலும் முக்கியமான விஷயங்களை எழுதி வையுங்கள்.
- மறு நாள் செய்ய வேண்டிய வேலைகளை முயற்சி செய்து முந்தைய நாள் இரவு செய்து முடியுங்கள்.
- தோற்றத்திலும் ஆடை அணிவதிலும் கவனம் செலுத்துங்கள்.
- குழந்தைகளோடு ஓய்வு நேரத்தை செலவிடுங்கள்.
- இசையை அனுபவியுங்கள்.
- கவிதை படியுங்கள்.
- தினமும் 10 நிமிடங்கள் ஆழ்ந்து மூச்சு விடுங்கள்.
- மாதம் ஒரு முறையாவது கும்பத்தினருடன் வெளியே செல்லுங்கள்.
- ஒவ்வொரு மாதமும் வீட்டில் ஒரு செடியையாவது நட்டு வளருங்கள்.

சா.ஜீந்துஜா,
குமரகோட்டம், கோண்டாவில்.

பன்னிரண்டாவது விவாத மேடையில் பல்கலைக்கழக மாணவருக்கு வழங்கப்படும் லைமைத்துவப் பயிற்சி தவறானது எனும் அணி வெற்றி பெற்றுள்ளது.

இதில் தவறானது எனும் அணிக்காக 1076 வாக்குச் சீட்டுக்களும் சரியானது எனும் அணிக்காக 823 வாக்குச் சீட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

தவறானது எனும் அணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
- நா.துவாரகா
- கரன்
- க.கலையரசி

விவாத மேடைக்குச் சிறந்த ஆக்கங்களை அனுப்பியோர்
- ஜீவன்
- லோ.யஜேந்திரராஜ்
- சி.சுஜிதா

சிறந்த தொடர் ஆக்கத்தை அனுப்பியவர்
- அனோஜனா சிறிமகாதேவன்

சிறந்த கவிதையை அனுப்பியோர்
- பி.கலையரசி

சிறந்த ஆக்கத்தை அனுப்பியோர்
- கிருஸ்ணசாமி துர்க்கா
- ச.பகீரதன்

## விருதுகள்

ஒவ்வொரு துறைகளிலும் சாதனை பெறும் சாதனையாளர்களுக்காக, இறந்து போன விஞ்ஞானிகள், மருத்துவர்கள் போன்ற பிரபலமானவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் பெயரைக் கொண்டே விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுகள் தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் சாதனைபடைக்கும் வீரர்களுக்கு அவர்களைக் கௌரவம் செய்யும் முகமாக வழங்கப்படுகிறது.

இந்த விருதுகளில் ''நோபல் விருது'' முதன்மையான விருதாகும். சுவீடன் நாட்டைச் சேர்ந்த நோபல் என்னும் விஞ்ஞானியின் ஞாபகார்த்தமாக வருடம் தோறும் உலக சமாதானம், மருத்துவம், இலக்கியம், இரசாயனவியல், வேதியியல் , இயற்பியல் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அடுத்து ''ரமன் மக்சேஸ விருது'' இது விமான விபத்தில் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் அதிபர் ரமன் மக்சேஸ அவர்களின் நினைவாகவருடாந்தம் சிறந்த சமூகப்பணி, அரசபணிகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படுகிறது.

அடுத்து புலிஸ்டர் விருது நியூயோர்க் வேல்ட் (New york world) எனும் பத்திரிகை ஆசிரியரான ஜோப்புலிட்ஸரின் நினைவாக ஐக்கிய அமெரிக்காவில் வருடம்தோறும் பத்திரிகை, நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படுகிறது.

இந்த விருதுகள் பரிசுகள் எனவும் அழைக்கப்படும். இவை சாதனையாளர்களைக் கௌரவப்படுத்தவும் மேலும் அவர்களை ஊக்குவிப்பதாகவும் வழங்கப்படுகின்றன. தற்போது வேறு புதிய விருதுகளும் வழங்கப்படுகின்றன. சில விருதுகள் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச விருதுகள் போலவே உள்நாட்டு விருதுகள் பலவும் வழங்கப்படுகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

ஹரிரூபி

## பொறுமையின் அவசியம்

பொறுமை மனிதனுக்கு மிக மிக அவசியமானது. இது பெறுமதி வாய்ந்த பொக்கிஷம். பொறுமையை தக்க தருணத்தில் பயன்படுத்துபவர்கள் அனைவராலும் புகழப்படுவர். அவர் அனைவராலும் விரும்பப்படுவார்.

எடுத்ததற்கெல்லாம் கோபப்படுபவர்கள் இந்த பொறுமை என்னும் பொக்கிஷத்தின் பெறுமதியை உணராதவன் என்றே கூறலாம். அன்பு, அடக்கம் என்பன பெறுமதியின் முக்கிய அம்சங்களே ஆகும்.

இவை மனிதனை நல்வழிப்படுத்தும் தீய செயல்களில் இருந்து அதாவது வீண் பேச்சுக்கள், சண்டை, சச்சரவுகள் என்பவற்றால் ஏற்படும் விபரீதங்களிலிருந்து பொறுமை எம்மை பாதுகாக்கின்றது. பொறுமையானவனையே இறைவனும் விரும்புகின்றான். நாங்கள் ஒருவனிடம் பணமோ, வீடோ, அழகோ இருக்கின்றது என்று பொறாமைப்படாமல் அவனது தரத்துக்கு முன்னேற வேண்டும் என்ற இலட்சியம் உள்ளன. எப்போதாவது அவன் அவனுடைய தரத்துக்கு மேல் கூட முன்னேறலாம்.

எனவே நாமும் பொறுமையைக் கடைப்பிடித்து இம்மையிலும் மறுமையிலும் நற்பண்புகளைக் கடைப்பிடித்து உலகில் ஒரு நல்ல பிரஜையாக வாழ்வோமாக.

ப.தயாளன்,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

### துரோகங்கள்

உறவுகள்
குலைக்கப்படுகின்றன
உணர்வுகள்
சிதைக்கப்படுகின்றன
கனவுகள்
கலைக்கப்படுகின்றன
கருத்துக்கள்
மறுக்கப்படுகின்றன
நினைவுகள்
மறக்கப்படுகின்றன
ஆனால்....
துரோகங்கள் மட்டும்...
மனதில்
பொறிக்கப்படுகின்றன

### இந்த நிலை மாறுமா...?

நிர்க்கதியற்று நிம்மதியிழந்து
நீதியிழந்து நியாயமிழந்து
நேர்மையும் புதைந்து போனது!
பெற்றோரையிழந்து
உற்றார், உறவாரையிழந்து
உற்ற நண்பரையுமிழந்து
உருக்குலைந்து
உணுறக்கமின்றி
தினம் தேம்பியழும் - இந்த
நிலை மாறு[illegible]

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம் பொதுமக்களா? அதிகாரிகளா?**

பொது மக்கள்? ☐ அதிகாரிகள்? ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
அடையாள அட்டை இல. ..............................
..............................

உங்கள் தீர்ப்புக்களை 28.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை: வர்த்தமானி சரத்துகளில் மாற்றம் தேவை

## செல்வராசா எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 7

இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தலில் தமிழ் பேசும் விண்ணப்பதாரிகள் பலர் புறக்கணிப்புக்கு உள்ளாகும் வகையில் சில சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சர் டபிள்யூ. டீ. ஜோன் செனவிரட்னவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

வாகரை பிரதேச செயலாளர் கட்டடத்தை திறந்துவைக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டீ. ஜோன் செனவிரட்ன வருகைதந்த போதே அவரை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா நேரில் சந்தித்து இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் 2009இல் தோற்றிய தமிழ் பேசும் விண்ணப்பதாரிகள் எவரும் சித்தியடையவில்லை. இதனால் தமிழ்ப் பகுதிகளில் நிர்வாக சேவைக்கு அதிகாரிகளை நியமிப்பதில் அதிக பிரச்சினை ஏற்பட்டிருந்தமை தொடர் பாக தமிழ் அரசியல் வாதிகளின் அழுத்தம் காரணமாக தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிப்பதற்கு ஒரு விசேட போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்தது.

இதன்படி கடந்த மாதம் 24 ஆம் திகதி அரச வர்த்தமானியில் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்தப் பரீட்சைக்குத் தகைமையுடையவர்கள் தமிழ் மொழி மூல பட்டதாரிகளாக இருக்கவேண்டும். அத்துடன் பட்டதாரி பரீட்சையில் தமிழ்மொழி ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேநேரத்தில் தமிழ் பேசும் விண்ணப்பதாரிகளில் பலர் விஞ்ஞானம், கணிதம், வர்த்தக முகாமைத்துவம், விவசாயம் ஆகிய பாடநெறிகளைப் பயின்ற பட்டதாரிகள், ஆங்கில மொழிமூலம் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள்.

ஆகவே இப்படியான பாடநெறிகளில் பட்டப்படிப்பை முடித்தவர்கள் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

ஆகவே, இவர்களும் இந்தப்போட்டிப் பரீட்சைக்குப் பங்குகொள்வதற்கு வசதியாக 24ஆம் திகதிய வர்த்தமானியின் சரத்துகளை மாற்றவேண்டும் என்று அமைச்சரிடம் நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வராசா கோரியுள்ளார். அதையடுத்து, அமைச்சர் தனது செயலாளரை அழைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவுடன் தொடர்பு கொண்டு, இவ்விடயம் குறித்து கலந்துரையாடி, நடவடிக்கை எடுக்கும்படி பணிப்புரை வழங்கியுள்ளார்.

## உரையாடல்...



இந்தியாவின் சேவா எனப்படும் சுயதொழிலுக்கான பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தத்தினால் கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்டவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

# சப்ரகமுவ மாகாணத்தில் நுளம்பை அழிக்க பீ.ரீ.ஐ.பக்டீரியாவைப் பயன்படுத்த அனுமதி

இரத்தினபுரி, ஜூலை 7

சப்ரகமுவ மாகாணத்தில் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுப்பதற்கு பீ.ரீ.ஐ. பக்டீரியாவைப் பயன்படுத்த சுகாதார அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

டெங்குநோய் காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் இதுவரை 540 பேர் பாதிக்கப்பட்டு, அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 299 பேர் டெங்குநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக எம்பிலிப்பிட்டி பிரதேசத்திலேயே அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை பலாங்கொடையிலும் டெங்குநோய் வேகமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# விவசாயக் காணிகளை மீட்குமாறு கோரிக்கை

திருகோணமலை,ஜூலை 7

கிண்ணியா பிரதேசத்தில் உள்ள விவசாயிகளின் பூர்வீக சொத்தான வாழைமடு, சுண்டியாறு, கல்லறுப்பு, செம்பிமோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள விவசாயக் காணிகளை விவசாய செய்கைக்காக மீட்டுத் தருமாறு கோரி கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்காணிகளைப் பயிர்ச்செய்கைக்காக துப்புரவு செய்வதற்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் தடையாக இருக்கின்றனர். பிரதேச விவாசாயிகளின் காணிகளை 'ஏனையோர்'களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# வாய்க்குழிப் புற்றுநோய்கள்


**புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 7**

*வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை "(TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.*


**(நேற்றைய தொடர்ச்சி...)**

வாய்க்குழியானது உதடுகள், முரசு, சொக்குப்பகுதி, வல்லண்ணம், நாக்கின் முன் 2/3 பகுதி மற்றும் நாவின் கீழ் உள்ள அடித்தளப் பகுதி என பல பகுதிகளைக்கொண்டுள்ளது. (படம்: 1,2)

வாய்குழியின் அமைப்பு




வாய்குழியின் அமைப்பு





இலங்கையில் வயதான ஆண்களில் அதிக அளவு வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் புற்றுநோய் ஏற்படுகிறது. (படம் 3)

வாய்க்குழிப்புற்று நோயின் முன்னிலைகளாக உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிறமான தழும்புகள் ஆரம்ப காலத்தில் காணப்படும். இவற்றை நீங்களே கண்ணாடியில் பார்த்து இலகுவில் இனம் கண்டு கொள்ளலாம். இவ்வாறான புற்றுநோய் முன்னிலைகளுடன் ஆரம்ப நிலையில் உள்ள வாய்க்குழிப் புற்று நோயும் இழையப் பரிசோதனை மூலம் அறியக்கூடியதாக இருக்கலாம். ஆரம்பநிலைகளில் புற்றுநோயைக் கண்டறியும் இடத்து பூரண குணமாக்கல் முறையிலான சிகிச்சை பெறலாம் அவ்வாறின்றிப் பிந்திய நிலைகளில் புற்றுநோய் இனங்காணப்படுமிடத்து சிகிச்சை பெரிதும் பயனளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

வாய்ப்புற்று நோய் ஏற்படுவதற்கான காரணிகள்

- வெற்றிலை, பாக்கு, புகையிலை மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றை மெல்லுதல் அல்லது அதிகநேரம் வாய்க்குழியில் வைத்திருத்தல்.
- சுருட்டு, சிகரெட், பீடி புகைத்தல்
- மதுபானம் அருந்துதல் - கசிப்பு சாராயம் மற்றும் புளித்த கள் அருந்துதல்
- அதிக உறைப்பான உணவு உண்ணுதல்
- ஒழுங்கற்ற வாய்ச்சுகாதாரம்
- வாய்க்குழி மேலணியானது தொடர்ந்து உறுத்துதலுக்கு அல்லது உராய்வுகளுக்கு உள்ளாதல் மூலம் புற்றுநோய் நாளடைவில் ஏற்படும். இவ்வாறான உறுத்துதல் - கூரான அல்லது உடைந்த பற்களினாலோ சரியான அளவில் செய்யப்படாத செயற்கைப் பற்களினாலோ அல்லது பற்சூத்தை நிரப்பப் பயன்படுத்திய பதார்த்தங்கள் உடைவதால் ஏற்படும் கூரான மேற்பரப்பினாலோ ஏற்படலாம்.

ஆண்களில் பொதுவான புற்றுநோயின் பரம்பல்




(படம்: 3)

- வாய்க்குழியின் மேலணி இரசாயனப் பதார்த்தங்களுடன் தொடுகையிடுதல் குறிப்பாக விவசாயிகள் பீடை நாசினி வீசும் போது உணவு உட்கொள்ளல் அல்லது விசிறும் இயந்திரத்தில் அடைப்பு ஏற்படுமிடத்து குழாயை வாயால் உறுஞ்சுதல் என்பன பீடை கொல்லி இரசாயனத்தின் தொடுகையை அதிகம் ஏற்படுத்தும்.
- சூரிய ஒளியின் அல்றா வயலட் (UV) கதிர்த்தாக்கத்தால் உதடுகளில் குறிப்பாக கீழ் உதட்டில் புற்று நோய் ஏற்படலாம்.
- போசாக்கு குறைந்த உணவு உட்கொள்ளல். குறிப்பாக விற்றமின் AE மற்றும் சுவட்டுத்தாதுப் பொருள்கள் குறைவாக உட்கொள்ளல் வாய்க்குழி மேலணியை உருக்குலைச் செய்யும். இதனாலும் புற்றுநோய் இலகுவில் உருவாகும்.

வாய்க்குழிப்புற்று நோயின் அறிகுறிகள்

- வாய்க்குழியில் காணப்படும் உயர்ந்த தடித்த வெண்ணிறமான அல்லது சிவப்பு நிறமான தழும்புகள்
- வாய்க்குழியின் மேலணிக் கலசத் தோல் கழன்று போதல்
- உதடுகளிலோ அல்லது வாய்க்குழியிலோ வளரும் தசைத்தொகுதி
- மாறாது தென்படும் புண்
- உணவை மெல்லுவதிலோ விழுங்குவதிலோ ஏற்படும் சிரமம் அல்லது வலி
- வழமைக்கு மாறான இரத்தக்கசிவு
- பற்களின் உறுதித்தன்மை தளருதல் - குறிப்பாக முரசில் அல்லது அதனை அண்மித்து ஏற்படும் புற்றுநோயால் இத்தன்மை ஏற்படும்



படம்: 4 நிணநீர் கணு நிலைகள்

மேலும் மிகவும் பிந்திய நிலைகளில்.....

- தாடையை அசைப்பதில் கஷ்டம் ஏற்படல்
- நாக்கு பூரணமாக அசைக்க முடியாதவாறு வாய்க்குழியுடன் ஒட்டுப்படுதல்.
- கழுத்துப் பகுதியின் நிணநீர்க் கணுக்கள் வீக்கம் அடைதல்

**புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். பெருமைக்காக சில செலவுகளைச் செய் வீர்கள். நேற்று நடந்த சம்பவம் ஒன்றை நினைத்து, இன்று சந்தோஷம் அடைவீர்கள். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என, பயம் கொள்ளலாம். பிள்ளை களுக்காக கணிசமான பணத்தை செலவழிப்பீர்கள்.

**இடபம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்ல லாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள். சிறிய விஷயங்களுக்காக, பெரிய அளவில் அலட்டிக் கொள் ளும் சிலரைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். பிள்ளைகள் விட யங்களில், அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில், சந்தோஷம் தரும் செய்தி களைக் கேட்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தெரி யாமல் சில காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர் களுக்கு கிடைக்காத ஒன்று உங்களுக்குக் கிடைக்கலாம். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான பணி யில் இருப்போர் கடும் அலைச்சல்களுக்கு ஆஷ்படலாம்.

**கடகம்:** முயற்சிகளில் தடை தாமதங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். கனி வான பேச்சுக்களால் கல்மனம் படைத்த சிலரிடமும் காரியம் சாதிப்பீர்கள். சில விடயங்களில் கொடுத்த வாக்கைக் காப் பாற்ற முடியாமல், சாக்குப்போக்குச் சொல்லி சமாளிக்கலாம். வெளியூர்களிலிருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம்.

**சிங்கம்:** எந்த வேலையையும், மற்றவர்கள் பாராட்டும் வகை யில் செய்ய முற்படுவீர்கள். குடும்ப பெரியவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீங்கள் கேட் காமலேயே உறவினர்கள் சிலர் உதவி செய்யலாம். பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும்.பெண்கள் கடும் வேலை நெருக்கடி களுக்கு ஆள்படலாம். சகோதர பாசம் கூடும். உற்சாகம் பெறும் நாள்.

**கன்னி:** அடுத்தவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள். சிறிய காரியம் ஒன்றுக்காக, பல முறை அலைய நேரிடலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் மட் டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை, நேரில் சந்திக் கும் வாய்ப்பு கிடைக்கும். உறவினர் ஒருவரின் வீட்டிற்கு எதிர் பாராமல் செல்லலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண் டிய நாள்.

**துலாம்:** பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். சந்தோஷ மான செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள் சிலர் உங் களுக்காக பிணை கொடுக்கலாம். மனைவி, குழந் தைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர் கள். கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்வீர்கள். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். வசதி,வாய்ப்பு கூடும் நாள்.

**விருச்சிகம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்ப டைக்க வேண்டாம். உறவினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் ஈடுபடலாம். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங் களுக்கும் அறிமுகமாகலாம். இறை வழிபாடு மூலம் அமைதி பெறுவீர்கள். சோம்பல் கூடும்.

**தனுசு:** குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு, அதிகமாகச் செலவாகலாம். தொழில் ரீதி யாக உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட் டலாம். பெற்றோர் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றை, சோம்பலால் மாற்றி அமைப்பீர்கள். இடம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையலாம்.

**மகரம்:** குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். உங் களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றா மல் இழுத்தடிக்கலாம். பிரியமான உறவினர்கள் சில ரிடம், சண்டை போடும் சூழ்நிலை உருவாகலாம். முக் கியமான வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். வீண் பிடிவாதங்களை தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடி கொள்ளும் நாள். சுபகாரிய விடயங்களில் முன்னேற் றம் காணப்படும். சில வேலைகளுக்காக சிரமப்பட நேரிட்டாலும், அதனால், கணிசமான ஆதாயம் பெறலாம். வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். உடன் பணிபுரி வோர் அனுசரணையாக நடந்து கொள்வர். ஆதாயம் பெறும் நாள்.

**மீனம்:** பிள்ளைகளால் வீட்டில் மகிழ்ச்சி,சந்தோஷம் அதி கரிக்கும் நாள். மாமன், மைத்துனர்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பழைய வாகனங்களை மாற்றி விட்டு, புதிய வாக னங்கள் வாங்கப், போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரர் களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி, பாசம் அதிகரிக்கும்.

# சீனாவுக்கு நன்றியுடை[illegible] மஹிந்த...

**கொழும்பைத் தளமாகக் கொண்ட சண்டே [illegible] எழுதியுள்ள கட்டுரையின் [illegible]**

கடந்த மாதம் சென் பீற்றஸ்பேக்கில் இடம் பெற்ற அனைத்துலக பொருளாதார மாநாட் டின்போது சீன அதிபர் கூ ஜின்ரோ மற்றும் ரஷ்ய அதிபர் டிமிற்றி மிட்வடேவ் (Sri Lankas friends & Dimitry Medvedev and Hu Jintao) ஆகியோரது அரவணைப்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இருந்த அதே காலப் பகுதியில் பிரிட்டிஷ் அரச தலைவர் டேவிற் கமறோன் மற்றும் அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட கருத்துக்கள் மஹிந்தவுக்குக் கசப்பாக அமைந்தன.

போரின் இறுதி நாள்களில் இலங்கை அரச படை யினர் மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங் கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற் காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளுக்கு எதிரான தங்களது முழுமையான ஆதரவு என்றும் இருக்கும் என்று ரஷ்ய மற்றும் சீனத் தலைவர்கள் மஹிந்தவிடம் உறுதியளித்திருக்கிறார்கள்.

ஐ.நாவின் இந்த முனைப்புக்களுக்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற மேற்கு நாடு கள் தங்கள் ஆதரவை வழங்கி நிற்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

இலங்கை அரசு ''போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உடனடித் தீர்வுகாணவேண் டும்'' என்றும் ''அது நல்லிணக்கத்தை நாடிநிற்கும் இந்த வேளையில் தனக்கிருக்கும் அனைத்துக் கடப் பாடுகளையும் முன்னெடுப்பதற்குத் தயாராக இருக்கி றேன் என்பதை வெளிப்படுத்தவேண்டும்'' எனவும் கடந்த புதனன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம் மஹிந்த அரசைக் கோரியிருக்கிறது.

''இலங்கை அரசானது தனக்கான இந்தப் பணியை மேற்கொள்ளத் தவறுமிடத்து ஏனைய வழிவகைகள் தொடர்பாக ஆராயுமாறு கோரும் அனைத்துலக சமூகத்தின் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கும்'' என்று இராஜாங்கத் திணைக்களம் தொடர்ந்து குறிப்பிட்டி ருந்தது.

இறையாண்மையுள்ளதொரு தேசத்திடம் இது போல் வேண்டுகையை விடுப்பதற்கான தார்மீக உரிமை அல்லது அனைத்துலக சட்டத்தின் பிரகாரம் அமைந்த உரிமை ஏதேனும் அமெரிக்காவும் அதனது நட்பு நாடுகளும் இருக்கிறதா என்ற கேள்விகள் முன்னரைப் போலவே மீளவும் எழும். இலங்கையி னதும் மேற்கு நாடுகளதும் வெளிநாட்டுக் கொள்கை யில் இது ஒரு புள்ளியை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது.

### சங்காய் அமைப்பில் இலங்கை

கசஹஸ்தானின் அஸ்தனாவில் (Astana, Kazakh stan) இடம்பெற்ற சங்காய் ஒத்துழைப்பு நிறுவனத் தின் மாநாட்டில் (the Shanghai Cooperation Organi sation &SCO) கலந்துகொண்ட பின்னர் அங்கிருந்து தான் ரஷ்ய அதிபரும் சீனப் பிரதமரும் அனைத்துலக பொருளாதார மாநாட்டில் பங்கெடுப்பதற்காக சென் பீற்றஸ்பேக்குக்கு வந்திருந்தார்கள்.

சங்காய் அமைப்பு முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஆறு நாடுகளைத் தன்னகத்தே கொண்டி ருக்கிறது. மத்திய ஆசியப் பிராந்திய நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பில் சீனாவும் ரஷ்யாவும் முதன்மையான நாடுகளாகத் திகழ்கின்றன.

சங்காய் அமைப்பில் இலங்கைக்குப் பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மை நம்மில் பலருக்குத் தெரியாது. இந்தியா, பாகிஸ்தான், ஈரான் மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளுக்கும் சங்காய் அமைப்பில் பார்வையாளர் அந்தஸ்து வழங் கப்பட்டிருக்கிறது.

மத்திய ஆசியாவின் பாதுகாப்புத் தொடர்பில் அதிகம் கரிசனைகொள்ளும் இந்தச் சங்காய் அமைப் பில் அங்கம் வகிக்கும் மத்திய ஆசியப் பிராந்திய நாடுகளுக்கு அருகாக இருக்கும் மேற்குறித்த இந்த நாடுகள் சங்காய் அமைப்பில் பார்வையாளர் அந் தஸ்து கோரியது ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

ஆனால் சீனாவிலிருந்து வெகு தூரத்துக்கு அப் பால் இந்து சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் இலங்கை சங்காய் அமைப்பில் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற முனைந்தது ஏன்? சீனாவின் காலைச் சுற்றி யிருக்கும் கொழும்பினது விருப்பத்தையே இது காட் டுகிறது.


தாங்கள் இலங்கைக்கு எப்போதும் உறுதுணையாக இருப்போம் என சீன மற்றும் ரஷ்யத் தலைவர்கள் சென் பீற்றஸ்பேக்கில் வைத்து ஜனாதிபதி ராஜபக்ஷ வுக்கு வழங்கிய உறுதி மொழிக்கு அதிக முக்கியத்தும் கொடுக்கப்பட்டுச் செய்திகள் வெளியிடப்பட்டி ருந்தன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கொழும்புடன் கடும்போக்கைக் கைக் கொண்டுவரும் மேற்கிலிருந்து விலகிச்செல்லும் இலங்கை, மேற்கு - எதிர் சக்திகளான சீனா மற்றும் ரஷ்யாவை நோக்கி அதிகம் ஈர்க்கப்படுகிறது.

### ராஜபக்ஷவின் இராஜதந்திரம்

ஜனாதிபதி மஹிந்தவுடன் மேற்குலகம் முட்டி மோதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. மகிந்தவின் இராஜதந்திரச் செயற்பாடுகள் நலிவடைந்திருப்பதும் ஒரு காரணம்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்



தைத் தொடர்ந்து இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இனக்கொலை யில் ஈடுபட்டதாகக்கூறி இந்திரா காந்தியும் பின்னர் ராஜீவ் காந்தியும் குற்றம் சுமத்தியிருந்தார்கள்.

எந்தவொரு நாடும் அப்போது ஜெயவர்த்[illegible] வுக்கு உதவுவதற்குத் தயாராக இருக்கவில்லை. இடம் பெற்றது எதுவோ அதனை அவ்வாறே ஒப்புக் கொண்டார் ஜெயவர்த்தனா.

இருந்தும் தான் முன்னெடுத்துவந்த அளவில் பெரிய மகாவலித் திட்டத்துக்கான மேற்கின் நிதியுத வியையும், புதிய நாடாளுமன்றம் மற்றும் ஜெயவர்த் தனபுர நகரத்தைக் கட்டுவதற்கான ஜப்பானின் நிதி யுதவியையும் அவர் தங்கு தடையின்றிப் பெற்றி ருந்தார்.

இலங்கைக்குத் தனது படைத்தளபாடங்களை விற்பனை செய்வதில்லை என்ற முடிவை அமெரிக்கா எடுத்தபோது, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத் தில் இஸ்ரேலிய நலப் பிரிவு என்ற ஒன்று அமைக் கப்பட்டது.

இதன் ஊடாக கொழும்பு தனக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள் அனைத்தையும் பெற்றுக்கொண் டது. ஏன் இஸ்ரேலிய இராணுவத்தினர் இலங்கைப் படையினருக்குப் படைத்துறைப் பயிற்சிகளைக்கூட வழங்கியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பென்றும் அவர்கள் சிறுவர்களைக்கூடப் படையில் திரட்டுகிறார்கள் என்றும் தங்களது பரப் புரைகள் ஊடாக மேற்குலகத்தை நம்பவைத்த முன் னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மேற்குலக நாடுகளில் பலவற்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்படுவதற்கு வழிகோலினர்.

### இணைத்தலைமை நாடுகளை வெளியேற்றியமை

விடுதலைப் புலிகளுடனான பேச்சை நெறிப் படுத்திக்கொண்டிந்த இணைத்தலைமை நாடுகளை வெளியேற்றியதுடன் ராஜபக்ஷவின் நலிந்த இராஜ தந்திரப் பயணம் ஆரம்பித்தது.

இதற்கானதொரு சூழமைவு இல்லாததொரு புற நிலையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் ஊடானதொரு தீர்வை எட்டுவதற்கே இந்த இணைத் தலைமை நாடுகள் முனைந்தன.

இல[illegible]
முட்[illegible]
சீன[illegible]
மேற்[illegible]
இரு[illegible]
போ[illegible]
உத[illegible]
மஹ[illegible]
எதி[illegible]
வெ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கு
# டையவரா
# ந....?

ண்ட சண்டே லீடரில் ஹாமினி வீரக்கோன்
கட்டுரையின் தமிழாக்கம்.



**இலங்கை தொடர்பில் மேற்குலகம் முட்டிமோதும் அணுகுமுறையைக் கைக்கொள்வதற்குப் பிரதான காரணம் சீனாதான். இன்றைய நிலையில் மேற்குலக வல்லரசுகளுக்கு சவாலாக இருக்கும் ஒரேயொரு தரப்பு சீனாவே. போரின்போது சீனவின் படைத் தளபாட உதவிகள் இல்லையெனில் மஹிந்தவால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றிபெற்றிருக்கமுடியாது.**

இந்த நிலையில் எந்தவித பலனையும் பெற்றுத் தராத இணைத்தலைமை நாடுகளின் செயற்பாடு களை நிறுத்த வேண்டும் என்ற மஹிந்தவின் வாதம் சரியானது.

ஆனால் மேற்குடனான உறவைத் தொடர்ந்தும் பேணுவதற்கு மஹிந்த ஒன்றும் கதிர்காமர் இல்லையே. இந்த நிலையில் இணைத்தலைமை நாடுகளுடனான உறவைத் தொடர்ந்தும் பேணுவதற்கு எந்தக் கதிர் காமரும் முனையவில்லை. மேற்குடனான இலங்கை யின் உறவு இங்குதான் பிசுபிசுக்க ஆரம்பித்தது.

**சீனாவின் நுழைவு**

இலங்கை தொடர்பில் மேற்குலகம் முட்டிமோதும் அணுகுமுறையைக் கைக்கொள்வதற்குப் பிரதான காரணம் சீனாதான். இன்றைய நிலையில் மேற்குலக வல் லரசுகளுக்கு சவாலாக இருக்கும் ஒரேயொரு தரப்பு சீனாவே.

போரின்போது சீனா வழங்கிய படைத் தளபாட உதவிகள் இல்லையெனில் மஹிந்தவால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றிபெற்றிருக்க முடியாது.

ராஜபக்ஷவின் பலவீனத்தைச் சீனா தனக்குச் சாதகமாக்கிக்கொண்டது. மஹிந்த அர சுக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப் படுவதற்கு நெடு நாள்களுக்கு முன்னரே அவரது ஆட்சிக்கு எதிரான மனித உரிமைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட் டுக்கள் மேற்கால் முன்வைக்கப்பட்டிருந்தன.

மனித உரிமைகளைக் காரணம்காட்டி மேற்கு வழங்குவதற்கு மறுத்த ஆயுத தளபாடங்களை வழங் கிய சீனாவுக்கு மஹிந்த எப்போதுமே நன்றியு டையவராகவே செயற்பட்டார்.

பல ஆண்டுகளின் பின்னர் திருப்பிச் செலுத்த வேண்டிய நீண்ட காலக் கடனாகவே சீனா இலங்கைக் கான உதவிகள் பலவற்றை வழங்குகிறது. இதனால் நாட்டுக்கு ஏற்படும் செலவு மற்றும் செலுத்தவேண் டிய வட்டி. என்பன தொடர்பில் நாட்டு மக்களுக்கு எது வும் தெரியாது.

தகவல் சுதந்திரச் சட்டமூலப் பிரேரணை அண்மையில் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்டபோது அது ஆளும் தரப்பால் தோற் கடிக்கப்பட்டிருந்தது. இது ஒன்றும் ஆச்சரியத் திற்குரிய விடயமன்று.

அண்மைய ஆண்டுகளில் சீனா பல பில்லியன் கணக்கான டொலர்களைச் இலங் கைக்குக் கடனாக வழங்கியிருக்கிறது. அம் பாந்தோட்டை அபிவிருத்தி வலயத்தை அமைப்பதற்காக 1.5 பில்லியன் டொலர் களைச் சீனா கடனாக வழங்கியிருக்கிறது.

இதுவிடயம் தொடர்பாக உலக அரசியல் மீள் பார்வை என்ற இணைய வழிச் சஞ்சி கைக்கு ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் தின் பேராசிரியர் சுவரான் சிங் கடந்த வாரம் கருத்துரைத்திருந்தார்.

இந்தத் திட்டமானது "அதிக நன்மைகளைப் பெற்றுத்தரக்கூடிய வர்த்தக ரீதியிலான வாய்ப்பு" என வாதிடப்படுகின்ற போதும் இது மூலோபாயச் சிக்கல்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்று பேராசிரியர் சுவரான் சிங் குறிப்பிடுகிறார்.

இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற் றங்களுக்காகச் சீனா இலங்கைக்கு முண்டு கொடுத்து நிற்கிறது. தான் இலங்கைக்கு எதி ரான மேற்கொள்ளும் உதவிகளுக்கு அல்லது தந்து நிற்கும் ஆதரவுகளுக்கு உள்நோக்கம் எதுவுமில்லை என்கிறது சீனா.

அதாவது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா வகுத்திருக்கும் முத்துமாலை மூலோபா யத்தின் ஓர் அங்கமாக இந்தத் திட்டங்கள் இல்லை எனச் சீனா வாதிடுவதாக பேராசிரியர் சுவரான் சிங் கூறுகிறார்.

வீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற் காக 500 மில்லியன் டொலரையும், அனல் மின்நிலைய விரிவாக்கத்துக்காக 891 மில்லி யன் டொலர்களையும் உட்கட்டுமான அபிவி ருத்திக்காக 3 பில்லியன் டொலர்களையும் கடனாக வழங்குவதற்குச் சீனா உடன்பட் டிருக்கிறது.

**இரண்டாவது பெரிய பொருளாதாரம்**

ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்ததாக உல கின் இரண்டாவது பெரும் பொருளாதார சக்தி யாக சீனா உருமாறியிருப்பதாகவும் ஓரிரு ஆண்டுகளில் அது அமெரிக்காவையும் முந்தி விடும் என்றும் சொல்லப்படுகிறது.

உலகின் முதல்தர பொருளாதார நாடாக சீனா மாறும் என்ற எதிர்பார்ப்பு தற்போது பெரும் பாலானவர்கள் மத்தியில் காணப்படுகிறது.

இலங்கை தனது அண்மைய வரலாற்றில் மேற்குடன் முட்டிமோதும் அணுகுமுறையைக் கைக்கொள்ளும் சூழமைவில் சீனாதான் உல கின் முதன்மையான பொருளாதார சக்தியாக மாறும் என்ற எண்ணம் இலங்கையர்கள் மத்தி யில் பரவலாகக் காணப்படுகிறது.

வர்த்தகம் மற்றும் ஏனைய பொருளாதார விடயங்களில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஏனைய மேற்கு நாடுகளுக்கும் பதிலாக சீனா வைப் பயன்படுத்துவதற்கு இலங்கையால் முடியுமா?

இலங்கையின் அதி முக்கியமான வர்த்தகப் பங்காளராக இன்னமும் ஐக்கிய அமெரிக்கா தான் இருந்துவருகிறது. இலங்கையின் மொத்த வெளிநாட்டு ஏற்றுமதியில் 22.1 சதவிதமா னவை ஐக்கிய அமெரிக்காவுக்கும் 12.1 சதவீத மானவை பிரிட்டனுக்கும், 5.2 சதவீதமானவை ஜேர்மனிக்கும், 4.9 சதவீதமானவை பெல்ஜி யத்துக்கும் 4.8 சதவீதமானவை இத்தாலிக்கும், 4.5 சதவீதமானவை இந்தியாவுக்கும் ஏற்றுமதி யாகின்றன.

இந்த நிலையில் தனது வெளிநாட்டு ஏற்று மதியில் 50 சதவீதமான சந்தையை இழப்பதற்கு இலங்கை தயாராக இருக்கிறதா என்பதுதான் தற்போது எழுகின்ற கேள்வி.

(வளரும்)

## நடமாடும் கோயிலுக்கு நிவேதனம்



தினமும் கோயிலுக்குப்போய் சுவாமியைத் தரிசனம் செய்தால் மட்டும் பக்தி உள்ளவர்கள் என் றாகி விடமுடியாது. தேங்காய் பழம் தந்து அர்ச்சனை செய்தல், கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்து மன ஒருமைப்பாட்டு டன் இறைவனைத தியானித்தால் போதுமா? திருநீறு அணிந்தால் உருத்திராட்சமாலை அணிந்தால், குங்குமப்பொட்டு இட்டுக்கொண்டால் பக்தி உண்டாகியதாக ஆகிவிடுமா?

தேவார திருவாசகம் திவ்விய பிரபந்தப் பாராயணம் செய் தால் போதாது என்கிறார் கவியரசர் இரவீந்திரநாத்தாகூர். இருட்டறையில் இருந்துகொண்டு சாம்பிராணிப் புகை போடுவதாலோ மந்திரங்களை முணுமுணுப்பதாலோ ஜெப மாலையை உருட்டுவதாலோ கடவுளைக் கண்டுவிட முடி யாது. ஏர் செலுத்தும் உழவர்கள், மண்வெட்டிப் பாவித்து விளைவிப்பவர்கள். வீதிகள் அமைக்கும் பணியில் ஈடுபடுபவர்களுடன் நின்று பாருங்கள் அங்கே கடவுளைத் தரிசிக்கலாம்.

நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலி என்ற நூலிலேயே தாகூர் இவ்வாறு கூறியுள்ளார்.

'உழைப்பே கடவுள் என்ற கருத்தை இதன்மூலம் வலி யுறுத்துகிறார்.

ஒரு பெரிய பணக்காரர் புதிதாக வாழைத்தோட்டம் ஒன்றை அமைத்தார். முதலில் கிடைக்கும் வாழைக்குலையை முருகனுக்கு அளிப்பதாக நேர்த்தி வைத்தார். அவ்வாறே முதல் குலையை வெட்டி வந்து பழுக்க வைத்தார். பழக்குலையில் 120 கனிகள் இருந்தன.

தன் பண்ணையில் வேலை செய்பவனை அழைத்து அவ னிடம் வாழைக்குலையைக் கொடுத்து கோயிலில் கொடுத்து விட்டு வருமாறு பணித்தார். 10 கிலோ மீற்றர் சுமந்து செல்ல வேண்டும். அவனுக்கு செலவுக்குப் பணம் கொடுத்து அனுப்பவேணடும் என்று அவருக்குத் தோன்றவில்லை.

தூக்கிச் சென்ற பண்ணைக் காவலருக்குப் பசித்தது. பொறுத்துப் பார்த்தார். முடியவில்லை. இயலாத நிலையில் நான்கு பழங்களைத் சாப்பிட்டுவிட்டார். மிகுதிப் பழக்குலையை கோயிலில் ஒப்படைத்தார்.

பழத்தைப் பெற்றுக்கொண்ட கோயில் நிர்வாகி "தாங்கள் அனுப்பிய பழங்களில் நான்கு பழங்கள் தவிர ஏனைய பழங் கள் கிடைத்தன" அன்று 116 பழங்களைப் பெற்றுக்கொண்ட தாக பற்றுச்சீட்டில் எழுதியிருந்தார்.

இதைப் பார்த்த பண்ணையாளர் கோபங்கொண்டு கொதித் தெழுந்தார். நான்கு பழங்களைத் சாப்பிட்ட கைவலிக்கும் வரை பண்ணைக் காவல்காரனுக்கு அடி அடி என்று அடித்து விட்டார். தான் சாப்பிட்டது பண்ணையாளருக்கு எப்படித் தெரிந்தது? பண்ணையாளர் கடவுள் பக்தி மிக்கவர். அதனால்தான் அவருக்குத் தெரிந்திருக்கிறது என்று காவல்காரன் பயந்து போய் விட்டான்.

பண்ணைக் காவல்காரனை அடித்த களைப்பு அதிகமாகப் பண்ணையார் தூங்கிவிட்டார். தூக்கத்தில் கனவு வந்தது கனவில் முருகன் தோன்றினர். பண்ணையார் தொழுதார். முருகன்! "நீ அனுப்பிய நான்கு பழங்களும் வந்து சேர்ந்தன; நான் உண்டு மகிழ்ந்தேன்" என்றார்.

அப்போதுதான் பண்ணையாளருக்குப் புத்தி வந்தது. ஏழைப் பண்ணைக் காவலாளியின் பசியைத் தீர்த்த நான்கு பழங்களைத்தான் முருகன் தன் கணக்கில் வரவு வைத்தவை. பண்ணையாளர் முருகனிடம் மன்னிப்புக் கேட்டார்.

பசியில் வாடுபவர்களின் பசியைப் போக்குவதே இறை வனுக்கு நாம் படைக்கும் நிவேதனம். குடம்குடமாகப் பாலைக் கோயிலில் கொட்டுவதைவிட ஏழையின் வயிற்றுக்கு சிறிதளவு கஞ்சி ஊற்றினாலே ஏழு ஜென்மங்களுக்கும் நன்மை பயக்கும்.

உண்மை ஆன்மீகம், நடமாடும் மனிதனின் மனித நேயமே கடவுளின் இலட்சியம்.

ஒரு பிச்சைக்காரன் கருணை மிகுந்த மனிதாபிமானி.யிடம் வந்து தன் கஷ்டங்களைக் கூறினான். அவர் அவனுக்குக் கை நிறையப் பொருள்களைக் கொடுத்து அனுப்பினார். வாராவாரம் அந்தப் பிச்சைக்காரன் திரும்பிவந்து தன் கதை யைக் கூறிப் பொருள்களை வாங்கிக் கொள்வான்.

அந்த மனிதாபிமானி "எப்படியும் உனக்கு உதவி செய்யப் போகிறேன்- ஏன் நீ வாராவாரம் உன் கதையைச் சொல்ல வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் "நீங்கள் கோடீஸ்வரராக இருக்கிறீர்கள். எப்படி கோடீஸ்வரராக இருப்பது என்று நான் உங்களுக்குச் சொல்லித்தர முயற்சி செய்தேனா? இல்லையே. அதுபோல எப்படிப் பிச்சைக்காரன் இல்லாமல் இருப்பது என்று நீங்கள் எனக்குச் சொல்லித்தராதீர்கள்" என்றான். பழக்கம் அவ்வளவு எளிதில் விடக்கூடியது அல்ல.

சு.கி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



பூ. பரமதயாளன்,
சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

பரீட்சை இலக்கம்: 8

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:.......................... வினாத்தாள்-11 நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

* எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடை அளிக்குக.

* 1 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து இத்தாளில் விடையளிக்குக.

01. கீழ்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை தருக.

வண்ண வண்ண பூச்சியே
வண்ணத்துப் பூச்சியே!
வடிவான உன் சிறகை - யார்
உனக்குத் தந்தது?

பூவின் மேலே நீயிருந்தால்
இன்னொரு பூ பூத்ததென்று
எண்ணி ஏமாறும் நாங்களெல்லாம்
உன்னழகை இரசிக்கின்றோம்.

1) இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பொன்றை இடுக.
.........................................................................................

2) பூவின் மேலே பூத்திருக்கும் இன்னொரு பூ எது.
.........................................................................................

3) பாடலில் வந்துள்ள அடுக்குத்தொடர் ஒன்று தருக.
.........................................................................................

4) "உன்னழகை" என்பதைப் பிரித்தெழுதுக.
.........................................................................................

5) பூச்சியே என்பதன் பன்மைச் சொல்லைத் தருக.
.........................................................................................

6) பாடலில் வந்துள்ள பன்மை வினைச்சொல் எது.
.........................................................................................

* ஒத்த கருத்துச் சொல் தருக.

7) பூ - .........................................

8) அழகு - .........................................

02. பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக எழுதுக.

1) நான் பாடம் படித்தேன். : .......................................

2) மரம் முறிந்து கீழே விழுந்தது. : .......................................

03. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

1) அடம்பன் கொடியும் .......................................

2) இளமையிற் கல்வி .......................................

04. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

1) சந்தையில் மாம்பழம் வாழைப்பழம் என்பன வாங்கினேன்

2) நாளைக்கும் வருவீர்களா

05. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1) வண்ணத்துப்பூச்சி - .......................................

2) கரும்பலகை - .......................................

06. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) மீஹர(க்)கா - .......................................

2) நவய - .......................................

07. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1) நாம் தவிர்க்க வேண்டிய மன நிலைகளுள் ஒன்று,
1. தைரியம் 2. மகிழ்ச்சி 3. பொறாமை

2) வருடத்தில் இரண்டு தடவைகள் பூக்கும் தாவரம்,
1. மாமரம் 2. வாழை 3. மல்லிகை

3) எமது நாட்டின் தேசிய பறவையாக காணப்படுவது,


1)


2)


3)

4) பயிர்களுக்கு நன்மை செய்யாத பிராணி,
1. தேனீ 2. செண்பகம் 3. அணில்

5) வீட்டு ஈயினால் பரவும் நோய்,
1. மலேரியா 2. வாந்திபேதி 3. சிக்கன்குன்யா

6) இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை,
1. 25 2. 24 3. 9

7) பின்வருவனவற்றில் ஈரூடகவாழி,
1. ஆமை 2. உடும்பு 3. கொக்கு

8)



இக் குறியீடு உணர்த்துவது,
1. முன்னால் பாதையில் வேலை நடைபெறுகிறது.
2. சிறுவர்கள் விளையாடுமிடம்.
3. முன்னால் கல் உடைக்குமிடம்.

9) இலங்கையின் தேசியக்கொடியில் காணப்படும் ஒன்று,
1. தர்மச்சக்கரம் 2. நெற்கதிர் 3. அரசிலைகள்

10) இரவில் மலரும் பூவொன்று,
1. தாமரை 2. கடுபுல் 3. நான்குமணிப்பூ

11) அனைவரும் விரும்பக்கூடிய முகபாவம்,


1)


2)


3)

12) பறக்கும் முலையூட்டி
1. காகம் 2. மயில் 3. வௌவால்

08. பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை எழுதுக.

1)




.......................................

2)



.......................................

09. தோட்டமொன்றில் முதல் நான்கு மாதங்களில் பறிக்கப்பட்டதேங்காய்களின் எண்ணிக்கைகளை வரைபு காட்டுகிறது. வரைபினை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




1) நான்கு மாதங்களிலும் பறிக்கப்பட்ட மொத்த தேங்காய்கள் எத்தனை?
(.......................................)

(17 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆரம்பமாகுமா கண்சிகிச்சை பிரிவு?

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கண் சிகிச்சைப்பிரிவு மீண்டும் ஆரம்பமாகுமா என வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் அங்கலாய்க்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் முன்னர் பிரதி திங்கட்கிழமைகளில் யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி க.குகதாசனால் சிகிச்சை வழங்கப்பட்டது.

வாராந்தம் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் பொதுமக்களும் சிகிச்சை பெற்று வந்தனர்.

பல மாதங்களாக கண் சிகிச்சை நிபுணர் இந்த வைத்தியசாலைக்கு வருகை தராததால் பிரதேச மக்களும் மாணவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்கின்றனர்.

இதனால் அவர்கள் போக்குவரத்தில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி மாணவர்கள் பாடசாலை செல்லும் காலநேரங்களும் வீணாவதாகக் கூறுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர்களில் ஒருவர் மாதத்தில் இரு தடவையாவது இந்த வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சையளிக்க மாட்டார்களா எனப் பொது மக்கள் கேட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் உள்ள தனியார் சிகிச்சை நிலையத்துக்கு நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர்கள் அரச வைத்தியசாலையில் கண் நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்கத் தயங்குவது ஏன் எனவும் கேட்டுள்ளனர்.

தனியார் வைத்தியசாலைக்கு வரும் கண்சிகிச்சை பெறுவோர்மீது காட்டும் அக்கறை வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் பெறவருவோர் மீது காட்டப்படுவதில்லை என்று மக்கள் கவலை கூறுகின்றனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான பார்வை 20 இற்கு 20 செயல் திட்டம் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தச் செயற்திட்டத்துக்கென ஒவ்வொரு பாடசாலையிலும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் பயிற்சி பெற்ற வைத்திய அதிகாரிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு கண் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆசிரியர்களால் மாணவர்கள் பரிசோதனை செய்யப்பட்டுப் பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்கள் இனங்காணப்படுவர்.

இதனையடுத்து அந்த வலயத்தில் உள்ள ஒரு பாடசாலையில் கண் பரிசோதனை நிலையத்தை இயங்குக்குவதற்குரிய கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வலய ரீதியாக மாணவர்கள் பரிசோதிக்கப்படுவர்.

2020 ஆம் ஆண்டு எந்தவொரு மாணவனும் பார்வையில் குறைபாடு உள்ளவர்களாக இருக்கக்கூடாது என்ற இந்தத் திட்டம் சகல கல்வி வலயங்களிலும் மேற்கொள்வதற்கு வசதியாக ஒவ்வொரு கல்வி வலயத்திலும் பரிசோதனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரிசோதனையில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர். இங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அந்தப்பகுதில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். அங்கு கண் சிகிச்சை நிபுணரினால் பரிசோதிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகிய ஆதார வைத்தியசாலைகளிலும் சங்கானை பிரதேச வைத்தியசாலையிலும் விசேட கண் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதற்கான உபகரணங்களும் மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விசேட கண் சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் மாணவர்களைப் பரிசோதிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

20இற்கு 20 செயற்றிட்டத்தின் கீழ் அனைத்து வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலைகளுக்கு கண்சிகிச்சை நிபுணர்கள் செல்வார்களா என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது.

வைத்திய நிபுணர்கள் உரிய காலங்களில் வைத்தியசாலைகளில் இன்மையால் மாணவர்கள் தொடர்ந்து நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போவது நிச்சயமே.

இந்த நிலையில் இவ்வாறான செயற்பாடுகளும் பயனற்றுப் போகும் என்று பெற்றோர் கூறுகின்றனர்.

வெளிநாடு ஒன்றின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில் பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கவும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய மாணவர்களுக்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான இலவச உதவிகளைக் கருத்தில் கொண்டாவது வைத்திய நிபுணர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். ✱

**தென்னவன்**

---


(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2) ஜனவரி மாதத்தினை விட ஏப்ரல் மாதத்தில் எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன? (..............................)

3) மாதந்தோறும் ஏற்படும் அதிகரிப்பிற்கு ஏற்ப ஜூன் மாதம் எத்தனை தேங்காய்கள் பறிக்கப்படும்? (..............................)

4) மாதந்தோறும் பறிக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இவ்வரைபு பற்றிய உமது கருத்து யாது?
(..............................)

10. மிகப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 
உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாகத் தருக?
(..............................)

2) 1205 என்ற எண்ணைச் சொற்களில் எழுதுக?
(..............................)

3) பெட்டி ஒன்றில் 9 லட்டுகள் உள்ளன. அவ்வாறான 8 பெட்டிகளில் எத்தனை லட்டுகள் காணப்படும்? (..............................)


4) ஒரு மாணவனுக்கு 3 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 312 அப்பியாசக் கொப்பிகளை எத்தனை மாணவர்களுக்கு கொடுக்கலாம்?
(..............................)


5) நிகழ்வொன்றில் 425 பேர் கலந்துகொண்டனர். இதில் 206 பேர் பெண்களாவர் எனின், அந்நிகழ்வில் கலந்துகொண்ட ஆண்கள் எத்தனை பேர்?
(..............................)

6) கூட்டுக. 1/4 + 1/2 =
(..............................)

7) வரிசையொன்றில் நடுவில் நிற்கும் வாசுகிக்கு முன்னால் 12 பேர் நிற்கின்றனர். எனின், அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நிற்கின்றனர்?
(..............................)

8) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.
(..............................)




9) 
1. இவ்வுருவின் பெயர் என்ன?
(..............................)

2. இதற்கு எத்தனை விளிம்புகள் உள்ளன?
(..............................)

11. "மரங்களை நட்டுப் பயன் பெறுவோம்" என்ற தலைப்பில் ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலைத் தொடர்பும் திருத்தமாக அமைய வேண்டும்.

1) ..............................................................................
..............................................................................

2) ..............................................................................
..............................................................................

3) ..............................................................................
..............................................................................

4) ..............................................................................
..............................................................................

5) ..............................................................................
..............................................................................

6) ..............................................................................
..............................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களில் சுதேச மருத்துவ முகாம்கள் நடத்துவதால் பயன் பெற்றுவரும் மாணவர், பொதுமக்கள்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

நவக்கிரி அரச மூலிகைத் தோட்டமும் அதனோடு இணைந்த செயற்பாட்டு முன்னெடுப்புக்களும் சுதேச வைத்தியம் தொடர்பாக வடபகுதி மக்கள் மத்தியில் முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல நோக்கு கொண்டனவாக உள்ளன.

* மூலிகைகளை வளர்த்து அவற்றையே மூலப்பொருளாகக் கொண்டு அச்சுவேலி சுதேச மருத்துவ மூலிகை மருந்து உற்பத்தி நிலையத்தில் மருந்துகளைத் தயாரித்தல்.
* சமூகத்தில் மூலிகை மருந்து, மூலிகை உணவு வகைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
* பாடசாலைகள், வீடுகள் மற்றும் அலுவலக வீட்டுத் தோட்டங்களில் மூலிகைப் பயிர் இனங்களை வளர்த்தல்.
* மூலிகைப் பயிர், வேர், தண்டு மற்றும் இலைகளைச் சேகரித்து வழங்குவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வருமானத்தை பெருக்குதல்.
* சூழலில் உள்ள மூலிகைப் பயிர் இனங்களை இனங்கண்டு பாதுகாப்பதற்கு உரிய சமூகச் சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக வீட்டுத் தோட்டப் போட்டிகளில் மூலிகைப் பயிர்களுக்கு சிறந்த புள்ளிகள் போடப்பட்டு வீட்டுத் தோட்டப் போட்டி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளில் மாதிரி மூலிகைத் தோட்டங்கள் நிறுவப்பட்டு, அதற்கு சுதேச வைத்தியத் திணைக்களம் ஊக்குவிப்புத் தொகைகளையும் வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றது.




இந்தவகையில் வலி. கிழக்கில் உள்ள அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாதிரிப் பாடசாலை மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மூலிகை வேர்கள், தண்டுகள், இலைகள் ஒரு கிலோ 500 ரூபாவுக்கு குறையாத விலையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பொதுமக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

மூலிகை உணவுப் பயன்பாடு என்ற வகையில் நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளக்கூடிய மூலிகைகள் இனங் காணப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன. சுதேச மருத்துவ முகாம்களை கிராம மட்டத்தில் நடத்தி இலைக்கஞ்சி மூலிகைப்பானம் என்பன மாணவர்கள், பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்துடன் பொது வைபவங்களில் நன்னாரிக் குளிர்பானம், மூலிகை பிஸ்கட், மூலிகை போஷாக்கு உணவு என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களின் நிலையிலும் மற்றும் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் வலயக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் மட்டத்தில் முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மூலிகை உணவுப் பழக்கமும் சுதேச மருந்துப் பாவனையும் உரிய முறையில் பயன்படுத்தப்படும்போது ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க முடியும்.

சுதேச மருத்துவம் தொடர்பாக ஓய்வு பெற்ற வடக்கு, கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளரும், பரம்பரை சுதேச மருத்துவரும், சுதேச மருத்துவ மற்றும் விஞ்ஞானப் பட்டதாரியுமான வைத்திய கலாநிதி எஸ்.உரோமகேஸ்வரன் (சுதுமலை வைத்தியர்) கருத்துத் தெரிவிக்கையில்:

மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிர் இனங்களின் ஆரோக்கியமான நல்வாழ்வுக்காக இறைவனால் படைக்கப்பட்டவை மூலிகைகள். மூலிகைகளின் பயன்பாடு அமைதியான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிப்படுத்தும். அந்த வகையில் வாழ்ந்து வந்த சமூகம் இன்று குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளது. சுதேச வைத்தியத்தில் இன்று மக்களுக்கு முழுமையான நம்பிக்கை இல்லாமல் போனதற்கு ஒரு வகையில் சுதேச மருத்துவர்களும் காரணமாகின்றனர்.

**ஞான ஆதவன்**

சுதேச மருத்துவத்தை கற்று வைத்தியச் செயற்பாடுகளை மேற் கொள்பவர்கள் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதும் காரணமாக அமைகின்றது.

சுதேச மருத்துவம் கற்றவர்கள் பரம்பரை வைத்தியர்கள் முழுமையாக சுதேச மருந்துகளை, மூலிகைகளை பயன்படுத்த முன்வர வேண்டும். அது அவர்களையும் வளரச் செய்து, அவர்கள் கற்றுக் கொண்ட சுதேச வைத்தியத்துறையையும் வளரச் செய்யும் எனக் கூறினார்.

நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தின் அமைப்பும் அதனோடு இணைந்த செயற்பாட்டு முன்னெடுப்புக்களும் வட பகுதி மக்கள் மத்தியில் சுதேச வைத்தியத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

(தொடரும்)


ஓம் குருநாதா துணை,
ஓம் நாகப் பசுவாமி துணை

யாழ். தென்மராட்சி - வரணி, மாசேரி
திருவருள் மிகு புராதன குருநாதர் கோயில்
மகா பொங்கல் திருவிழா
விஞ்ஞாபனம் - 2011

குருநாதர் மெய்யடியார்களே!

ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்பசுவாமி சமாதியைக் கொண்டு விளங்கும் எமது பூர்வீக ஆலய கரவருஷ மகா பொங்கல் திருவிழா முன்னோரின் பாரம்பரிய மரபுகளின்படி நடைபெறுவதற்கு எம்பெருமான் திருவருள் நல்கியுள்ளார்.

* இன்று (07.07.2011) வியாழன் காலை 7 மணி பண்ட மரவடியில் விசேட பூசை, பண்டம் எடுக்கப் புறப்படுதல், மு.ப. 10 மணி கொடிகாமம் சந்தையிலிருந்து பண்டம் எடுத்தல், மாலை 6 மணி பண்ட மரவடியை அடைதல், பூசைகள், அன்னதானம்.
* நாளை (08.07.2011) வெள்ளிக்கிழமை காலை 7 மணி கோயிலில் விசேட அபிஷேகம் 12 மணிக்குப் பூசைகள், மாலை 6 மணி பண்ட மரவடிப் பூசைகள், காப்புக் கட்டுதல், சிவ கலை எழுந்தருளல், கோயிலுக்குப் பண்டம் எடுத்தல்.
* 09.07.2011 சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு வளர்ந்து நேருதல், பொங்கல், படையல்கள், கத்திமடை, ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்பசுவாமி சமாதிக்கு விசேட பூசை, மு.ப. 10 மணிக்கு கோயிலில் விசேட பூசைகள், சிவகலை எழுந்தருளல், பரிகலம் வழிவிடல், திருவருட் பிரசாதம் வழங்கல், மகேஸ்வரபூசை என்பன மரபுகளின்படி நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.
* விசேட பஜனை வழங்குபவர்கள்:- மட்டுவில் மத்தி ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தான பஜனைக் குழுவினர்கள்.

எமது ஆலயத்தில் மாணிக்கப்பிள்ளையார், கதிர்வேலாயுத சுவாமி சந்நிதிகளை சிறப்புற சாஸ்திர முறைப்படி அமைத்துத் தந்த கற்குழி வடக்கு, பெருங்குளம், சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் கலைஞர் பாலசுப்பிரமணியம் நிரஞ்சன் அவர்களது தெய்வீகப் பணியைப் பாராட்டி "சிற்ப கலாவிநோதன்" என்ற பட்டத்தையும் மேலும் மாணிக்கப் பிள்ளையார், கதிர்வேல், நாகதம்பிரான் விக்கிரகங்களை அற்புதமாக வடித்துத் தந்த யாழ்.வண்ணார்பண்ணை மதிவதனி சிற்பாலய ஸ்தபதி சுப்பிரமணியம் சரவணபவன் அவர்களுக்கு "சிற்ப கலைஞான வித்தகர்" என்ற கௌரவ பட்டத்தையும் மண்டலாபிஷேக பூர்த்தியான 30.06.2011 இல் வழங்கிக் கௌரவித்துள்ளோம். அவர்களது தெய்வீகப் பணி மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

அனைவரும் வருக! குருநாதர் திருவருள் பெறுக.
சுபம்

சிவத்திரு . நா.முருகேசபிள்ளை
பரம்பரை சிவகலைப்பூசகர்.

சைவப் புலவர், திருவருள் வாசகர்,
சிவத்திரு. சி.கா.கமலநாதன்
ஐயா M.A.J.P
சாவகச்சேரி பாரம்பரைத் தர்மகர்த்தா,
பிரதம பூசகர்.

கணக்கு இலக்கம் : மக்கள் வங்கி,
110200150015217
(5513)



**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள பான்ஸிக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு:- 0773689179



**TIPPER விற்பனைக்கு**

TATA 3 கியூப், NPLL XXXX எனும் இலக்கமுடைய TIPPER உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு :-0773638482



**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதியில், கோப்பாய் தெற்கில் மாதா கோயிலுக்கு அருகில். 32 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0217901915
0776588091
0770366543
(5526)



**COMTEC**

**கூறுவிலை கோரல்**

இந்த நிறுவனத்துக்கு சொந்தமான
* வாகன சுத்திகரிப்பு நிலையக் கட்டடம்.
* வாகன சுத்திகரிப்பு நிலைய உபகரணங்கள்
* ஓட்டோ
* தகரக்கொட்டகை

என்பன விற்பனைக்குள்ளது.

இவற்றை பார்வையிடவிரும்புவோர் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய அலுவலக நாள்களில் (9 மணிதொடக்கம் 3மணிவரை) அவற்றுக்குரிய பெறுமதிகளை எம்மால் வழங்கப்படும் படிவத்தில் நிரப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின் றோம். இந்தப் பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஐந்து வேலை நாள் களுக்கிடையில் இவை சமர்ப்பிக்கப்படவேண்டும். மேலதிக விவரங்களுக்கு பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம் தொடர்பு: 0777448481


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்துக்கு ஒரு தெளிவான செய்தி இந்தத் தேர்தல் மூலம் சொல்லப்படும்

## கிளிநொச்சியில் சிறிதரன் எம்.பி. சூளுரை

கிளிநொச்சி, ஜூலை 7

எமது மக்களின் வாழ்வை அழித்தவர்களுக்கு இந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தகுந்த பாடம் புகட்டுவோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அக்கராயன் பிரதேசத்துக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பரப்புரை நிகழ்வு ஸ்கந்தபுரம் கந்தன் ஆலய முன்றிலில் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலர் சங்கையா, மாந்தை பிரதேச சபை உறுப்பினர் மகிந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

முன்னதாக கரைச்சி உள்ளூராட்சிச் சபை வேட்பாளர்களான நாவை குகராசா, சிவபாலன், அன்ரன் டானியல், இம்மானுவேல், தயாபரன், பாஸ்கரன், சுப்பையா, சுகந்தன், தவஞானசீலன், டெனிஸ்ராஜன், செல்லத்துரை ஆகியோர் தமது அறிமுக உரைகளை ஆற்றியதை தொடர்ந்து அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அரசியல் தெளிவுரையை ஆற்றினார். இங்கு அடுத்த உரையாற்றிய சி.சிறிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வரலாற்றில் என்றும் மாறாத வடுவாகவும் தன்மானத்தின் நாளாகவும் இருக்கக்கூடிய கறுப்பு ஜூலையில் நடைபெறுகின்றது.

எமக்குகொடூரம் இழைத்தவர்களை ஆரம்பப்புள்ளிகளில் இருந்து ஒவ்வொன்றாக முள்ளிவாய்க்கால் வரை எண்ணிப் பார்த்து வாக்களிக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் சர்வதேசத்துக்கு ஒரு தெளிவான செய்தி சொல்ல வேண்டும்.

தேர்தல் களம் 2011

சிங்கள அரசு நடத்திய கொடூரத்தை மறைத்து இங்கு வசந்தம் பரவியிருக்கின்றது என உலகுக்கு காட்ட அரசு தனது முழு பலத்தையும் திரட்டிக் கங்கணம் கட்டி நிற்கின்றது.

அபிவிருத்தி என்ற போர்வையில் இங்கு பெரும் இன சுத்திகரிப்பு பண்பாட்டு அழிப்பு, பொருளாதாரச் சுரண்டல் அரங்கேறுகின்றன. தமிழர்களின் சொந்த காணிகள் சிங்கள குடியேற்றங்களுக்காக அபகரிக்கப் பட்டுவிட்டன.

ஸ்கந்தபுரத்தில் பெரும் வளம்மிக்க கரும்புத் தோட்டம் உங்கள் கண் எதிரே சிங்களவர்களின் உரிமைக்கு சில அடிவருடிகளின் காட்டிக் கொடுப்பால் பறிபோகின்றது.

ஆனைவிழுந்தானில் கொக்காவிலில் என்று எமது மண் சிங்கள மயமாகின்றது. இங்கு எத்தனையோ பட்டதாரிகள் வேலையற்றிருக்க எங்கிருந்தோ வந்த ஒப்பந்தகாரர்கள், வேலையாள்கள் தெரு அமைக்கின்றார்கள்.

இதுவா வசந்தம் என்பது இதற்காகவா தமிழர்களை ஏமாளிகள் என நினைத்து வாக்கு கேட்கவருகின்றார்கள். எங்கள் ஊரின் உள்ளூராட்சிச் சபையை ஒரு சிங்களக்கட்சி ஆள நாம் விடலாமா அதற்கு அடிவருடிகள் சிலர் துணை போகலாமா, வெற்றி எமக்கானதே ஆனால் அது வரலாற்றுப் பெருவெற்றியாக அமைய ஒரு வாக்கேனும் அரச தரப்புக்கு விழாமல் தமிழர்களாகிய நாம் வரலாற்றுப் பெரும் கடமையைச் செய்வோம் - என்றார். (த-6)

# தமிழர்களின் ஒற்றுமை வெளிப்பாட்டை மேற்கு நாடுகளுக்கு பறைசாற்ற வேண்டும்

## மாவை சேனாதிராசா

வடமராட்சி, ஜூலை 7

தமிழர்களின் ஒற்றுமையை வெளிநாடுகள் குறிப்பாக மேற்கு நாடுகள் எதிர்பார்க்கின்றன. எமது ஒற்றுமையை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் நாம் அனைவரும் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பொதுச் செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தும்பளை வீதியில் உள்ள தமிழரசுக் கட்சிக் கிளை அலுவலகத்தில் கிளைத் தலைவர் சட்டத்தரணி சபா. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவைசேனாதிராசா எம்.பி. கூறியதாவது.

இந்தத் தேர்தலில் எல்லோரும் ஒருமித்து சேவை செய்து எமது கட்சி வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றிபெற வைத்து வெளி உலகுக்கு குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு தமிழர் ஒற்றுமையை, இலட்சியத்தை, ஐக்கியத்தை வெளிப்படுத்த வேண்டும். அவற்றை இந்தத் தேர்தல் மூலம் நாம் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களை வெல்லவைப்பதன் மூலம் இன விடுதலைப் போராட்டத்துக்கு உற்சாகமும் ஊக்கமும் பெற்றுக் கொள்ளமுடியும்.

தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி நிர்வாகத்தை கைப்பற்றுவதன் மூலம் எமது பகுதிகளை நாமே திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய முடியும். பிரதேசத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இந்தத் தேர்தலை முக்கியமான தேர்தலாகக் கவனத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் நீண்ட காலத்தின் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறுவதால் மக்கள் வாக்களிக்கும் முறை பற்றி வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று, மக்களுக்கு விளங்க வைக்கவேண்டும். முதலில் கட்சிக்கும் பின்னர் விருப்பு வாக்குகளையும் அளிக்க வேண்டும் என்றார்.

வேட்பாளர்கள் வாக்களிக்கும் முறை, தேர்தல் நடைமுறைகள் தொடர்பான சந்தேசங்களைக் கேட்டனர். இந்தச் சந்தேகங்களுக்கு மாவை சேனாதிராசாவும் சட்டத்தரணி சபாரத்தினமும் விளக்கமளித்தனர். (ம-236)

# கிராமிய மட்ட அமைப்புக்களைச் சந்தித்து உறுதிமொழிகளை வீசும் வேட்பாளர்கள்

## சூடு பிடிக்கிறது தேர்தல் களம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் உள்ளூர் பிரமுகர்கள், சனசமூக நிலைய, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், விளையாட்டுக் கழகத் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு தேடுவதில் முனைப்புக் காட்டுகின்றனர்

இவர்களைச் சந்தித்து தமக்கே ஆதரவு தரவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து வருவதல்யாரை ஆதரிப்பது என்ற பிரச்சினையும் எவ்வாறு பதில் சொல்லிச்சமாளிப்பதென்ற பிரச் சினையும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஓர் அமைப்புக்குள்ளேயே இரு கட்சி வேட்பாளர்கள் இருக்குமிடங்களில் இந்த உள்ளூர் அமைப்புக்களின் தலைமையினர் பெரும் தர்ம சங்கடத்தையும் சந்திக்கின்றனர்.

வேட்பாளர்கள் தமது கட்சிச் சின்னம், விருப்பு வாக்கு இலக்கம் குறித்த துண்டுப்பிரசுரங்களை உறவினர்களின் வீட்டு மங்கல நிகழ்வுகளுக்கு எடுத்துச் சென்று வந்திருப்போரிடம் ஆதரவு கேட்கும் நிகழ்வும் சில இடங்களில் இடம்பெறுகின்றது.

எல்லாக் கிராமங்களிலும் குறைந்தது ஒரு வேட்பாளராவது உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் நிற்பதால் ஆதரவு தேடும் படலமும் சூடு பிடித்துள்ளது. சில இடங்களில் 3 வேட்பாளர்கள் ஒன்றாகச் சென்று தம் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு விருப்பு வாக்கைத் தாருங்களெனக் கேட்கும் பிரசாரம் நடக்கின்றது.

பாடசாலைகள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றின் சிறியளவு தேவைகளைத் தமது சொந்தப் பணத்தில் செலவழிக்கும் சில வேட்பாளர்களையும் காணமுடிகிறது.

எல்லா வாக்காளரையும் வாக்களிக்கத்தூண்டுவதில் வேட்பாளர்கள் அக்கறை காட்டுவதையும் காணமுடிகிறது.(த-26-121-236)

# குடாநாட்டைக் கட்டி எழுப்பவேண்டியது எம் அனைவரதும் கைகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

குடாநாட்டு மக்கள் பெற்றவையை விட இழந்தவையே ஏராளம். இந்த நிலையில் குடாநாட்டைக் கட்டி எழுப்ப வேண்டியது எம் அனைவரதும் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தை நல்லூரில் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எமது நாடு, முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பாக யாழ். குடாநாட்டவர்களாகிய நாங்கள் யுத்தக்[illegible] வடுக்களை[illegible] அது தந்த தீராத துன்பங்களையும் சுமக்க முடியாத அளவுக்கு சுமந்து நிற்கின்றோம்.

நாம் பெற்றதை விட் இழந்தவையே அதிகம். எனவே பழைய நிலைக்கு எமது குடாநாட்டை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்குள்ளது. எனவே நாங்கள் சிந்தித்து நாமும் வளர்வதோடு எமது அடுத்த சந்ததியையும் பழைய நிலைக்குத் தயார்படுத்த வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பற்றி நாம் கூறும்போது எப்போதுமே பழைய காலத்தில் நாம் உயர்ந்து நின்ற நிலைமையையே விளக்குவோம். அதாவது கல்வி, உயர்பதவிகள் போன்றவற்றை குறிப்பிட்டுச்சொல்வதே வழமையாகும். ஆனால் தற்போதைய நிலைமை[illegible] ஒரு[illegible] நிற்கின்றோம்.

நாம் இன்னும் உயர்ந்த நிலையைத் தொடுவதற்கு அக்கறை கொண்டு செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னை யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகத் தெரிவு செய்து தனது பிரிதிநிதியாக இங்கு அனுப்பி வைத்துள்ளார்.

உங்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டு உங்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து அதனை தனது கவனத்துக்கு கொண்டு வருவதன் மூலம் அதற்கான உடனடித் தீர்வை ஜனாதிபதி வழங்கி வருகிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் குடாநாட்டிலுள்ள பல இளைஞர், யுவதிகள் இணைந்து வருகிறார்கள். இளைஞர், யுவதிகள் பலர் [illegible] பதியைச் சந்தித்து தமது பிரச்சினைகளை அவருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அந்தளவுக்கு ஜனாதிபதி உங்கள்மீது அதிக அக்கறை கொண்டுள்ளார். அத்தோடு எமது அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடாநாட்டின் தேவைகள் தொடர்பாக நான் அவர்களை அணுகும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆறுதலாக விடயங்களை செவிமடுத்து, உரிய தீர்வுகளை விரைவாகப் பெற்று தருவதில் அதிக அக்கறையுடனும் ஆர்வத்துடனும் செயற்பட்டு வருகிறார்கள்.

நாம் யுத்தத்தால் இழந்த கல்வியை பழைய நிலைக்கு மீளக் கொண்டுவரவேண்டும். கல்வியே யாழ்ப்பாணத்தின் மூலதனம். யாழ்ப்பாணம் உச்ச நிலைக்கு வளர்ச்சி பெற்றது கல்விசார் சமூகத்தின் மூலமாகவே என்பது அனைவரும் நன்கறிந்த விடயம். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால் கல்வித்தரம் குன்றியிருப்பது வெள்ளிடைமலை. ஆனால் இன்றோ ஒரு புதிய உத்வேகம் புத்துணர்ச்சி தோன்றியுள்ளது. எனவே ஆரம்ப பாடசாலை முதல் கல்வியை மேம்படுத்த வேண்டும். பிரதானமாக கல்விக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஓர் அடித்தளமாக விளங்குகிறது. பல்கலைக்கழக கல்வியூடாக, பல்கலைக்கழக சமூகத்தினூடாக நாம் இதனை சிறந்த முறையில் மீண்டும் ஏற்படுத்த முடியும். இதற்கு நாம் எம்மாலான உதவிகளைச் செய்யத் தயாராகவுள்ளோம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் நீங்கள் எமது ஜனாதிபதியின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை யாழ்ப்பாணத்தில் பலப்படுத்தி உங்களதும் யாழ் குடாநாட்டினதும் முன்னேற்றத்துக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையினர் மீது இந்திய மீனவர் பொய்ப்பிரசாரம்

## கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் பொய்ப் பிரசாரங்ளை மேற்கொண்டு வருகின்றனர். 14 இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர் என அவர்கள் வதந்தியைப் பரப்பினர். ஆனால் இராமேஸ்வரம் மீனவர்கள் எவ்ரையும் நாம் கைது செய்ய வில்லை. எனவே இந்தச் சம்பவத்தின் மூலம் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக பொய்ப்பிரசாரங்களையே மேற்கொண்டு வருகின்றனர் என்பது அம்பலமாகின்றது.

-இவ்வாறு கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

தமிழகத்தைச் சேர்ந்த 14 மீனவர்களை கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்தனர் என தமிழக மீனவர்கள் தெரிவித்தனர் எனச் செய்திகள் வெளியாகின. அதேவேளை, இந்தச்சம்பவம் தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்துவதற்கு இந்திய உயர்மட்டக் குழுவொன்று இலங்கை வரவுள்ளது என்று செய்திகள் வெளியாகியிருந்தன .

இதுதொடர்பாக கடற்படைப் பேச்சாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தமிழக மீனவர்களை நாம் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தோம் என வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை.

இந்திய உயர்மட்டக் குழுவின் இலங்கைப் பயணமானது தூதரகத்தினூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இவர்களின் வருகைக்கும் கடற்படைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. எனினும் இரு நாட்டு மீனவர் விவகாரம் தொடர்பில் இலங்கை வரும் குழு அமைச்சுடன் பேச்சு நடத்தலாம்- என்றார். (சி)

# பொன்சேகா தாக்கல் செய்த மனு ஓகஸ்ட் 4இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 7

தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்தமையை எதிர்த்து முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை ஒத்திவைத்தது.

இராணுவத் தளபதி என்ற வகையில் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருந்த பட்டங்கள், பதக்கங்கள் யாவற்றையும் பறிக்குமாறு தீர்ப்பளித்த முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை செல்லுபடியற்றதாக அறிவிக்க வேண்டுமெனக் கோரி சரத்பொன்சேகாவால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்ற நீதியரசர் ரோகினி மாரசிங்க முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு நீதியரசர் ஒத்தி வைத்தார். (சி)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை பரிசோதிக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தப் பரிசோதனையின்போது தரமற்ற எரிபொருள் அகப்பட்டால் அதற்குப் பதிலாக தரமான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கனியவள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 9 பிரதேச அலுவலகங்களின் ஊடாக இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும் எரிபொருள் பிரச்சினை தொடர்பில் ஆராய மூவர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்- என்றார். (சி)

# தபால்மா அதிபர் விவகாரம்; மூன்று வாரங்களில் அறிக்கை

கொழும்பு, ஜூலை 7

தபால்மா அதிபருக்கு எதிரானவை எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழு எதிர்வரும் மூன்றுவாரங்களுக்குள் தனது அறிக்கையை தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளது.

தபால் திணைக்களத்தில் தபால்மா அதிபர் நாயகம் ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபடுகின்றார் எனக்கூறப்படுவது தொடர்பில் அவரைப் பதவிநீக்குமாறு தொழிற்சங்கங்கள் மற்றும் தபால் திணைக்கள ஊழியர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விசாரணை முடியும்வரை அவருக்கான சகல அதிகாரங்களும் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவால் குறைக்கப்பட்டுள்ளன. (ச)

# உலக புத்தாக்கச் சுட்டியில் இலங்கைக்கு 82 ஆவது இடம்

இன்சீட் எனப்படும் சர்வதேச வணிக பாடசாலை ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள உலக புத்தாக்க சுட்டியில் இலங்கை 82ஆவதாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு கீழ் நிலையில் காணப்படினும் இலங்கை, ஏனைய தெற்காசிய நாடுகளை விட முன்னேறியுள்ளது.

உலக புத்தாக்கச் சுட்டியில் சுவிஸ்சர்லாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதில் சுவீடன் இரண்டாம் இடத்தையும், சிங்கப்பூர் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.

அண்மைக்கால உலக பொருளாதார மந்தத்தைத் தொடர்ந்து பொருள்களின் ஏற்றுமதி வளர்ச்சி என்பது மட்டுமன்றி செலவு குறைவான புத்தாக்கங்களின் மீதும் கவனம் அதிகரித்துள்ளது.

இந்தச் சுட்டியில் சீனா 29ஆவதாகவும் இந்தியா 62ஆவது இடத்தையும் பங்களாதேஷ் 97ஆவதும் பாகிஸ்தான் 105 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

இலங்கை நூறுக்கு 30.36 புள்ளிகளைப் பெற்றுள்ளது. கைத்தொழில் சகாப்தத்தில் நாடு களின் போட்டியிடும் ஆற்றல் அவற்றின் இயற்கை வளங்களில் தங்கியிருந்தது.(ச)


## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ப.உதயகுமார் அவர்களின் தாய்
திருமதி கனகம்மா மோகனராஜா
அவர்கள் 03.07.2011 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம்.
(5526)

## ஓராண்டு நினைவஞ்சலியும் 108 ஆம் நாள் நினைவும்

தர்மலிங்கம் தியாகராஜா
தியாகராஜா மகேஸ்வரி



| | | |
|---|---|---|
| தோற்றம் | 23.03.1936 | : 06.11.1939 |
| மறைவு | 07.07.2010 | : 21.03.2011 |

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது
உங்கள் ஞாபகங்களைச் சுமந்து
வாழும்...

மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
(5523)

மகன் தி.திலகராஜா,
தி.திலகரட்ணம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
An ISO 9001:2000 Certified Company

Spoken English
ஆங்கில பயிற்சி மையம்
veta
Experts in English Training
Foundation , First Step மற்றும் Next Step க்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 9.30 a.m. | Sat, Sun | 9.30 a.m. | Sat, Sun | 4.30 p.m. |
| Mon, Wed, fri | 7.30.a.m. | Wed, Fri | 9.30 a.m. | Tue,Fri | 5.30 p.m. |
| Tue, Thu | 5.00 p.m. | | | Tue,Fri | 7.30 a.m. |

இலகுவான முறையில் ஆங்கிலப் பயிலுங்கள்.

UK
Student Visa , Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.
City & Guilds Approved Centre

DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

## இதய அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சி.சோமநாதன் அவர்களின் தாய்
திருமதி தம்பிராசா
பாரிசாதபுஸ்பம்
அவர்கள் 05.07.2011 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம்.
(5527)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி தம்பிராசா பாரிசாதபுஸ்பம்
யாழ்ப்பாணம் மாவட்டத் தொழில் அலுவலகத்தில் உதவித்தொழில் ஆணையாளராகக் கடமையாற்றும்
திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்
அவர்களின் தாய்
திருமதி தம்பிராசா பாரிசாதபுஸ்பம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரதித் தொழில் ஆணையாளரும்
உத்தியோகத்தரும்.
தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.
(5524)

## தேவை

கணினி ரைப் செற்றிங் செய்யக் கூடியவர் தேவை.
கற்சுமி :- 0718474325

## வீடு, வளவு விற்பனைக்கு உண்டு

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையில் 789 பேருந்து பாதையில் வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்து ¾ km தொலைவில் 3¾ பரப்புக் காணி, வீடுவளவு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு:- 0779051154,0770544969

## மணமகன்,மணமகள் தேவை

இந்து, கிறிஸ்தவ வேளாண்மை தொழில்சார் சமூகத்தினருட்பட அனைத்துத் தொழில்சார் சமூகங்களிலுமுள்ள Doctors, E n மற்றும் உள்நாடு/ வெளிநாடு மணமக்களில் விரும்பும்/ பொருத்தும், மணமகன்/ மணமகளைத் தெரிவு செய்யுங்கள். நேரில் வருக.
Arulmurugan's 'Genuine' Matrimony service
03, Yarl Rd, Sirampiyady Lane,
Stanley Road, Jaffna. 0718475114

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை முதலாம் கட்டையில் மேற்குப் புறமாக தெற்கு எல்லை றோட்டைக் கொண்ட நிலப்பரப்பு 3 குளி 6 காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777287989


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவனந்தபுரம் ஆலய நகைகள் கணக்கெடுப்பு; வீடியோவில் பதியுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு



திருவனந்தபுரம் பத்ம நாபசாமி கோயிலில் நடந்து வரும் நகைகள் உள்ளிட்ட பொக்கிஷங்களின் கணக்கெடுப்பை வீடியோவில் படமாக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலில் உள்ள பாதாள ரகசிய அறைகளைத் திறந்து ஆய்வு நடத்த வேண்டும் என்று கோரி சுந்தரராஜன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை ஏற்றுத்தான் ஆய்வுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி தற்போது ஆய்வு நடந்து வருகிறது.

இந்த நிலையில் சுந்தரராஜன் இன்னொரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில் நகைகள் உள்ளிட்ட அரிய பொருள்களின் கணக் கெடுப்பை வீடியோவில் பதிவு செய்யவேண்டும். அவற்றைப் பாதுகாப்பாக வைப்பது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனுவை இன்று விசாரித்த உச்சநீதிமன்றம் சுந்தரராஜனின் கோரிக்கையை ஏற்றது. இது குறித்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், தற்போது நடந்து வரும் நகைகள் உள்ளிட்ட பொருள்கள் குறித்த ஆய்வுப் பணிகளை, நகைகள் கணக்கெடுப்பை வீடியோவில் பதிவு செய்ய வேண்டும்.

மேலும் இந்த நகைகளைதிருவனந்தபுரம் அரசு அருங் காட்சியகத்தில் வைக்கும் திட்டம் உள்ளது, பாதுகாப்பு குறித்த திட்டம் உள்ளதா என்பது குறித்தும் மத்திய அரசு நாளை வெள்ளிக்கிழமைக்குள் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் ரகசிய அறைகளில் ரூபா 50 ஆயிரம் கோடி பெறுமதிமிக்க நகைகள் மீட்கப்பட்டமை தெரிந்ததே. இந்தத் தங்க நகைப்பொக்கிஷங்கள் திருவாங்கூர் மன்னர் பரம்பரைக்குச் சொந்தமானவை என்று காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜயெந்திரர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது (வ)

# சோனியா-லாலு திடீர் சந்திப்பு:



அரசியல் சூழ்நிலை பரபரப்பான நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை, ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவ் சந்தித்து பேசியுள்ளார். இதன் மூலம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்குள் சேர முயற்சிப்பதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன. தனித்தெலுங்கான விவகாரம், லோக்பால் மசோதா உள்ளிட்ட நிகழ்வுகளால் மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு திணறி வருகிறது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு முன்னதாக மத்திய அமைச் சரவையில் மாற்றம் இருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த சூழ்நிலையில், ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சியின் தலைவர் லாலுபிரசாத் யாதவ் நேற்று முன்தினம் காங். தலைவர் சோனியாவை திடீரென அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

தெலுங் கானா பிரச்சினையால் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த 12 காங்கிரஸ் சட்டபேரவை உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்தால், அதற்கு லாலு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கலாம் எனவும் அதற்கான பேச்சு நடத்தவே இந்தச் சந்திப்பு நடந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்குள் ஐக்கியமாக ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சி முயற்சி செய்வதாகவும் கூறப்படுகிறது.

## மங்கல விளக்கேற்றல்.....



சென்னையில் நடந்த இந்திய தொழில் கூட்டமைப்பின் தேசிய குழுக் கூட்டத்தை முதல்வர் ஜெயலலிதா குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் சி.ஐ.ஐ தலைவர் முத்துராமன், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி கோத்ராஜ் ஆகியோர் நிற்கின்றனர்.

# ஆட்சி மாற்றத்தால் சினிமாத்துறைக்கு இருந்த தடை விலகியது- தங்கர்பச்சான்

ஆரணி, ஜுலை 7

தமிழகத்தில் ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் சினிமாத்துறைக்கு இருந்த தடைவிலகியது என்று இயக்குநர் தங்கர் பச்சான் கூறினார்.

அம்மாபாளைத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில் தங்கர்பச்சான் பேசுகையில்:

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் சினிமாத்துறைக்கு இருந்த தடை விலகியுள்ளது. சிறு முதலீட்டாளர்கள்தயாரிக்கும் படத்தை வெளியிட முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது. எனினும் திரையுலகுக்காக இப்போதைய அரசு எந்த அளவில் உதவி செய்ய முடியும் என்பதைப் பொறுத்து திரைப்படத் துறையின் வாழ்க்கை உள்ளது. நான் தமிழ் உணர்வுக்காகப் போராடும் குணம் உடையவன். எனக்கு எந்தக் கட்சியும் கிடையாது.

பொதுநோக்கத்தோடு, சமூகத்துக்கும் நல்லது செய்ய நினைக்கும் சட்டபேரவை உறுப்பினர். கலையரசும் ஒருவர். இதனால் இவரை எனக்குப் பிடிக்கும்.

சமச்சீர் கல்வி அனைவருக்கும் தேவையான ஒன்று. அனைவருக்கும் கல்வியை இலவசமாகத் தாருங்கள். ஒவ்வொரு பாடசாலைகளிலும் கட்டாயம் கழிவறை வசதி இருக்க வேண்டும். இதேபோல், மக்களுக்கு மருத்துவத்தை இலவசமாகவும், தரமாகவும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளுக்கு அரசியல் கற்றுத் தர வேண்டும். இதுபோன்ற பாராட்டு விழாக்களில் இளைஞர் பங்கேற்று முன்னேறியவர்கள் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார். (வ)

## தெலுங்கானா விவகாரம்: பிரதமர், சோனியாவுடன் குலாம்நபி ஆசாத் சந்திப்பு

டில்லி, ஜுலை 7

ஆந்திராவில் தெலுங்கானாவுக்கு தனிமாநிலம் அமைக்கக் கோரி தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்தனர்.

இந்த நிலையில், ஆந்திரா மாநில காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான குலாம்நபி ஆசாத் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரை சந்தித்து பேசினார்.

தனி தெலுங்கானா குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டப்பேரவை உறுப்பினர்களும் விவாதிக்கத் தயாராக இருப்பதாகவும்-

மத்திய அரசும் உடனடியாக பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அப்போது வலியுறுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# 'இலங்கை கொலைக்களம்' விவாதம் மணிவண்ணன், சீமான் பங்கேற்பு!

சென்னை, ஜுலை 7

'இலங்கையின் கொலைக்களம்' என்ற பெயரில் பிரிட்டனின் பிரபலமான சனல் - 4 ஒளிபரப்பிய தமிழினப் படுகொலை காணொளி குறித்த விவாதம் தமிழன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

இந்த விவாதத்தில் நாம் தமிழர் தலைவர் சீமான், பேராசிரியர் பால் நியுமன், இயக்குநர் மணிவண்ணன், பேராசிரியர் தீரன் ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

ஈழத்தில் தமிழ் மக்கள் மீது இலங்கை இனவெறி அரசு நடத்திய போரின் போது அதிகமான போர்க்குற்றங்களைப் புரிந்தது இலங்கை ராணுவம். அதனை சர்வதேச மக்களுக்கு எடுத்துக் காட்டியது சனல் 4 ஒளிபரப்பிய 'இலங்கையின் கொலைக்களம்' என்ற ஆவணப்படம்.

தமிழன் தொலைக்காட்சியில் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், பேராசிரியர் பால் நியுமன் (டப்ளின் மக்கள் தீர்ப்பாயத்தில் பங்காற்றியவர்), இயக்குநர் மணிவண்ணன், பேராசிரியர் தீரன் ஆகியோர் இந்த விடயத்தைப்பற்றி விரிவான ஒரு விவாதத்தை முன்வைத்தனர்.

இலங்கைஙய சர்வதேச அரங்கில் தண்டனைக் குட்படுத்தவும் மஹிந்த ராஜபக்ஷவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவும் இதை விட வேறு எந்த ஆதாரமும் தேவையில்லை. இதை சர்வதேச நாடுகளும் உணர்ந்துள்ளன - என்று இயக்குநர் மணிவண்ணன் தெரிவித்தார். (வ)

# அழகிரி மற்றும் அவரது மனைவி மீது ரூ.50கோடி நிலமோசடி முறைப்பாடு

சென்னை, ஜுலை 7

மத்திய அமைச்சர் மு.க அழகிரி மற்றும் அவர் மனைவி மீது ரூ 50 கோடி நில மோசடி தொடர்பான முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. மதுரைக்கு அருகே உத்தங்குடி நாகர் ஆலயத்தைச் சேர்ந்த பூசாரி சுப்பிரமணிய ஐயர் என்பவரே இது தொடர்பாக முதல்வரின் தனிப்பிரிவுக்கு மேற்படி முறைப்பாட்டை அனுப்பியுள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உத்தங்குடி நாகர் ஆலயத்துக்குச் சொந்தமான தர்மசாஸ்தன டிரஸ்ட்டுக்கு நாகேந்திர ஐயர் 1936 ஆம் ஆண்டு 23 ஏக்கர் நிலத்தை வழங்கினார். அப்போது இந்த நிலத்தை யாருக்கும் விற்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிலத்தை விற்கலாம் என்று போலியாக ஆவணம் தயார் செய்யப்பட்டது. அதன் பின்னர் கோவையை சேர்ந்த அதிஷ்டலாபச் சீட்டு முகவ[illegible]டின் என்பவர் ஆவணப் [illegible]த்தை அவரது பெயரில் பதிவு செய்தார். அதன் பின்னர் முன்னாள்



தி.மு.க. அமைச்சர் அன்பழகனின் உறவினர் சுகுமாறனுக்கு பத்திரம் மாற்றி வழங்கப்பட்டது.

இந்தநிலையில் தயா சைபர் பார்க் நிர்வாக இயக்குநர் காந்தி அழகிரி பெயரில் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. போலி ஆவணம் தயார் செய்து இந்த நிலத்தை விற்றுள்ளனர். 50 கோடி மதிப்பிலான இந்த இடம்கோயிலுக்குச் சொந்தமானதாகும். எனவே அதனை மீண்டும் கோயிலுக்கு மீட்டுத் தர வேண்டும், என்று கூறப்படுள்ளது.

இதுதொடர்பாக அழகிரி மற்றும் அவர் மனைவிமீது விரைவில் பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர்.(வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை

## சிறைச்சாலைத் திணைக்களம் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 7

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையை மூவாயிரமாகக் குறைப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்போது நான்காயிரத்து 600 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ . ஆர். டி.சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய இங்குள்ள கைதிகளில் சிலரை மஹர சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களை நாட்டிலுள்ள ஏனைய சிறைச்சாலைகளுக்கு எதிர்வரும் காலங்களில் மாற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் குற்றச் செயல்கள் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்படும் கைதிகளை அவர்கள் பகல் வேளையில் சந்திப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகப் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பிரச்சினைகளையும் வேறுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ற)

## மகத்தான சேவைக்கு...



மனநிறைவுடன்: மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழா கொண்டாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் சிறப்பாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் முகாமையாளர் சு.இராசமனோகரன் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி கோ.கணேஸ்வரன் , அருட்தந்தை ரெக்ஸ் சௌந்தரா ஆகியோரைப் படத்தில் காணலாம். (ற)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி திருப்பலியும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து உலக இரட்சகரின் திருச் சொரூப பவனி இடம்பெறவுள்ளது. (ற-313)

***

சரவணை பள்ளப்புலம் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பர வெள்ளோட்டமும், எதிர்வரும் 14 ஆம்திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

விழாக்கால கிரியை வழிபாடுகளை பிரதமகுரு சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். (ற)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2415 ஆம் இலக்க நேற்றுமுன் தினம்சீட்டிழுப்பில் "X" என்ற ஆங்கில எழுத்தும் 8/3/3/2/7/8 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 8/3/3/2/7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/3/2/7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது. 3/2/7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 142 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,394 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,986 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,38,762 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும். இடமிருந்து வலமான அமைப்பில் 8/3/3/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/3/3/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 147 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 8/3/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,362 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,863 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும். "X" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 55,470 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

## கணினித் தொகுதி அன்பளிப்பு

பருத்தித்துறை, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் அலுவலக உபயோகத்துக்கான கணினித் தொகுதி ஒன்றைபாசிக்நிறுவனம் வழங்கியுள்ளது.

'பாசிக்' நிறுவனத்தின் தலைமை அதிகாரி சாமப் பிரதிநிதிகளுடன் கடற்றொழில் மக்களின் தேவைகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் குறித்து கலந்துரையாடிய பொழுது அலுவலகத் தேவைகளை அழகுபடுத்த கணினியின் அவசியம் குறித்துஎடுத்துரைக்கப்பட்டதன் பிரகாரம் இந்தக் கணினித் தொகுதி வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட மீளக்குடியமர்ந்த கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பாசிக் நிறுவனம் இந்தப் பிரிவுக்குட்பட்ட கடற்றொழில் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது. (ம-236)


### காணி விற்பனைக்கு

யாழ். கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் கிணற்றுடன் கூடிய 3½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0777069328

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரியடியில்
3பரப்புக் காணியுடனான
பழைய வீடு
விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:0715310887

### பெதஸ்தா பயிற்சி நிலையம்

*கணினி
*ஆங்கிலம்
*தையல்
*கலைநுட்ப கைத்திறன் வேலைகள்
காலம்: திங்கள் -சனி
நேரம் :காலை:8.00-மாலை05.00
யாழ் மக்களின் வசதிகருதி குறைந்த கட்டண வசதியுடன் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
No: 64/2, 2nd Lane, Point pedro Road, Jaffna.
Tel:0212228179

### ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஜோதிட நிலையம்

'பண்டித் ஆஞ்சனப்பா'

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர் கைரேகை,நாமநட்சத்திரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, உத்தியோகம், வேறு என்ன பிரச்சனையாக இருந் தாலும் ஒரு முறை இவரை சந்தித்து தீர்வு காணுங்கள்.

Room No:100,
GREEDY'S Hotel & Restaurant.
205, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்
T.P: 0772723004

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்டடப்பொருள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பின்வரும் வேலையாள்கள் தேவை

1.கணக்காளர் (ஆங்கில அறிவு அவசியம்)
2.விற்பனை ப்பிரதிநிதி (சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்)
3. விற்பனை உதவியாளர்

தகுதியுள்ளோர் 09.07.2011 சனிக்கிழமை நேரில் வரவும்.

பிரமோதன் இரும்பகம்
இல.217, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

### நெல்வயல் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் 5ஆம் கட்டைக்கு அண்மையில் 50 பரப்பு நெல்வயல் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு-0786382808

### மக்கள் வங்கியின் பொன்விழா

### 1961- 2011

2011.07.01 ஆம் திகதி தனது ஐம்பதாண்டு சேவையை நிறைவு செய்துள்ள மக்கள் வங்கியின் மக்கள் பணியை எண்ணும்போது உள்ளம் பூரிப்படைகின்றது.

ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தை குறுகிய காலத்தில் முழுமையாக நிறைவேற்றியதுடன் மக்களின் முழுமையான காத்திரமான நம்பிக்கையைப் பெற்று அனைத்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் வெற்றியும் கண்டுள்ளது.

சாவகச்சேரி மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை பல்வேறு சோதனைகளைச் சந்தித்த போதிலும் தன்னிலை குலையாது தென்மராட்சி பிரதேசம் மட்டுமல்ல வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச மக்களுக்கும் உயர்வான சேவைகளை வழங்கி வரும் சாவகச்சேரி மக்கள் வங்கியின் பணியை மென்மேலும் பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றோம்.

வங்கி வாடிக்கையாளர் சார்பில்
அன்னை ரெக்ஸ், நவீன சந்தை, சாவகச்சேரி.
குமார் களஞ்சியம்,சாவகச்சேரி.

### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1307 நீலம்

மேடம்

12 19 33 46

05-07-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 4,291,850/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 257,274 | 20/- | 5,145,480/- |
| 2 இலக்கங்கள் | 23,572 | 40/- | 942,880/- |
| 1 இல. + லக்கினம் | 23,554 | 60/- | 1,413,240/- |
| 2 இல. + லக்கினம் | 2,118 | 200/- | 423,600/- |
| 3 இலக்கங்கள் | 620 | 1000/- | 620,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 4,291,850/- | 4,291,850/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 13,737,050/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 692 | | 644,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 307,883 | | 14,381,550/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

#### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம்

04 07 23 49

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 689 | 500/- | 344,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | | 200,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 692 | | 644,500/- |

இந்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். தற்கொலைத் தீவிரவாதிகளை விலைக்கு வாங்குகின்றது ஆப்கன்

## ரூ. 35 இலட்சம் முதல் ரூ .55 லட்சம் வரை அறவீடு

காபூல், ஜூலை 07

தற்கொலைத் தீவிரவாதிகளை பாகிஸ்தான் தலிபான் இயக்கம் விலைக்கு விற்கிறது. அவர்களை ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் பணம் கொடுத்து வாங்கி தாக்குதலில் ஈடுபடுத்துகிறார்கள். இந்தத் தகவலை ஆப்கானிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் நேட்டோ இராணுவச் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தற்கொலைத் தீவிரவாதிகள் தேவைப்படுகிறார்கள்.

அவர்களுக்கு ஆப்கானிஸ்தானில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத இயக்கத்தினரிடமிருந்து தற்கொலைத் தீவிரவாதிகளைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்குகிறார்கள்.

பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் ஹக்கானி பிரிவு, வறுமையில் வாடும் ஏழை முஸ்லிம் சிறுவர்களை அவர்களுடைய பெற்றோருக்குப் பணம் கொடுத்து அழைத்து வருகிறது. அவர்களுக்குத் தீவிரவாதப் பயிற்சி அளித்து அவர்களை தற்கொலைத் தீவிரவாதிகளாக மாற்றுகிறது. பின்னர் அவர்களை ஆப்கானிஸ்தான் தீவிரவாத இயக்கத்தினரிடம் விற்று விடுகிறது.

ஆப்கானிஸ்தானில் பக்தியா மாநிலத்தில் மைதான் மாவட்டத்தில் ஒரு பாகிஸ்தான தற்கொலைத் தீவிரவாதியை ஆப்கானிஸ்தான் இராணுவம் கைது செய்தது.

அவரிடம் விசாரித்த போது தான் தற்கொலைத் தீவிரவாதிகள் விலைக்கு விற்கப்படுவது பற்றிய தகவல் கிடைத்தது என்று ஆப்கானிஸ்தான் உளவுத் துறை தெரிவித்துள்ளது.

அது மேலும் கூறியவை வருமாறு:

கைதானவர் பெயர் ஷேஹன் சான். இவரை ஹக்கானி தலைமையிலான பாகிஸ்தான் தலிபான் இயக்கம்தான் அனுப்பி வைத்தது. ஹக்கானி இயக்கத்தில் நான் ஒரு மாத காலம் பயிற்சிப் பெற்றேன். பின்னர் என்னை அவர் விற்றுவிட்டார்.

ஹக்கானி தலைமையின் கீழ் செயல்படும் ஒரு தளபதி தான் சிறுவர்களையும், இளைஞர்களையும் தற்கொலைத் தீவிரவாதிகளாக மாற்றி, அவர்களை ஹக்கானியிடம் விற்கின்றார். அஜீசுல்லா என்ற தளபதியைக் கொல்வதற்காக ஒரு குழு என்னை விலைக்கு வாங்கியது.

இதற்காக அவர் 35 இலட்சம் ரூபாய் முதல் 55 இலட்சம் ரூபா வரை பணம் வாங்குவார். இப்படி வாங்கிய தற்கொலைத் தீவிரவாதிகளை ஹக்கானி ஆப்கானிஸ்தானில் கூடுதல் விலைக்கு விற்று விடுவார்.

ஹக்கானி என்ன விலைக்கு ஆப்கானிஸ்தானில் விற்பார் என்பது தெரியவில்லை. இவ்வாறு ஆப்கானிஸ்தான் உளவுத் துறை தெரிவித்துள்ளது.

# ஈராக்கில் இரட்டை குண்டு வெடிப்பு! 35 பேர் பலி

பாக்தாத், ஜூலை 7

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து நடந்த இரட்டைக் குண்டு வெடிப்பில் 35 பேர் பலியாகினர். 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

பாக்தாத்தின் ராத் அல் தமிமி நகரின் தாஜின் நகராட்சிக் கட்டடத்தில் ரிமோட் மூலம் இயக்கப்பட்ட கார் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு சிறிது நேரத்துக்குள் அதே இடத்துக்கு அருகில் மற்றொரு குண்டு தாக்குதல் நடந்தது.

இந்த இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து அந்த நாட்டு தொலைக்காட்சி நேரடி செய்திகளை வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் அரசு கட்டடங்கள், பொதுமக்கள் கூடும் முக்கிய பகுதிகள், மசூதிகளை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவது தொடர்கிறது.

## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

### உன்னத சேவை சிறக்க வாழ்த்து



மக்கள் வங்கி என்ற பெயருக்கு ஏற்புடையதாக, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் - நகரம், பட்டினம், கிராமம், குறிச்சி என்ற வேறுபாடு இன்றி- வாழும் மக்களின் அபிமானத்துக்கு உரியதாக விளங்குவது மக்கள் வங்கி.

விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், சிறுவர்த்தகர்கள், சராசரி வருமானம் பெறுவோர் உட்பட்ட சகல தரப்பு மக்களினதும் காலடிக்குச் சென்று சேவையாற்ற வேண்டும் என்ற இலக்குடன் அந்நாள் அமைச்சர் ரி.பி இலங்கரத்னாவும் அவர் அங்கம் வகித்த அரசும் தூரநோக்குடன் ஆரம்பித்ததே மக்கள் வங்கி.

அவர்களின் சிந்தனை, செயல் வடிவம் பெற்று மேற்கூறிய சகலதரப்பு மக்களினதும் செல்லப்பிள்ளையாக இப்போது வளர்ந்து நிற்கிறது மக்கள் வங்கி. மக்களுடன் ஒன்றித்துவிட்ட வங்கிகளில் ஒன்றாக அது நிமிர்ந்து நிற்கிறது.

ஒரு காலத்தில் நகரப்புறங்களைச் சேர்ந்த பெரும் பணக்காரர்கள், வர்த்தகப் புள்ளிகளுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்பட்ட வங்கிச் சேவையை, முதன் முதலில் பல மட்டங்களைத் தாண்டி கிராம மட்டம் வரை எடுத்துச் சென்ற பெருமை மக்கள் வங்கிக்கே உரியது.

கீழ்த்தட்டு மக்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கெனப் பல கடன் வசதித் திட்டங்களை வகுத்து, அவர் தம் வாழ்க்கை நிலையை உயர்த்திய உத்தமத் தோழன் மக்கள் வங்கி என்பது மிகையல்ல. அதனால் எவரும் கிட்டச்செல்லக் கூடிய கிராமங்களின் நண்பனாகி மிளிர்கின்றது.

குடாநாட்டு மக்களைப் பொறுத்த வரையில் போர்க்காலத்திலும் தனது சேவையை மக்கள் மனம் குளிர வழங்கிய மக்கள் வங்கியின் சிறப்புச் சேவையை அவர்கள் மறக்கமாட்டார்கள்.

இப்போது பல வங்கிகள் குடாநாட்டில் கால்பதித்துச் சேவையாற்றினாலும், மக்கள் வங்கியின் சிறப்புறு சேவையை எமது பிரதேசத்தவர்கள் முன்னிலைப் படுத்தியே நோக்குவர்; மதிப்புத் தருவர்.

மக்கள் வங்கி,மக்களின் மனம் நிறைந்த வங்கி என்பது மட்டுமன்றி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குக் கைகொடுக்கும் தோழன் எனக்கூறினாலும் அது புகழ்ச்சியன்று.அத்தகு சிறப்பு மிக்க மக்கள் வங்கி, வடக்கு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு மேலும் பல்லாண்டுகள் வளம் சேர்க்க வாழ்த்துகிறோம்.

யாவர்க்குமாம் வங்கியின் நற்சேவை- என்று எமது மக்களுக்கு வளமும் நலமும் சேர்க்க மக்கள் வங்கி தனது உன்னத சேவையைத் தொடரட்டும், உயரட்டும்.

ஈ.சரவணபவன்
இயக்குநர், உதயன் வெளியீட்டகம்.

## மக்கள் வங்கியின் பொன்விழா 2011

### பல்கலைக்கழகப் பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



எமது தேசத்தின் வங்கி வரலாறு 183 வருட காலத்தைக் கொண்டது. 1961ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய அரசில் வர்த்தக அமைச்சரான ரி.பி. இலங்கரட்னாவால் முன் மொழியப்பட்ட பிரேரணை அடிப்படையில் மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கிகளை இணைத்து உருவாக்கப்பட்டது. வங்கி யின் சின்னம் கே.பி.அலுடெனியாவால்வரையப்பட்டு இன்று வரை மாற்றம் அடையாது இருக்கிறது. எல்லா இன,மொழி மக்களையும் ஒன்று படுத்தி இயங்கவைத்த முதலாவது அரச வங்கி என்ற பெயரைப் பெற்றிருக்கின் றது. இலங்கையில் மூன்று மொழிகளையும் உள்ளடங்கிய முதலாவது காசோலையை வெளியிட்ட பெருமை இந்த வங்கிக்குரியதாகும். 50 வருடமாகி பொன்விழாவைக் கொண்டாடும் வங்கி எமது வங்கி வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெற்று விட்டது.

வங்கியின் முதல் தலைவராக வின்சன் சுபசிங்க 1961 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். முதலாவது பொது முகாமையாளராக வில்மா எச். சொலமன்ஸ் நியமனமானார். இதுவரை 16 தலைவர்களும் 15 பொது முகாமையாளர்களும் வங்கியை 'மக்கள் மனம் அறிந்த வங்கி' என்ற மகுட வாசகத்துடன் வழி நடத்திச் சென்றுள்ளனர். பொன்விழா கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பதில் முதன் முதலாக வரலாற்றில் பொது முகாமையாளராக அ.வசந்தகுமார் நியமனம் பெற்றுள்ளமை தமிழர்கள் எல்லோருக்கும் மதிப்பைக் கொடுத்துள்ளது. அலரிமாளிகையில் நடைபெற்ற 50 ஆவது ஆண்டு விழாவில் மக்கள் வங்கித் தலைவர் தமிழர் ஒருவர் நியமனம் பெற்றுள்ளதைப் பற்றி மிகவும் புகழ்ந்து பாராட்டினார். அப்போது நானும் பெரும் மகிழ்ச்சியடைந்தேன்.

வங்கியானது கிராமிய மட்டத்தில் அதிகளவுக்கு கடன் சேவைகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு வகையான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. 686 கிளைகளுடன் நாடு முழுவதும் வலைப்பின்னலை உருவாக்கி மொத்த சொத்தாக ரூபா 550 பில்லியனையும் அத்துடன் வருடாந்த இலாபமாக 2010 இல் 4.7 பில்லியன் ரூபாவைப் பெற்றிருக்கின்றது. ஏறத்தாழ 13 மில்லியன் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு பலம்வாய்ந்த விருட்சயமாக வங்கி சென்றுகொண்டிருப்பதை எம்மால் காண கூடியதாக இருக்கின்றது.

கால சூழல் ஏற்ப நவீன தொழில்நுட்பங்களுடன் இணைந்து புதிய பல வகையான இலத்திரனியச் சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. பொன்விழா காணும் இந்த காலகட்டத்தில் வங்கியில் உள்ள நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எல்லோரையும் நான் எனது மனதார வாழ்த்துகின்றேன். நீங்கள் எல்லோரும் நேர்மையாக அர்ப்பணியுடன் செயற்பட்டமையும் வாடிக்கையாளர்கள் அரவணைத்து சேவை வழங்கியதுமே உங்கள் வங்கியின் பலத்தை அதிகளவுக்கு உயர்த்தி ஒரு விருட்சயமாகக் காண்பிக்கின்றது. வங்கியின் சேவை வெற்றியுடன் தொடரட்டும். எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பேராசிரியர் மா.நடராஜசுந்தரம்
தலைவர், நிதி முகாமைத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சந்திப்பு...



சர்வதேச நிதியமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பதவியேற்ற கிறிஸ்டின் லகாட்டை, இயக்குநர் ஜோன் லிப்ஸ்கே(வலது), அருகில் சர்வதேச நிதியமைப்பின் டீன் ஷாக்கோர் ஷாலன் ஆகியோர் தலைமையகத்தில் சந்தித்துக் கொண்டனர்.

# செங்கடலில் படகு மூழ்கி 200 பேர் பலி

துபாய்,ஜூலை7

சவுதி அரேபியாவுக்கு இடம் பெயர்ந்து சென்றவர்களின் படகு சூடானுக்கு அருகில் செங்கடல் பகுதியில் மூழ்கியது. இந்த பயங்கர விபத்தில் 200 பேர் பலியானார்கள்.

விபத்தில் சிக்கியவர்களில் 3 பேர் மட்டுமே மீட்கப்பட்டு உள்ளதாக சூடான் ஊடக மையம் தெரிவிக்கிறது. இது அரசு சார்பு நிறுவனம் ஆகும்.

சவுதி அரேபியாவுக்கு ஆள்களை கடத்திச் சென்ற போதே படகு தீப்பிடித்தது என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டது. படகில் இருந்தவர்கள் சட், நைஜீரியா, சோமாலியா மற்றும் எரித்திரியா பகுதியை சேர்ந்தவர்கள் ஆவார் கள்.

விபத்துக்கு காரணமான நான்கு ஏமன் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடல் வழியாக 247 பேர் கடத்திச் செல்லும் முயற்சியையும் சூடான் உள்ளூர் நிர்வாகத்தினர் முறியடித்தனர்.

# பத்தாவது மாடியிலிருந்து விழுந்த குழந்தையை காப்பாற்றிய பெண்

## சீனாவில் நடந்த சம்பவம்

பீஜிங், ஜூலை 06

சீனாவில், பத்தாவது மாடியிலிருந்து கீழே விழுந்த இரண்டு வயது குழந்தைய, வழியில் சென்று கொண்டிருந்த பெண் தாவிப் பிடித்துக் காப்பாற்றினார்.

சீனாவின் ஜியாங் மாகாணத்தில் உள்ள வுஜூபிங் என்ற பெண் வழியில் சென்று கொண்டிருந்தார். அப்போது, அங்குள்ள குடியிருப்பின் பத்தாவது மாடியின் ஜன்னலிலிருந்து, ஒரு குழந்தை, ஊசலாடியபடி கீழே விழுந்து கொண்டிருந்ததை கவனித்தார்.

ஓடிச்சென்று கீழே விழுந்த குழந்தையை இருகரங்களால் தாங்கிப் பிடித்தார். எனினும் குழந்தை அவரது கையிலிருந்து தவறி, புல் தரையில் விழுந்து காயமடைந்தது. இதில், பெண்ணின் இடது கையில் முறிவு ஏற்பட்டது. குழந்தையும் பலத்த காயங்களுடன் உயிருக்குப் போராடிய நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது.

இதுகுறித்து வைத்தியசாலை இயக்குநர் ஜின்டெங்பெங் கூறுகையில், "உயிரைப் பணயம் வைத்து குழந்தையை காப்பாற்றி உள்ளார். அவர் தலையில் அல் லது இடுப்பில் குழந்தை விழுந்திருந்தால், அப்பெண்ணுக்கு. பக்கவாதம் ஏற்பட்டிருக்கும்" என்று தெரிவித்து, இலவச சிகிச்சை அளித்தார்.

# ஐ.எம்.எவ் தலைவராக பதவியேற்றார் கிறிஸ்டின் லகாட்

வாஷிங்டன், ஜூலை 7

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஐ.எம்.எப் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் சர்வதேச நிதியமைப்பின் முதல் பெண் தலைவராக பிரான்ஸ் நாட்டின் கிறிஸ்டின் லகாட் பதவியேற்றுள்ளார்.

அவருக்கு ஐ.எம்.எவ் அமைப்பின் தற்காலிக நிர்வாக இயக்குநர் ஜோன் லிப்ஸ்கே பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

5 ஆண்டுகள் பதவியில் நீடிக்கும் இவர் சர்வதேச வர்த்தக மற்றும் நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்துக்கு உதவுதல், கடன் பெற்ற நாடுகள் கடனை திருப்பிச் செலுத்துகின்றனவா? எனக் கவனித்தல், நாடுகளின் நாணய பரிவர்த்தனை மதிப்புக்களை கண்காணித்தல், உறுப்பு நாடுகளின் பொருளா தாரத்துக்கு உதவுதல் போன்ற பணிகளை மேற்கொள்வார்.

இவருக்கு சலுகைகள் உட்பட 4 லட்சத்து 6 ஆயிரத்து 940 டொலர்கள் சம்பளமாக கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ துடுப்பாட்டம் ஸ்ரான்லிக் கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய 17 வயதுக் குட்பட்ட அணியினருக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அணியினருக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட சிநேக பூர்வ துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் கனகரத் தினம் மத்திய மகா வித்தியா லய அணியினர் 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றனர். முதலில் துடுப்பெடுத்தாடிய க்னக ரத்தினம் மத்திய மகா வித்தியா லய வீரர்கள் 43 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றனர்.

மதன் 76, தர்சன் 47, பிரசாத் 35, சுரேஷ் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சிந்துஜன் 3, சுகிதரன் 2, கனிஜன் 2 விக்கட் டுக்களைப் கைப்பற்றினர்.

247 ஓட்டங்கள் எடுத்ததால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியினர் 42 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

இதில் றொபேட் 88, நிரோஜன் 22, சிந்துஜன் 14, துவாரகன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுர்சன் 3, மதன் 2, மாதவன், பிரசாத், வினோத் ராஜ் தலா ஒரு விக்கட்டுக்களை கைப்பற்றினர். போட்டியில் சிறப்பாட்டக்காரராக மதன் தெரிவுசெய்யப்பட்டார்.

(ம)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் அளவெட்டி அருணாசலம் சம்பியன்

வலி.வடக்கு, ஜூலை 7

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட மாகாணபாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தி யாலயம் வடமாகாண சம்பி யனாக தெரிவுசெய்யப்பட்டது.

வவுனியா நகர சபை மைதா னத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்த வர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் ஒவ் வொரு சுற்றுப்போட்டியின் இறுதி வரைக்கும் மோதிக் கொண்டார்கள்.

மூன்று சுற்றுக்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றில் அருணாசலம் வித்தியாலயம் 25:19 புள்ளிகள் என்ற அடிப் படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சமபலத்துடன் 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம்சுற்று இரு அணி களுக்கும் வேண்டியதாகவும் வெற்றியைத் தீர்மானிப்பதாக வும் அமைந்த நிலையில் இரு அணிகளும் பெரும் பிரயத் தனம் எடுத்து விளையாடிய போதிலும் அருணாசலம் வித்தி யாலயம் 25:18 புள்ளி அடிப் படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் அள வெட்டி அருணாசலம் வித்தி யாலயம் 2:1 என்ற கணக்கில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூ ரியை வெற்றிபெற்று வட மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (ம-86)

# உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி கரப்பந்தாட்டப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 7

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.கிழக்கு பிரதேச சபையினர் உள்ளூராட்சி சபைகளுக்கி டையிலான கரப்பந்தாட்டப் போட்டியை நடத்த வுள்ளனர்.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கு மாறு சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ம-207)



2011 ஆண்டின் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில்ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் 17 வயது ஆண்கள் அணியினர் இரண்டாம் இடத்தையும் 15 வயது பெண்கள் அணியினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். பாடசாலை முதல்வர் அ.அருணந்திசிவம், விளையாட்டு பொறுப்பாசிரியர் ந.கஜேந்திரன் மற்றும் ஆசிரியர்கள், உதவிப்பயிற்றுநர்களுடன் போட்டியில் வெற்றி பெற்ற அணியினர். (ம)

# பிரதேச செயலகங்களின் தடகளப் போட்டி முடிவுகள்

வவுனியா மாவட்ட செயலக விளை யாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட் டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் பிர தேச செயலகங்களுக்கு இடையே நடத் திய பெண்களுக்கான தடகளப் போட்டி களில் வெற்றி பெற்றவர்களின் விவரங் கள் வருமாறு:

**100 மீற்றர்**

ஜே.றொஜிற்றா (வவுனியா வடக்கு), எஸ்.யசோதினி (செட்டிகுளம்), ரி.நாக மயில் (வவுனியா வடக்கு).

**200 மீற்றர்**

கே.லெகாயினி, ஜே.றொயிற்றா, எம். தேவிகா (வவுனியா வடக்கு)

**400 மீற்றர்**

கே.லெகாயினி, கே.கிருஸ்ண வேணி (வவுனியா வடக்கு)

**800 மீற்றர்**

நி.சுதனலோஜினி, எஸ். குமுதினி, எம்.டேவிகா (வவுனியா வடக்கு)

**1500 மீற்றர்**

ரி.சுதனலோஜினி, ஆர்.சாலினி, எம். வினோதினி (வவுனியா வடக்கு)

**5000 மீற்றர்**

ரி.சுதனலோஜினி, எம்.வினோதினி, எஸ்.சஞ்சிகா (வவுனியா வடக்கு)

**10000 மீற்றர்**

எம்.வினோஜினி, எஸ்.சஞ்சிகா, ஆர். சாலினி (வவுனியா வடக்கு)

**குண்டு போடுதல்**

ரி.அனுசா,ஆர்.தர்மிகா(வவுனியா வடக்கு), எம்.சுபாஜினி (வவுனியா தெற்கு)

**தட்டெறிதல்**

ரி.அனுசா, ஆர்.தர்ஷிகா (வவுனியா வடக்கு), எம்.சுபாஜினி (வவுனியா தெற்கு)

**ஈட்டியெறிதல்**

ரி.அனுசா (வவுனியா வடக்கு), எம். சுபாஜினி (வவுனியா தெற்கு), என். நிலினி (வவுனியா வடக்கு)

**நீளம் பாய்தல்**

எஸ்.சுதர்சினி (வவுனியா வடக்கு), கே.ஹம்சுன் நிஷா(செட்டிகுளம்), எஸ். றொஜிற்றா (வவுனியா வடக்கு).

**உயரம் பாய்தல்**

எஸ்.வாசுகி(வவுனியா வடக்கு), கே. ஹம்சுன் நிஷா, ஜெலிலா (செட்டிகுளம்)

**100 மீற்றர் தடை தாண்டல்**

எஸ்.சுதர்சினி (வவுனியா வடக்கு), கே.ஹம்சன்நிஷா (செட்டிகுளம்), கே. ரஜிந்தினி (வவுனியா வடக்கு)

**400 மீற்றர் தடைதாண்டல்**

கே.லெகாயினி, எஸ்.சுதர்சினி, கே. கோமளாதேவி (வவுனியா வடக்கு)

**5000 மீற்றர் வேகநடை**

ரி.நாகமயில், எம்.பாபுஜி, கே.கிருஷ்ண வேணி (வவுனியா வடக்கு). (ம-86)

# கூட்டுறவு தின விளையாட்டுப் போட்டி வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

89 ஆவது கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக குருநாகல் மாவட்ட வெலகெதர மைதா னத்தில் நடைபெற்ற போட்டியில் வட மாகாணம் சார்பாக பங்குபற்றி வெற்றி யீட்டிய வீரர்கள், வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

கி.ஜெயந்தன்-1500 மீற்றர்- 3 ஆம் இடம், (பண்டத்தரிப்பு ப.தெ.வ. கூ.ச), செ.விநோதன் - 200 மீற்றர் - 3ஆம் இடம், 4X400 மீற்றர் முதலாம் இடம் (கொடிகாமம் ப.நோ.கூ.ச), கி. ஜெயந்தன், மரதன் ஓட்டம் ஆண் - 3ஆம் இடம், (பண்டத்தரிப்பு ப.தெ.வ.கூ.ச), சி.ஞா னேஸ்வரன் - மரதன் ஓட்டம் ஆண் - 7ஆம் இடம் (நெடுந்தீவு ப.நோ.கூ.ச), ஞா.சுமதி - மரதன் ஓட்டம் பெண் - 3ஆம் இடம், (பண்டத்தரிப்பு ப.தெ. வ.கூ.ச), கு.ஜனுசா - மரதன்ஓட்டம் பெண் 7ஆம் இடம் (பண்டத்தரிப்பு ப. நோ.கூ.ச), த.நூதனா - வேகநடை பெண் முதலாம் இடம்(பனங்காமம் பற்று ப. நோ.கூ.ச),ஆர். அஜந்தினி - 100 மீற்றர் பெண் - 2ஆம் இடம் (பனங்காமம் பற்று ப. நோ.கூ.ச), எம்.சுகந்தினி - (400 மீற்றர்) 2 ஆம் இடம் - (பனங்காமம் பற்று ப. நோ.கூ.ச), எம்.சுகந்தினி - 1500 மீற் றர் 2ஆம் இடம் (பனங்காமம் பற்று ப. நோ. கூ.ச), எம்.சுகந்தினி - 800 மீற்றர் 3ஆம் இடம்(பனங்காமம் பற்று ப. நோ.கூ.ச), ஆர்.அஜந்தினி (200 மீற்றர்) 3ஆம் இடம் (பனங்காமம்பற்று ப.நோ.கூ.ச), ,ஆ. பிறேமதாஸ் - 400 மீற்றர் ஆண் முதலாம் இடம்(நாணாட்டான்பற்று ப. நோ.கூ.ச), 4X400 பெண் 2ஆம் இடம்(பனங்காமம் பற்று ப.நோ.கூ.ச), ஏ.ஜமுனா - மரதன் ஓட்டம் பெண் 8ஆம் இடம் (பனங்கா மம்பற்று ப.நோ.கூ.ச), துடுப்பாட்டம் 2ஆம் இடம் (தாழ்வுப்பாடு க.தொ.கூ. ச), மு.சந்திரவேந்தன் - வேகநடை ஆண் - 3ஆம் இடம் (செட்டிக்குளம் ப.நோ. கூ.ச),

(ம-23-26)



யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தினால் மாவட்ட மட்டத்தில் அணிகளுக்கிடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்டச் சம்பியனான ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறுமா ஆஸ்திரேலியா



பெண்களுக்கான உலகக் கிண்ணத் தொடரில் நடக்கவுள்ள லீக் போட்டியில் ஆஸ்திரேலியா, நோர்வே அணிகள் மோதுகின்றன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி காலிறுதிக்கு முன்னேற, ஆஸ்திரேலிய வீராங்கனைகள் காத்திருக்கின்றனர்.

ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது 'பீபா' உலகக் கிண்ண கால் பந்து தொடர் நடக்கின்றது. இதில், பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன. நடக்கவுள்ள ''டி' பிரிவு லீக் போட்டியில், ஆஸ்திரேலியா-நோர்வே அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் 3 புள்ளிகளுடன் உள்ளன. எனவே இன்று வெற்றி பெறும் அணி காலிறுதிக்கு முன்னேறும். 'டி' பிரிவில் நடக்கவுள்ள மற்றொரு லீக் போட்டியில் பிரேசில் - ஈக்குவடோரியல் கினியா அணிகள் மோதுகின்றன. ஏற்கனவே இரண்டு போட்டியில் வெற்றி கண்ட பிரேசில் அணி, காலிறுதிக்கு தகுதி பெற்றது. இரண்டு போட்டியிலும் தோல்வி கண்ட கினியா அணி, காலிறுதி வாய்ப்பை இழந்தது.

'ஏ' பிரிவில் நடக்கவுள்ள லீக் போட்டியில் ஜேர்மனி-பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. ஏற்கனவே இவ்விரு அணிகள் தலா 2 போட்டியில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றுவிட்டன. எனவே இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிக்கும். இந்தப் பிரிவில் நடக்கும் மற்றொரு லீக் போட்டியில் கனடா - நைஜீரியா அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் தலா இரண்டு போட்டியில் தோல்வி கண்டு, ஏற்கனவே காலிறுதி வாய்ப்பை இழந்துள்ளன. எனவே, இந்தப் போட்டியில் முழுத்திறமையை வெளிப்படுத்தும் அணிக்கு ஆறுதல் வெற்றி கிடைக்கும். (15)

# வந்தது சிக்கல் சங்ககாரவுக்கு



இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்திலுள்ள அரசியல் தலையீடுகள், ஊழல்கள் குறித்து விமர்சித்த இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளார்.

33 வயதான சங்கக்கார, நேற்று முன்தினம் லண்டன் லோர்ட்ஸில் நடந்த எம்.சி.சி. கொலின் கௌட்ரி ஞாபகார்த்த சொற்பொழிவில் இந்த விமர்சனங்களை தெரிவித்திருந்தார்.

வெளிப்படையான அந்த உரையின் பின்னர் குமார் சங்ககாரவை அரங்கிலிருந்தவர்கள் எழுந்து நின்று பாராட்டி கௌரவித்தனர். எனினும் இலங்கையில் அந்த உரை சர்ச்சையை கிளப்பியுள்ளது.

சங்ககாரவின் உரை குறித்து விசாரணை நடத்தி விளக்கமளிக்குமாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உத்தர விட்டுள்ளார்.

சங்ககாரவின் உரை குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து விளக்கமளிக்குமாறு சங்ககார கோரப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மீதான நிதி முறைக் கேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையடுத்து அதன் இடைக்கால நிர்வாகக் குழுவை கலைத்த சில நாள்களிலேயே முன்னாள் அணித்தலைவரான குமார் சங்ககார இந்தச் சொற்பொழிவை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அவர் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு வீரர். ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுடன் அவர் ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளார். இதுபோன்ற கருத்தை கூற்றுகளை அவர் வெளியிட முடியாது' என்று அமைச்சர் அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

'அவர் அனுமதி பெற்றிருக்க வேண்டும். கிரிக்கெட் நிர்வாகம் குறித்தோ கிரிக்கெட் குறித்தோ அவர் பேச முடியாது. தன்னைப்பற்றி எதுவும் பேசலாம். இது குறித்து உடனடியாக அறிக்கையொன்றை எனக்கு சமர்ப்பிக்குமாறு கிரிக்கெட் சபைத் தலைவருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்'' என்று அமைச்சர் அளுத்கமகே தெரிவித்துள்ளார். (15)

# சிக்கலில் இந்தியா

ஊக்க மருந்து சோதனையில் இந்திய வீராங்கனைகள் வரிசையாக சிக்க மத்திய அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. தடகள பயிற்சியாளர் யூரி ஓகோராட்னிக் நீக்கப்பட்டுள்ளார். இந்தப் பிரச்சனை தொடர்பாக விசாரிக்க, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு உள்ளது.

சர்வதேச தடகள மையத்தின் சார்பில் சமீபத்தில் இந்திய தடகள வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதில் மன்தீப் கவுர் (பஞ்சாப்), ஜுவானா மர்மு (ஒடிசா), மற்றும் கேரளாவின் சினி ஜோஸ், டயானா மேரி தாமஸ், ஹரி கிருஷ்ணன் மற்றும் சோனியா என்று ஆறு பேர், ஊக்கமருந்து பயன்படுத்தியது [illegible]ரியவந்தது.

ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்த அஷ்வினி (கேரளா), பிரியங்கா பன்வார் (உத்திரப்பிரதேசம்) என்று மேலும் இருவர் பிடிபட்டனர். இதில் மன்தீப் கவுர், சினி ஜோஸ், அஷ்வினி ஆகிய மூன்று பேர், கொமன்வெல்த் ஆசிய விளையாட்டு போட்டியில், தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற அணியில் இடம் பெற்றிருந்தனர்.

### பயிற்சியாளர் தொடர்பு?

பிடிபட்ட எட்டு பேரில், ஆறு பேர் இந்திய தடகள பயிற்சியாளராக இருந்த உக்ரைனின் யூரி ஓகோராட்னிக்கிடம் பயிற்சி பெற்றவர்கள். இதனால் இவருக்கும் ஊக்க மருந்து பிரச்னைக்கும் தொடர்பு இருக்கும் என்று சந்தேகம் எழுந்தது. இதனால் யூரியை பதவி நீக்கம் செய்ய, மத்திய விளையாட்டு அமைச்சர் அஜய் மேகன், உத்தர விட்டுள்ளார்.

இதுகுறித்து அஜய் மேகன் கூறியது:

ஊக்கமருந்து சோதனையில் பிடிபட்ட எட்டு பேர், இந்தியாவுக்கும் பெரும் அவமானத்தை தேடி தந்துள்ளனர். இவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. அதே நேரம், பெரும்பாலனவர்கள் தங்களை அறியாமல் இதை பயன்படுத்தியுள்ளனர்.

எதில் ஊக்கமருந்து இருக்கும் என்பது பயிற்சியாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு நன்கு தெரியும். இவர்களிடம் இரக்கம் காட்டமுடியாது. இதனால் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, பயிற்சியாளர் மற்றும் நிர்வாகிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி[illegible]ளது.

முதலில் உக்ரைன் பயிற்சியாளர் யூரி ஓகோராட்னிக்கை பதவியில் இருந்து விடுவிப்பது என்று முடிவெடுத்துள்ளோம். இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. தவிர, இதில் சம்பந்தப்பட்ட உள்ளூர் பயிற்சியாளர்கள் தவிர, வேறு யார், யாருக்கு தொடர்பு உள்ளதோ, அனைவரும் தண்டிக்கப்படுவார்கள்.

இதுகுறித்து ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது தேசிய ஊக்கமருந்து தடுப்பு மையத்தின் (என்.ஏ.டி.ஏ.) ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்படும். ஊக்கமருந்து பயன்படுத்தியதற்கான காரணங்களை இந்தக் குழுவினர் தீவிரமாக விசாரிப்பர்.

தவிர, தடைசெய்யப்பட்ட மருந்து பொருட்கள், பாட்டியாலாவில் உள்ள என்.ஐ.எஸ்.யிடம் இருந்து தவறான முறையில் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து, மூன்று நாட்களில் அறிக்கை தருமாறு, இந்திய விளையாட்டு ஆணையம் (எஸ்.ஏ.ஐ.) மற்றும் இந்திய தடகள கூட்டமைப்பை (ஏ.எப்.ஐ.) கேட்டுக்கொண்டுள்ளோம். இதில் தவறு இருப்பது தெரியவந்தால், எஸ்.ஏ.ஐ. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்காலத்தில் வீரர், வீராங்கனைகள் ஆலோசனை பெற, வைத்தியர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும். வெளிநாடுகளில் இருந்து நாடுதிரும்பும் பயிற்சியாளர்கள், தடைசெய்யப்பட்ட பொருட்களை கொண்டுவருவதை, தீவிரமாக கண்காணிக்க சுங்க வரித்துறையுடன் இணைந்து செயல்படுவோம் - இவ்வாறு அஜய் மேகன் தெரிவித்தார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட தடகள பயிற்சியாளர் யூரி ஓகோராட்னிக் கூறுகையில், ஊக்க மருந்து பிரச்னையில் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை. ஒவ்வொருவருக்கும் தனியான உணவு கட்டுப்பாடு உள்ளது. அதைமட்டும் வாங்குமாறு தான் கூறினேன். 12 ஆண்டுகளாக பயிற்சியாளர் பொறுப்பில் இருக்கும் எனக்கு, 20 ஆண்டுகளுக்கு முன்பே, அனபாலிக் ஸ்டிராய்டு மருந்து தடைசெய்யப்பட்ட விவரம் தெரியும். இதனுடைய கடுமையான விளைவுகள் குறித்து தெரிந்தும், இதை கொடுக்க நான் முட்டாள் அல்ல. வீராங்கனைகளுக்கு ஊக்க மருந்து அல்ல; பதக்கங்களை தான் பெற்று தந்தேன், என்றார்.

மத்திய அமைச்சர் அஜய் மேகன் நடவடிக்கை குறித்து இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (ஐ.ஓ.ஏ.) தற்காலிக தலைவர் வி.கே.மல்கோத்ரா கூறுகையில், இந்தியாவில் உள்ள அனைத்து எஸ்.ஏ.ஐ. மையங்கள், வைத்தியர்கள், பயிற்சியாளர்கள் என்று அனைவரும் விளையாட்டு அமைச்சகத்தின் கண்காணிப்பில் தான் உ[illegible] சம்பவத்துக்கு விளையாட்டு அமைப்புகளை மட்டும் குற்[illegible] விளையாட்டு அமைச்சகத்துக்கும் பங்குள்ளது, என்றார். (15)

# சிக்கினார் ஸ்ரீகாந்த்



எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளை சேர்ந்த 'ஏ' அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி நடக்கின்றது.

இளம் வீரர்கள் திறமையை கண்டறியும் விதமாக இந்தத் தொடர் நடத்தப்படுகின்றது. இந்த தொடருக்கான இந்திய அணி தெரிவு சமீபத்தில் நடந்தது.

இதில் தெரிவுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த்தின் மகன் அனிருத்தா தேர்வு செய்யப்பட்டார். இது தற்போது சர்ச்சையை கிளப்பியுள்ளது. அனிருத்தாவை தேர்வு செய்ய ஸ்ரீகாந்த் தனி கவனம் செலுத்தியதாக கூறப்படுகிறது. உள்ளூர் போட்டிகளில் அனிருத்தா இந்தக் காலப்பகுதியில் சொல்லும்படி ஓட்டங்கள் குவிக்கவில்லை.

மேலும் ஐ.பி.எல்லிலும் ஜொலித்ததாக தெரியவில்லை. அப்படியிருந்தும் அவர் [illegible] உள்ளது. (15)

# ஆட்டத்தைத் தேட வேண்டும்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கெவின் பீட்டர்சன் தனது ஆட்டத் திறனை மீண்டும் தேடும் நிலையில் உள்ளார்.

இவர் இங்கிலாந்து அணியின் ஆரம்ப ஆட்டக்காரராகவும் வந்துள்ளார். லோர்ட்சில் இலங்கை அணிக்கு எதிரான 3 ஆவது ஒரு நாள் போட்டியில் குறிப்பிடத்தக்க அளவு ஆடினார். லோர்ட்சில் ஆடிய விதம், தனக்கு மிகுந்த திருப்தியை அளித்துள்ளது என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கெவின் பீட்டர்சன், 2008 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த போது ஒரு நாள் போட்டியில் 7 ஆவது சதத்தை எடுத்தார். 30 இன்னிங்சிற்கு முன்பாக அந்த சதம் பெறப்பட்டது.

தற்போதைய இலங்கை அணிக்கு எதிரான நட் வெஸ்ட் தொடரில் சுழற்பந்து வீச்சாளர் ஜீவன் மெண்டிசிடமே 3 முறை ஆட்டம் இழந்துள்ளார். சுழற்பந்து வீச்சு பலவீனத்தில் ஆட்டமிழப்பதாக கருதக் கூடாது. எனது ஆட்டத்திறனில் நம்பிக்கை உள்ளது நிச்சயம் வரவிருக்கும் போட்டிகளில் தலைவர் குக்கிற்கு உதவியாக இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (15)

# இரண்டு வருட அவகாசம்

தேசிய கிரிக்கெட் சபைகள் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபட்டு, சுந்திரமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் அதிகாரிகளால் நிர்வகிப்பதற்கு ஏற்ற வகையில் யாப்புகளை திருத்திக் கொள்வதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) இரண்டு வருடகால அவகாசம் வழங்கியுள்ளது. ஹொங்கொங்கில் நடைபெற்ற ஐ.சி.சி நிறைவேற்றுக்குழு கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது ஒரு முக்கிய விவகாரம் என்று ஐ.சி.சி பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோர்காட் தெரிவித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து அங்கத்துவ நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் சுதந்திரமான தேர்தல் நடத்தப்படுவதற்கும் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபடுவதற்கும் ஏற்றவாறு தமது யாப்புகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் கிரிக்கெட் சபைகளில் இந்தத் தீர்மானம் கடும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தசாமி இரவீந்திர்நாதன்

(மயூரன் ராஸ்போட் உரிமையாளர்)



தொண்டமானாறு, செல்வச்சந்நிதியைப் பிறப்பிடமாகவும், சாவக்சேரி வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரவீந்திரநாதன் (ரவி) (06.07.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தசாமி- இராசபூபதியின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், திருமதி கஜானந்தி பிரகாஷ், வேணுகானன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகாஷின் அன்பு மாமனும், அபிஷனின் அன்புப் பேரனும், ரகுநாதன், சிவநாதன், புஸ்பநாதன், மாலினி, பவானி, காலஞ்சென்ற உருத்திரநாதன் மற்றும் இரஞ்சநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணையம்- 109137

தகவல்:
குடும்பத்தினர்.

# நீதிமன்றில் சைக்கிள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

உரிமை கோரப்படாதAR/209/11 இலக்கமுடைய சைக்கிள் சுன்னாகம் பொலிஸாரினால் மல்லாகம் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் உரிமையாளர் உரிய ஆவணங்களை மல்லாகம் நீதிமன்ற பதிவாளர் காரியாலயத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

## வேலையாள்கள் தேவை

ஹோட்டல் ஒன்றுக்கு சப்ளையர் மற்றும் சமையல் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

விக்னா ஹோட்டல்,
566, கே.கே.எஸ். வீதி, யாழ்.

## அபூர்வ ஜோதிடம்

உடலை வாட்டி வதைக்கும் நீரிழிவு, குழந்தையை சிதைக்கும் கெற்ப வியாதி, அல்சர், சிறுநீரக வியாதி குணமாதல்.

சனி, ஞாயிறு: 8.30- 2pm உயரப்புல பிள்ளையார் கோயிலடி, தபால் பெட்டி லேன், அனைக்கோட்டை.
T.P- 0773212740

## அடிப்படை உடல் பரிசோதனை.

கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.




*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & LH Lava Hospitals

Member of Reg No:PV74170
Lava Holdings Pvt Ltd

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

# கண்ணீர் அஞ்சலி



மானிப்பாயை வதிவிடமாகக் கொண்ட எமது ஆசிரியர் க.சி. சிவகுமார் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி
**சிவரட்ணம் சிவபுஸ்பராணி**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்,
பண்டத்தரிப்பு.

(5542)

# மரண அறிவித்தல்

## கந்தன் கிட்டுனர்



கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கிட்டுனர் (04.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம், இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோணன், குட்டி ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற வில்வரத்தினம், பரமலிங்கம் மற்றும் சிவலிங்கம்(கனடா), விசாகரத்தினம், ராசாத்தி அம்மா(கனடா), ரோகினியம்மா, ஐயாத்துரை, பூவிலிங்கம்(கனடா), சிவனடி (லண்டன்), சிவாநந்தம்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலா, மனோன்மணி(கனடா), வேவி, இராணி, சந்திரிக்கா(கனடா), யோகா(லண்டன்), பாமா (கனடா), அனுசா, தில்லையம்பலம்(கனடா), பிறைசூடி ஆகியோரின் பாசமிகு மாமனும், தர்சன் (லண்டன்), தீபா, நிசோ, காலஞ்சென்ற கபில் மற்றும் நதி, நிதன், கண்ணன்(கனடா), கவிதா(கனடா), நித்தியா(கனடா), நிஷாந்தன்(கனடா), சந்திரிக்கா, சுகுந்தன், சுகுந்தினி, காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் கயனி, ரவீந்திரன், செல்வன் (கனடா), ஞானி, பரினா(கனடா), ஆசா(கனடா), கஸ்த்தூரி(கனடா), ஜெனி, ரோகினி, சுபா, நிஷா, கௌசி, ஜீவா, சாந்தன், கோகுலன், லக்சன், கயானா, பிரசன்னா, தர்மிதா(கனடா), அஸ்வின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், விது, கிஷாந், நிதர்சனா, சிந்து, சியானு, சுகன்யா, பிரசிந், அபிசன்(கனடா), அனுஸ்க்கா(கனடா), நிகிசா(கனடா), அகிசா(கனடா), நதி(கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரிப்பாய், அச்சுவேலி. (5548) பிறைசூடி குடும்பம்.

# கரைச்சி கிழக்கு ப.நோ. கூ.சங்கம், வட்டக்கச்சி

## முக்கிய அறிவித்தல்

30.06.2011ஆம் திகதியுடன் முடிவடைந்த குறித்த வட்டக்கச்சி மத்தி, வட்டக்கச்சி மேற்கு, வட்டக்கச்சி கிழக்கு, மாயவனூர், மாவடி அம்மன், இராமநாதபுரம்மத்தி, இராமநாத புரம் தெற்கு, இராமநாதபுரம் கிழக்கு கிளைகளுக்கான கிளை பொதுச் சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியானவர்களின் அங்கத்தவர் பட்டியல் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் தகுதியான அங்கத்தவர்களின் பெயர்கள் வித்தியாசமாகவோ அல்லது தவறவிடப்பட்டிருந்தாலோ சங்கத்தின் செயலாளரிடம் எழுத்து மூலம் தொடர்பு கொண்டு திருத்துவதற்கு அல்லது சேர்த்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தங்களது வதிவிடத்தையும், ஆள் அடையாள ஆவணத்தையும் 06.07.2011- 15.07.2011 ஆம் திகதிக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளும் அதேவேளை தற்போது மூடப்பட்ட நிலையிலுள்ள பின்வரும் கிளைகளுக்கான அங்கத்தவர் பட்டியல் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

01) இராமநாதபுரம் மத்தி
02) இராமநாதபுரம் தெற்கு
03) இராமநாதபுரம் கிழக்கு

(கி/1504)

தகவல்:-
செயலாளர்,
கரைச்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கம், வட்டக்கச்சி.

## மஹஜன சம்பத / Mahajana Sampatha

மஹஜன சம்பத
Mahajana Sampatha

05.07.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2415

வெற்றி எழுத்து: X
வெற்றி எண்கள்: 8 3 3 2 7 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 8 | 3 | 3 | 2 | 7 | 8 | ரூபா.24,549,224/= | பரிசு - |
| 1 பரிசுகள் | ■ | 8 | 3 | 3 | 2 | 7 | 8 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | ■ | ■ | 3 | 3 | 2 | 7 | 8 | ரூபா. 100,000/= | பரிசுகள் 10 |
| 3 பரிசுகள் | ■ | ■ | ■ | 3 | 2 | 7 | 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 142 |
| 4 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | 2 | 7 | 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1394 |
| 5 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | 7 | 8 | ரூபா. 100/= | பரிசுகள் 13986 |
| 6 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 8 | ரூபா. 20/= | பரிசுகள் 138762 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசுகள் | ■ | 8 | 3 | 3 | 2 | 7 | ■ | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | ■ | 8 | 3 | 3 | 2 | ■ | ■ | ரூபா. 1,000/= | பரிசுகள் 147 |
| 9 பரிசுகள் | ■ | 8 | 3 | 3 | ■ | ■ | ■ | ரூபா. 100/= | பரிசுகள் 1362 |
| 10 பரிசுகள் | ■ | 8 | 3 | ■ | ■ | ■ | ■ | ரூபா. 50/= | பரிசுகள் 13863 |
| 11 பரிசுகள் | X | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா. 20/= | பரிசுகள் 55470 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,213,590.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 25,071,533.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

# வெற்றியாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

HNB ASSURANCE
Form brighter future



R.ANURAJAH (T) (Senior - Advisor)
M.YOHENDRAN (V/T) (Group Leader)
T.MOHANRAJ (V/T) (Group Leader)
K.KUMARATHASAN (V/T) (Bancassurance officer HNB Nelliyady)
R.SINTHUJAN (T) (Asst - Field Manager)
K.SUTHARSAN (V/T) (Team leader)
P.THINESKUMAR (T) (Group Leader)
G.PIRATHEEPAN (V/T) (Asst. Field Manager)
B.ALAN HUMER (V/T) (Group field Manager)
M.SASIKARAN (V/T) (Manager - Jaffna Branch)
S.M.PUVIRAJ (V/T) (Zonal Manager North East)

2010/2011 இல் HNB ASSURANCE இனால் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற மாபெரும் சந்தைப்படுத்தல் போட்டியில் வெற்றியிட்டி தாய்லாந்து, வியட்நாம் நாடுகளுக்குச் செல்லவுள்ள வெற்றியாளர்களை வாழ்த்துகின்றோம்.

HNB ASSURANCE- JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் சட்டமும் ஒழுங்கும் அப்பட்டமாக மீறப்படுகின்றன. தேர்தல் சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் முற்றும் முழுதாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் நடவடிக்கைகளில் அரச அதிகாரிகளும், இராணுவமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடமுடியாது. ஆனால் அரச இயந்திரங்கள் அனைத்தும் அரசுக்கு ஆதரவு திரட்டும் பணியில் முடுக்கி விடப்பட்டுள்ளன. பொலிஸார் பெயரளவில் மட்டுமே பொலிஸ் அதிகாரங்களும், இராணுவ அடக்குமுறைகளையும் கைகளில் எடுத்துக்கொண்ட இராணுவத்தினர் அடாவடித்தனமாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

அளவெட்டிச் சம்பவத்தின்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் ஊடகவியலாளர்களையும் சந்தித்த யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க இனிமேல் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாது. இராணுவத்தினர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்க மாட்டார்கள் என்று உறுதியளித்தார்.

ஆனால் இது பேச்சளவில் மட்டுமே தொடர்ந்தும் இராணுவத்தினரின் அட்டகாசங்கள் நாளாந்தம் இடம்பெறுகின்றன.

கிளிநொச்சியில் நாம் ஏற்பாடு செய்திருந்த பிரசாரக் கூட்டத்தில் மக்களை கலந்துகொள்ள விடாமல் பாடசாலைகளுக் குள் அடைத்து வைத்திருந்தனர். அதேவேளை அங்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட கூட்டணி ஆதரவாளர்கள் இராணுவத்தினரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர். எம்மால் சுதந்திரமாக தேர்தல் பிரசாரங்களை நடத்த முடியவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் ஜனாதிபதிக்கும் கூட அறிவித்துள்ளோம். எவ்விதமான பயனும் இல்லை.

தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என கருதுவது எப்போதும் சுதந்திரம் அதைமறுக்கவில்லை. ஆனால் சட்டத்தையும் ஒழுங்கையும் கைகளில் ஏந்திக் கொண்டு அடாவடித்தனமாக மக்களை மிரட்டி வெற்றிபெற முனைவதை கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

இந்த உண்மை நிலையை ஊடகங்கள் பக்கச் சார்பின்றி வெளிப்படையாக மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் தெளிவையும் ஏற்படுத்த ஊடகங்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் - என்றார். (த-2-14)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிருஸ்ணகுமாரி (குமாரி) இரவீந்திரன்



மானிப்பாய் சோதி வேம்படியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ண குமாரி நேற்று (06.07.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரவீந்திரனின் அன்பு மனைவியும், லதீபன், லதீபா, கிரிசாயினி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிட்டிணன் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பையா மற்றும் தங்கச்சியம்மா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி ளக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
அச்சுவேலி.

(5555)

தகவல்:
சகோதரர்கள்.

### கந்தையா கந்தசாமி

(முன்னாள் ஊழியர், ஈழநாடு)



நாவற்குழி, கைதடியைப் பிறப்பிடமாகவும் செபஸ்ரியார் வீதி, ஓட்டுமடத்தைப் வசிப்பிடமாகவும் தற்போது அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி கடந்த (04.07.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜரஞ்சினியின் அன்புக் கணவரும் ரமணன் (சுவிஸ்), வானதி (பிரான்ஸ்), வாசுகி (லண்டன்) காலஞ் சென்ற துஸ்யந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தி (சுவிஸ்), தில்லைநாதன் (பிரான்ஸ்), சிதம்பர லிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் துரை யப்பா, சுந்தரலிங்கம், சின்னத்தங்கம், நடராசா (கனடா), இராஜமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ல்க்சனா, காவியன், வர்ஷன், தர்சிகா, சஞ்சிகா, கஜானனன், துள்சிகா, கானகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 3 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(5547)

தகவல்:
இராஜரஞ்சினி
(மனைவி)

## இலங்கை மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான ஆஸ்திரேலிய கொள்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கேவின் ரூட் இதுவரை இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக மௌனம் காத்துவந்தார். ஆனால், இலங்கையின் கொலைக்களம் விவரணத் திரைப்படத்தைப் பார்த்த பின்னர் இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என கருத்துத் தெரிவித்துள்ளார் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

## மூத்த தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், பிரிட்டனின் கேம்பிறிச் பல்கலைக்கழகம் மற்றும் பில்லாந்து நோர்வே ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

அவரிடம் கற்காத கல்விமான்களும் அவரைத் தமது பேராசிரியராக கருதுவதுண்டு.

கடந்த 60 வருடங்களாகத் தமிழ்ப் பணியாற்றியவர். இலங்கைத் தமிழ் தொடர்பாக எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் நாடகத்துறையில் பல நூல்களையும் எழுதியவர். பல சர்வதேச நாடுகளில் 200 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் மூத்த கல்விமானான இவர் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பாண்டித்தியம் பெற்று வெளிநாடுகளிலும் இலங்கையிலும் பல விருதுகளைப் பெற்றுள்ளார். பேராசானின் இறுதிக்கிரியைகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். (அ)

## தேர்தல் பிரசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பல சிரேஷ்ட அமைச்சர்களும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர். இவர்கள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் தேர்தல் பிரசார நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக மக்கள் அண்மையில் மீளக் குடியமர்த்தப்பட்ட வலி.வடக்கு, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் செயற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை இந்த அமைச்சர்கள் ஆரம்பித்து வைப்பர். (த-15)

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோன் செனவிரத்ன, போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளமை குறித்தும் அதனால் இடம்பெறுகின்ற குற்றச்செயல்கள் குறித்தும் அதனைத் தடுப்பது குறித்தும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

மத்தட்டதித்த என்ற மதுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துள்ளார். அந்த செயற்பாடு தற்பொழுது வெற்றியளித்து வருகின்றது. இருந்த போதிலும் வெள்ளைநிற செம்மறி ஆடுகளுக்கு மத்தியிலும் கறுப்புநிற செம்மறி ஆடுகள் இருக்கத்தான் செய்யும் என்பது போன்று இந்நாட்டு சில அரசியல்வாதிகள் போதைப்பொருள் இறக்குமதி கொடுக்கல், வாங்கல் வர்த்தகத்தில் தொடர்புபட்டுள்ளனர். (ஒ-சி)

## சர்வதேச விசாரணைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போது கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைக்கு எதிரான சனல் -4 வீடியோ காட்சியால் இந்நாட்டு பிரஜைகள் அனைவருக்கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இந்த வீடியோ காட்சி பொய் என்று கூறிக்கொண்டிருக்காமல் அரசு அதற்கான சரியான ஆதாரத்தை முன்வைக்க வேண்டும். சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய் ஆதாரங்களை முன்வைத்து சனல் - 4க்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுக்காவிட்டால் இந்த வருட இறுதிக்குள் இலங்கை சர்வதேச விசாரணைக்குள் நிச்சயம் சிக்கிவிடும்.

அதைத் தடுக்க வேண்டுமென்றால் சரியான, ஆதாரத்தை முன்வைத்து சனல் - 4க்கு எதிராக பிரிட்டிஷ் நீதிமன்றில் இந்த வாரமே வழக்குத் தொடரவேண்டும்.

அப்படி இல்லாவிட்டால், சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக தரமான விசாரணைக்குழுஒன்றை அமைத்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

சனல் -4 வீடியோ காட்சியின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ எப்போதோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருப்பார். இது தொடர்பான ரோம் பிரகடனத்தில் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட மறுத்தமையாலேயே இன்று மஹிந்த இதில் இருந்து தப்பியுள்ளார். ரணிலுக்கு மஹிந்த பூப்போட்டு வணங்கவேண்டும்.

சனல் -4க்கு எதிராக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறி எமது நாட்டுத் தலைவர் வெளிநாடு போக முடியாமல் உள்நாட்டிலேயே சிறைக்கைதியாக இருக்கும் நிலைமை ஏற்பட்டால், அவர் சர்வதேச குற்றவாளி எனப் பெயரிடப்பட்டால் அது எமது நாட்டு மக்கள் அனைவருக்கும் அவமானம்.

எமது படையினர் ஒழுக்கமுள்ளவர்கள். அவர்களுள் சிலர் ஒழுக்கந் தவறி செயற்பட்டிருந்தால் விசாரணைக் குழுவின் ஊடாக அவர்களைக் கட்டுப்படுத்தி அவர்களை அரசு தண்டிக்க வேண்டும்- என்றார். (ஒ-சி)

## காணி விற்பனைக்கு

வடமராட்சிப் பகுதி, கட்டை வேலி, கோயிற்பற்று, வல்லிபுரக் குறிச்சி சோழியாவத்தை தெற்கில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0773043190

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு- 0770259825

## மரண அறிவித்தல்

### வேலாயுதம்பிள்ளை பேரின்பநாயகம் (சுருளி)



கல்லூரி வீதி, காங்கேசன்துறையைப் (தையிட்டியை) பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை பேரின்பநாயகம் நேற்று (06.07.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் லோகநாதன், குகதாஸ், செந்துரிச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் கட்டை, மல்லாகம்.

தகவல்:
மகேந்திரன் குடும்பம்
(ஆனந்தன்).

## எம்மினத்தின் நிலையை உணர்ந்து செயலாற்றும் வலி.வடக்கு வாழ்.மக்களே!



வலி.வடக்கு பிரதேச சபை

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

## லயன் சோ.சுகிர்தன்

உறுதியான இளைய தலைமுறைக்கும் சேவைக்குமாக வீட்டுக்கு ✕ இட்டு இலக்கம் 27 இக்கு ✕ இட்டு வெற்றியடையச் செய்வோம்.

"தமிழ்த் தேசியம் நிலைக்க இளைய தலைமுறையை ஆதரிப்பீர்"

உரிமைக்கு: வீடு ✕

சேவைக்கு: 27

வடமாகாண கணக்காய்வு அலுவலக நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர்கோயில் பகுதியிலும் விரைவில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 7

நீண்ட காலத்தின் பின்னர் நாகர்கோயில் பிரதேசத்தின் சில பகுதிகள் மற்றும் தனங்கிளப்புப் பிரதேசங்களில் மக்கள் விரைவில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதிகளை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க வழங்கியுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

யாழ்.குடாநாட்டின் பல பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தவாரம் வடமராட்சி கிழக்கின் 3 கிராம சேவகர் பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதன் தொடர்ச்சியாகவே நாகர்கோயில் மற்றும் தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் படைத்தரப்பின் அனுமதியுடன் மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நாகர்கோயிலின் மேற்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களிலேயே இந்த மீள் குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாகர் கோயில் மேற்கில் 158 குடும்பங்களைச் சேர்ந்த 557 பேரும், நாகர் கோயில் தெற்கில் 92 குடும்பங்களைச் சேர்ந்த 369 பேரும் மீள்குடியமர்வதற்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் தனங்கிளப்பில் 246 குடும்பங்களைச் சேர்ந்த 850 பேர் மீள்குடியமர்வதற்குப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் - என்றார். (த-14-15)

# குடும்பப் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

அச்சுவேலி நாவற்காட்டுப் பகுதியில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரின் சடலம் வீட்டில் தூங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ரவீந்திரன் கிருஷ்ணகுமாரி (வயது-36) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா நலன்புரி முகாமில் இருந்து வந்து மீளக் குடியேறிய இந்தப் பெண்ணின் கணவர் அண்மையிலேயே விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவ இடத்தில் மல்லாகம் நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் கையில் காயம்

தென்மராட்சி, ஜூலை 7

கிடங்கு வெட்டிய போது மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்த்தர் ஒருவர் கையில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணிக்கு மிருசுவில், கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை குணரத்தினம் (வயது-45) என்பவரே காயமடைந்தவராவார்.

சம்பவத்தில் குறித்த நபரின் கையில் மூன்று விரல்கள் சிதறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-10-78-207)

# எழுத்துமூலமான ஆவணத்தைச் சமர்ப்பிக்க கூட்டமைப்பிடம் அவகாசம் கோரியது அரசு

கொழும்பு, ஜூலை 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளுக்கு எழுத்துமூலம் பதிலளிப்பதற்கு அரசு மேலும் கால அவகாசத்தைக் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய பேச்சுக்களின் போது கூட்டமைப்பினருக்கு எழுத்துமூலமான ஆவணத்தை சமர்ப்பிக்கவில்லை என்றும், எட்டாம் கட்ட பேச்சுக்களின் போது பேசப்பட்ட விடயங்களையே மீளாய்வு செய்தோம் என்றும் அரசு - கூட்டமைப்புக்கிடையிலான பேச்சுக்களில் அங்கம் வகிப்பவரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று 'உதயனு'க்கு தெரிவித்தார்.

நேற்றைய பேச்சும் எந்த வித முன்னேற்றத்தையும் எட்டாத நிலையிலேயே முடிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுக்களின்போது, கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு எழுத்துமூலம் பதிலளிக்கப்படும் என 7ஆம் கட்ட பேச்சுக்களின்போது அரசு உறுதியளித்திருந்தது.

எனினும் உறுதியளித்தபடி அரசு எந்தவொரு ஆவணத்தையும் வழங்கவில்லை என கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், அரசு–தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான ஒன்பதாம் கட்ட பேச்சுக்கள் நேற்று நாடாளுமன்றத்திலுள்ள நாடாளுமன்றக் குழுக்களின் அறையில் மாலை 3 மணிமுதல் 4 மணிவரை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர். இரா.சம்பந்தன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், அரச தரப்பில் அமைச்சர்களான ஜீ.எல்.பிரிஸ், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சஜின் டி வாஸ் குணவர்தன, ரஜீவ விஜேசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அரசு - கூட்டமைப்புக்களிடையிலான 10ஆம் கட்ட பேச்சுக்கள் அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறும் என்று அமைச்சர் நிமல் சிறிப்பால டி சில்வா தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சாமி கந்தையா- சதாசிவம்

தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும், 15, ராஜசிங்கா றோட், கொழும்பு-06 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சாமி கந்தையா- சதாசிவம் நேற்று (06.07.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15, ராஜசிங்கா றோட்,*
*கொழும்பு-06*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இடம்பெயர்வினால் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளரின், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்பட்ட விடுவிப்புக் கடிதத்துடன் அன்றைய தினம் வள்ளிபுனம் அ.த.க பாடசாலைக்கு மீள் குடியேற்ற ஆயத்தங்களுடன் சமுகம் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார். (ஒ-313)

# கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற விபத்தில் இரு மாணவிகள் காயம்

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி, ஏ9 வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சென். திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகள் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் டிப்போ சந்திக்கு அருகில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவியை 'டிப்பர்' வாகனம் பின்புறமாக மோதியது.

இதில் ஆனந்தபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ரவீந்திரராஜா கிதுஜா (வயது-16) என்ற மாணவி சிறுகாயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சற்றுநேர இடைவெளியில் கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் பாடாசலை சென்று கொண்டிருந்த மற்றொரு மாணவியையும் டிப்பர் வாகனம் மோதியது.

இதில் ஜெயந்திநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த இராஜநாயகம் துஸ்யந்தி (வயது-17) என்ற மாணவி தலையில் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி மாணவியை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற டிப்பர் வாகனத்தை உமையாள்புரம் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்த பொலிஸார் சாரதியைத் தடுத்து வைத்துள்ளனர். இன்று சாரதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-10-06-405)


1)Uk London Visa (மட்டுப்படுத்தப்பட்ட 10 பேருக்கு மாத்திரம்)

I. UK - London இல் உங்களது உறவுகள் இருக்கின்றனரா?
II. நீங்கள் தனி நபர் அல்லது கூட்டு வியாபாரப் பதிவுச் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா?
III. நீங்கள் புதுமணத் தம்பதியினரா?
IV. நீங்கள் அரச உத்தியோகத்தரா?
V. ஆபத்தான நோய் வாய்ப்பட்டவர்கள் உங்களது உறவுகளில் இருக்கின்றனரா?

கவலையை விடுங்கள் ஒருமுறை நேரில் சந்தியுங்கள் (7, 8, 9 ஆம் திகதிகளில் - வியாழன், வெள்ளி, சனி)

Hot Line: 021 222 0555, 0771022984, 0777887181

2)Study in UK and Poland

விசேட கருத்தரங்கு ஞாயிறு முற்பகல் 11 மணி (10.07.2011)
2011 இல் Visa பெற்ற மாணவர்களில் சிலர்



Thurairaja (Achchuvely) | K. Monohanth (Trinco) | Sharmila (Jaffna) | S. Srivasugi (Valvetithurai) | Jeevitha (Colombo -12) | Thanushya Jaffna.

Hot Line: 021 222 0555, 0771022984, 0777887181
Branch - SEC Visa Tech, 620, K.K.S. Road, Jaffna.
நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக



வேலையாள் தேவை

பலாலி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளை நிறுவனத்துக்கு பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை (Clerk) ஆரம்ப சம்பளம் 8,000 To 10,000/= வரை. திறமைக்கு ஏற்றவாறு பின்னர் வழங்கப்படும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருந்தால் விரும்பத்தக்கது. தகைமை G.C.E. A/L Marketing துறையில் முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0772359535, 021 222 4749



யாழ் மாவட்டத்தில் முதல் முறையாக | சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி

Diploma in Mobile Phone Flashing & Unlocking
(Nokia, Samsung, Ericsson, LG & China Mobiles)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் Flashing & Unlocking செய்தல்
(Mobile Phone Software Repair)

Course Fees :- Rs.10000/= Only
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT Campus (Pvt) Ltd
No 83,Palaly Road,Kantharmadam,Jaffna
T.P. - 021 321 6433 / 0777 110 862
(நெல்லியடியிலும் ஆரம்பமாகவுள்ளது !!!)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org